எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்கள் மேம்பாட்டு இதழ்

பன்மொழி மின்னிதழ்

மலர்-1 இதழ்- 10 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஜூன் 2025

வராகி பூஜையும் விரதங்களும்



காடுறை கிடாள் கொற்றவை

கட்டுரை

மாறிவரும் எழுத்துலகம்
- முனைவர் த.ஜான்சிபால்ராஜ்

குடும்ப வன்முறைக்குள்
அடங்குதலும் எதிர்த்தலும்
- முனைவர் ஜ . ஜான்சிராணி

திருமதி. இராஜி ராமச்சந்திரன்
அட்லாண்டா!
- மேனகா நரேஷ்

தமிழர்களின் இயற்கைத் தெய்வம்
- பாமயன்

வராகி பூஜையும் விரதங்களும்
- முனைவர் செ. ராஜேஸ்வரி

கதை

கொசுறு
- சாந்தினி பீ

கடற்கரையில் ஒரு புதுவித ஜோடி
- ஆர்.சூடாமணி

அழுமூஞ்சி இளவரசி
- முனைவர் மெய் சித்ரா

நோக்கியா மொபைல் 11005
- இரா. சைலஜா சக்தி

Aranyani
- *Vineni*

கவிதை

இருள் அறியா
- இ. சக்தி சுரேஷ்

ஹைக்கூ கவிதைகள்
- *Dr* ஜலீலா முஸம்மில்

ஸ்ரீ ராதா (இந்தி)
- வசந்ததீபன்

யாருமில்லை அங்கே
- சத்யபிரபா

மேலும் பல....

மலர்-1 இதழ்- 10 ஜூன் 2025

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

1. இருள் அறியாக் குழந்தை — 2
- இ. சக்தி சுரேஷ்
2. ஆனந்த விகடன் காரியாலயம் — 3
- திருமதி. பட்டம்மாள் வாசன்
3. கவிதை — 4
- அழகைஹெருன்நிஸா
4. நோக்கியா மொபைல் 1100 — 5
- இரா. சைலஜா சக்தி
5. மாறிவரும் எழுத்துலகம் — 12
- முனைவர் த.ஜான்சிபால்ராஜ்
6. கொசுறு — 15
- சாந்தினி பீ
7. பசியின் பயணம் — 16
- சுகன்யா சம்பத்குமார்
8. வார்த்தைகள் தூர்ந்து போன — 19
- கவிஞர் வர்த்தினி பர்வதா, மதுரை
9. முனைவர் ராஜேஸ்வரி சாட்டர்ஜி — 20
- மேனகா நரேஷ், நியூஜெர்சி
10. வேலி — 28
- ராஜம் கிருஷ்ணன்
11. ஊர்மிளா — 31
- இரா. சைலஜா சக்தி
12. உங்களில் ஒருத்தி — 33
- மகாலிங்கம்
13. அழுமூஞ்சி இளவரசி — 34
- முனைவர் மெய் சித்ரா
14. ஹைக்கூ கவிதைகள் — 41
- Dr ஜலீலா முஸம்மில், ஸ்ரீலங்கா
15. தொண்டாற்றி இன்பமாக வாழ்க! — 42
- முனைவர் இல. ஜெயந்தி
16. கடற்கரையில் ஒரு புதுவித ஜோடி — 48
- ஆர்.சூடாமணி
17. யாருமில்லை அங்கே — 56
- சத்யபிரபா
18. குடும்ப வன்முறைக்குள் அடங்குதலும் எதிர்த்தலும் — 57
- முனைவர் ஜ. ஜான்சிராணி
19. வராகி பூஜையும் விரதங்களும் — 60
முனைவர் செ. ராஜேஸ்வரி
20. திருமதி. இராஜி ராமச்சந்திரன், அட்லாண்டா — 65
- மேனகா நரேஷ், நியூஜெர்சி)
21. ஸ்ரீ ராதா — 70
- வசந்ததீபன்
22. ARANYANI — 71
- VIJENI
23. பழமொழிகள் — 78
24. கிட்டு ராணி சென்னம்மா — 81
- முனைவர் வி ஆனந்தி
25. தமிழர்களின் இயற்கைத் தெய்வம் — 88
- பாமயன்

இருள் அறியாக் குழந்தை

இரவின் இருள் அறியா குழந்தை
அன்னை முகத்தில்
தேடுகிறது வெளிச்சத்தை
அவளோ வெளிச்சம் அண்டாத
இருளை தேடுகிறாள்
பலமுறை பார்த்த
இரவாய் இருந்தாலும்
வெளிச்சம் அண்டாத
இருளையே நாடுகிறாள்
போலிகளைச் சுமக்கும்
வெளிச்சம் கண்களைக்
கூசச் செய்கிறது.
இருளில் சூழ்திருக்கும்
உண்மையை ஏற்க முடியாமல்
கசப்பை இருட்டில் கரைக்கிறாள்
இருள் அறியா குழந்தைக்காக
இருட்டில் உழைக்கிறாள்
எந்த சூடும் தணிந்து போகும்
சில காலங்களில்
வெளிச்சத்தில் வேசம் வேண்டாம்
இவ(ரு)ளுக்கான கூலியை கொடுங்கள்
அவளது இரவு தானாய் விடியும்!



- இ. சக்தி சுரேஷ்

ஆனந்த விகடன் காரியாலயம்

திருமதி. பட்டம்மாள் வாசன்

அக்காலத்தில் ஆனந்த விகடன் காரியாலயம் ஸ்டான்லிக்கு அருகே ப்ராட்வேயில்தான் இருந்தது. இதைப் பற்றி திருமதி பட்டம்மாள் வாசன் நினைவு கூர்கிறார்:

ஒரு நாள் லக்ஷ்மி ஃபோன் பண்ணினா. "நான் கதையெல்லாம் எழுதுவேன், உங்கள் கணவரைப் பார்த்துப் பேச வேண்டும், உதவி செய்வீர்களா?" நீ ஆஃபீசுக்குப் போனால் அவரைப் பார்க்கலாம் என்றேன். அவரிடம் "டாக்டருக்குப் படிக்க வேண்டும், எங்களுக்கு இப்போது நிதி வசதி சரியாயில்லை. என்னுடைய கதைகள் சிலதைக் கொண்டு தருகிறேன். பிரசுரித்துப் பண உதவி செய்தால் சந்தோஷப்படுவேன்" என்று கேட்டிருக்கிறாள். நல்ல கதைகள் என்றால் பிரசுரிப்போம் என்று சொன்ன வாசன், பின்னர் கதைகள் தரமாக இருக்கவே பிரசுரம் செய்து உதவினார்.

டாக்டர் படிப்பு முடித்ததும் லக்ஷ்மியின் குடும்பம் சென்னையிலேயே குடியேறிற்று. தங்கைகள் கல்யாணம் பொறுப்பேற்று நடத்தி முடித்தார். 1955ம் வருஷம் தானும் கண்ணபிரான் என்ற தென்னாப்பிரிக்கத் தமிழரை திருமணம் செய்து கொண்டார். சென்னையிலுள்ள அடையாறு தியோசாஃபிகல் சொசைட்டியில்தான் இந்தத் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பின் லக்ஷ்மி இருபத்திஇரண்டு வருஷங்கள் தென்னாப்பிரிக்காவில் தங்கியிருந்தார். மகப்பேறு வைத்தியராகப் பணியாற்றினார். இத்தம்பதிகளுக்கு மகேஸ்வரன் என்ற ஒரு பிள்ளை.

1966ம் வருஷம் கண்ணபிரான் இறந்தது லக்ஷ்மியை மிகவும் பாதித்தது. இருப்பினும் அங்கேயே தன் வாழ்க்கையைத் தொடர்ந்த லக்ஷ்மி 1977ம் வருஷம் சென்னை திரும்பினார்.

என்ன காரணமாகவோ அதன் பிறகு அவர் தொடர்ந்து எழுதவில்லை. மகேஸ்வரனையும் மருத்துவப் படிப்பில் சேர்த்து அவரையும் மருத்துவராக்கினார்.

பதினான்கு வயதிலேயே எழுத ஆரம்பித்த லக்ஷ்மி நாற்பத்திஐந்து ஆண்டுகள் படைப்பிலக்கியம் செய்து ஆயிரத்துக்கும் மேலான சிறுகதைகள், நூற்றுக்கும் மேலான நாவல்கள் வெளியிட்டுள்ளார். மருத்துவம், மகப்பேறு போன்ற பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார். இவரது முதல் நாவல் பவானி (1940). பெண் மனம் (1946), மிதிலா விலாஸ் என்ற இரு நாவல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசையும், ஒரு காவிரியைப் போல 1984ல் சாகித்திய அகாதெமி விருதையும் பெற்றன. காஞ்சனையின் கனவு, பெண் மனம் என்ற நாவல்கள் காஞ்சனா, இருவர் உள்ளம் என்ற தலைப்புகளுடன் மூன்று தென்மொழிகளில் திரைப் படங்களாயின. இருவர் உள்ளம் படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியது முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி.

லக்ஷ்மியின் மறைவு 1987ம் வருஷம் ஜனவரி மாதம் ஏழாம் தேதி சென்னையில். அவரது மறைவு குறித்து ஆனந்த விகடனில் (25-1-1987 – மீள் பதிப்பு ஆனந்த விகடன் 11-3-2009) பட்டம்மாள் வாசன் நினைவு கூர்வது:

வாழ்க்கையில் நிறையச் சிரமப்பட்டிருந்தாலும், அவ பேசறப்போ சிரிச்சுண்டேதான் பேசுவா. சாகித்ய அகாடமி பரிசு வாங்கியதும் என்னைத் தேடி வந்து சொன்னது எனக்குப் பெருமையா இருந்தது. சமீபத்திலே எங்க வீட்டுக் கல்யாணத்துக்கு வந்திருந்தபோது 'என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணப் போறேன்' என்று ரொம்ப சந்தோஷமாச் சொன்னாள். அவ சாகும்போது, அந்த ஒரே பிள்ளையும் துரதிர்ஷ்டவசமாகிட்டக்க இல்லாம எங்கேயோ இங்கிலாந்திலேயா இருக்கணும்னு நினைச்சபோது என் மனசுக்கு கஷ்டமாயிருந்தது."

முகநூல் பதிவு நன்றி: சிலிகான் ஷெல்ப்

பெண்ணின் ,
வாசமறிந்த இந்த தேசத்தில்
அவளைத் தவிர
எதுவுமே பெருசாய் படாது
அவள் ,
கண்களின் ஓரத்தில்
உன்னை குடைபிடிக்கும் போதும்
அவள் அழகின் போதையில்
நீ
தொலைந்திடும் போதும்
அவள்
அன்பின் அரவணைப்பில்
நீ
தவித்திடும் போதும்
அவள்
சிந்தனையில்
வாழ்வை நகர்த்திடும் போதும்
அவள்
காதல் மொழிகளில்
மயங்கிடும் போதும்
உனதுயிரை
உசுராய் அவள் சுமந்திடும் போதும்
அவளைத்தவிர
எதுவுமே
பெருசாய் படாது இந்த தேசத்தில்

– அழகைஹெருன்நிஸா

நோக்கியா மொபைல் 1100

இரா. சைலஜா சக்தி

தினேஷ் வீட்டிற்குள் நுழைந்ததும் குளித்துவிட்டு மொபைலில் ஆழ்ந்தான். ரம்யா காபி கொண்டு வந்து கொடுத்தாள். அவளின் முகத்தைக் கூடப் பார்க்காமல் காபியை வாங்கிக் குடித்தான்.

"நைட் என்ன டிபன் செய்யட்டும்?" என்று கேட்டாள்.

"ம்ம்.... "

"என்னங்க உங்களைத்தான்..."

"ம்ம்... என்ன கேட்ட?"

"நைட் டிபன்..."

"எதுன்னாலும் ஓகே"

"இன்னிக்குப் பக்கத்து வீட்டு சதாசிவம் சார் கீழே விழுந்துட்டார்"

"ம்ம்...."

"கால் எலும்பு முறிஞ்சிடுச்சாம் மாவுக்கட்டு போட்டிருக்காங்க. இரண்டு வாரத்துக்குக் காலை அசைக்கக் கூடாதாம்"

"ம்ம்..."

அவன் உம் கொட்டுவதை எரிச்சலுடன் பார்த்தாள்.

"அந்த ஆடிட்டரோட மகள் கல்யாணமாகிப் போன மூணு மாசத்துலயே அம்மா வீட்டுக்குத் திரும்பி வந்துட்டாள். மாப்பிள்ளை வீட்டுல ஏதோ பிரச்சினையாம்"

"ம்ம்..."

"மாடி பிளாட்டில் உள்ள கழிவு நீர் நம்ம வீட்டு பாத்திரம் கழுவுற சிங்க்குக்கு அடியில வந்து வடியுது. சமையலறை முழுக்க ஒரே தண்ணி. எல்லாத்தையும் துடைச்சு எடுத்தேன். ரொம்ப வாடை அடிக்குது. நம்ம பிளாட் செகரட்டரிகிட்ட சொல்லி சரி பண்ணச் சொல்லுங்க"

"ம்ம்..."

"எங்க அப்பாவுக்கு அடிக்கடி உடம்புக்கு முடியாமப் போகுதாம். இதயத்துல ஏதாவது பிரச்சனை இருக்குமோன்னு அம்மா கவலைப்படுறாங்க"

"ம்ம்..."

"ப்ச்....நான் தற்கொலை பண்ணிக்கலாம்னு இருக்கேன்"

"ம்ம்..."

அதற்குப் பிறகு ரம்யா எதுவும் பேசவில்லை.

சப்பாத்தியும் குருமாவும் தயார்செய்து டைனிங் டேபிளில் வைத்துவிட்டுக் காத்திருந்தாள். மணி பத்தாகியும் தினேஷ் மொபைலில் இருந்து வெளியே வரவில்லை. கோபத்தில் சாப்பிடாமல் படுத்தவள் சிறிது நேரத்தில் அப்படியே உறங்கிப் போனாள். திடீரென கண்விழித்து டைனிங் டேபிளைப் பார்த்தாள். தினேஷ் மொபைலைப் பார்த்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மணி என்னவாக இருக்கும் என்று கடிகாரத்தைப் பார்த்தவளுக்கு அதிர்ச்சி. கடிகாரம் இரண்டு மணியைக் காட்டியது.

மறுநாள் காலை தினேஷ் வழக்கம்போல் எழுந்து மொபைலைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு அலுவலகத்திற்குக் கிளம்பிச் சென்றான். மதியம் மூன்று மணிக்கு அவனுக்கு ஒரு போன் வந்தது. அலுவலகத்திலிருந்து பதறியடித்துக் கொண்டு கிளம்பியவன், நேரே ஒரு காபி ஷாப்பிற்குள் நுழைந்தான். அங்கே ரம்யாவும் கிருஷ்ணமூர்த்தியும் ஒரு டேபிளில் அவனுக்காகக் காத்திருந்தனர்.

தினேஷைக் கண்டதும் "வாப்பா தினேஷ்" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

குழப்பமாய்த் தலையசைத்துவிட்டு அமர்ந்தான்.

"நேரா விஷயத்துக்கு வரேன். ரம்யா இன்னிக்கு என்னோட அலுவலகத்துக்கு வந்து எப்படியாவது விவாகரத்து வாங்கிக் கொடுங்கன்னு பிடிவாதமாகக் கேட்டாள். அதுக்குத்தான் உன்னை வரச் சொன்னேன்" என்று கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

"விவாகரத்தா?" என்று தினேஷ் அதிர்ச்சியாகக் கேட்டான்.

அதற்குள் ரம்யா கிருஷ்ணமூர்த்தியிடம் கோபமாகக் கூறினாள்.

"அங்கிள் நீங்க அப்பாவோட நண்பர்னுதான் உங்ககிட்ட வந்து உதவி கேட்டேன். இல்லன்னா வேற வக்கீல் பாத்திருக்க மாட்டேனா?"

தினேஷ் எதுவும் புரியாமல் திகைத்தான்.

"இப்ப என்னம்மா உன் பிரச்சினை?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

"இவர் மொபைலுக்கு அடிமையாகி விட்டார் அங்கிள். சுத்தி நடக்கிற எதிலுமே கவனம் இல்லை. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துட்டேன். இப்ப என்னால முடியலை"

"அதுக்காக விவாகரத்தா?. ரம்யா இதெல்லாம் உனக்கே கொஞ்சம் ஓவரா இல்லையா?" என்று எரிச்சலுடன் தினேஷ் கேட்டான்.

"நானும் இதைத்தாம்ப்பா காலையில் இருந்து ரம்யாவிடம் சொல்லிக்கிட்டு இருக்கேன். ஆனா இவ கேக்கலை" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

"அவர் பண்றதை விட இதெல்லாம் அதிகமில்லை" என்றாள்.

"ப்ச். இப்ப என்ன சார் பண்றது?" என்று தினேஷ் தலையில் கை வைத்தான்.

"இவன் மொபைல் போன் பயன்படுத்துவதைக் குறைச்சிட்டா உன்னோட விவாகரத்து முடிவை மாத்திப்பியா ரம்யா?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

"நிச்சயமா மாத்திக்கிறேன். ஆனா அது அவரால முடியாது"

"என்ன தினேஷ் இதை உன்னால செய்ய முடியுமா?" என்று அவர் கேட்டதற்குச் சிறிது நேரம் யோசித்தவன் "சரி சார் சம்மதிக்கிறேன்" என்றான்.

"அப்புறம் என்னம்மா இன்னையில இருந்து ஒரு பத்து நாளைக்கு தினேஷ் வீட்டுக்கு வந்ததும் மொபைலைக் கையில் எடுக்காமல் இருப்பான். அதற்குப் பிறகு விவாகரத்து பற்றி பேசலாம். போதுமா?" என்றார்.

ரம்யா சரியென்று தலையாட்டினாள்.

வீட்டிற்கு வந்ததும் ரம்யாவுக்கு முகமெல்லாம் சிரிப்பு.

"நைட் என்ன டிபன் செய்யட்டும்?" என்று உற்சாகமாகக் கேட்டாள்.

தினேஷ் அவளைக் கோபத்துடன் முறைத்தான். பதில் கூறாமல் ரிமோட்டைக் கையிலெடுத்துக் கொண்டு டி.வி. பார்க்க உட்கார்ந்தான். ரம்யா ரவா உப்புமாவைத் தயார் செய்துவிட்டுச் சாப்பிட அழைத்தாள். காதில் வாங்காதது போல் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான்.

ரம்யா நிம்மதியாகச் சாப்பிட்டு விட்டுத் தூங்கினாள். இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல் தினேஷுக்குப் பசிக்க ஆரம்பித்தது. வேறு வழியில்லாமல் கோபத்தை ஒதுக்கி வைத்துவிட்டு உப்புமாவைச் சாப்பிட ஆரம்பித்தான். அவனுக்குப் பிடித்ததுபோல் அதில் நெய் விட்டிருந்தாள். முந்திரிப் பருப்பு, தேங்காய் எல்லாம் போட்டுக் குழைவாகக் கிண்டியிருந்தாள். மிகவும் சுவையாக இருந்ததால் அதிகமாகச் சாப்பிட்டான். பிறகு தூக்கம் வரவே டி.வியை அணைத்துவிட்டுப் படுத்தான்.

மறுநாள் ரம்யா காபி கொடுக்கும்போது "நான் உன்மேல கோவமாகத்தான் இருக்கேன். ஆனாலும் நேத்து ராத்திரி உப்புமா ரொம்ப நல்லா இருந்தது" என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ரம்யா சிரித்தாள்.

"இதுக்கென்ன சிரிப்பு வேண்டி இருக்கு?. நெய், முந்திரிப் பருப்பு எல்லாம் போட்டு உப்புமா சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. அதான் சொன்னேன்"

"எப்போதும் உப்புமா இப்படித்தான் கிண்டுறேன். நீங்க நேத்துதான் கவனிச்சிருக்கீங்க. மற்ற நாள் எல்லாம் மொபைலைப் பார்த்துட்டு தட்டுல என்ன இருக்குன்னே தெரியாம கோழி முழுங்குற மாதிரி லபக் லபக்குன்னு உள்ள தள்ளுவீங்க" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

இனி இவளிடம் வாயைக் கொடுக்கக் கூடாது என்று முடிவெடுத்தவன் பழக்கதோஷத்தில் மொபைலை எடுக்கப் போனான். பிறகுதான் விவாகரத்து பஞ்சாயத்து நினைவுக்கு வந்தது. சரி வாக்கிங் போகலாம் என்று நினைத்தவன் அடுத்த பிளாட்டிலிருக்கும் சதாசிவம் சார் வீட்டிற்குச் சென்று காலிங் பெல்லை அழுத்தினான். அவர் மனைவி வந்து கதவைத் திறந்தாள்.

அவளிடம் "வாக்கிங் போகலாம்னு இருக்கேன். சாரைக் கொஞ்சம் வரச் சொல்றீங்களா?" என்று கேட்டான்.

அவள் தினேஷை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "அவருக்குக் கால் உடைஞ்சு மாவுக்கட்டு போட்டிருக்கு. ரம்யா உங்ககிட்ட சொல்லலையா?" என்று கேட்டாள்.

நேற்று மொபைல் பார்த்துக் கொண்டிருக்கும் போது ரம்யா சதாசிவம் சார் பற்றி ஏதோ சொன்னது நினைவுக்கு வந்தது. "ஓ... இதைத்தான் சொன்னாளா" என்று நினைத்தவன் "ரம்யா சொன்னாள். நான் மறந்துட்டேன். சாரி.." என்று அசடு வழிந்தான்.

"உள்ளே வரலியா?" என்று அவள் கேட்ட பிறகு தான் சதாசிவத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு வந்தது. அவரைப் பார்த்து சிறிது நேரம் பேசிவிட்டு வீட்டிற்குத் திரும்பினான்.

ரம்யா அவனிடம் "என்ன பல்பு வாங்குனீங்களா?" என்று கேட்டாள்.

உனக்கெப்படித் தெரியும் என்பது போல் முழித்தான்.

"சதாசிவம் சாரிடம் நீங்க பேசிக் கொண்டு இருக்கும் போது அவர் மனைவி இங்க வந்தாங்க. நீங்க அவரை வாக்கிங் போகக் கூப்பிட்ட கூத்தைச் சொல்லிப் புலம்பிட்டுப் போனாங்க" என்று ரம்யா சொல்லவும் இதற்கு மேல் வீட்டில் இருப்பது நல்லதல்ல என்று நினைத்தவன் வேக வேகமாக ரெடியாகி ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே அலுவலத்திற்குச் சென்றுவிட்டான். மொபைலைப் பயன்படுத்தாமல் என்னவோ போல் இருந்தது. அவனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. அரை நாள் லீவு சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தான். அப்போது ரம்யா சமையலறைக்குள் புகுந்த கழிவு நீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். நாற்றம் குடலைப் புரட்டியது. மூக்கைப் பிடித்துக் கொண்டு "செகரெட்டரியிடம் புகார் பண்றதுக்கென்ன?" என்றான்.

"அந்தாளு ஒரு வழிசல் பேர்வழி. மறந்துட்டேன்னு சொல்லி அலைய விடுறார்" என்று ரம்யா கூறியதும் தினேஷுக்குக் கோபம் உச்சிக்கு ஏறியது. நேரே அபார்ட்மெண்ட் செகரெட்டரியிடம் போய் "என்ன சார்.. என் மனைவி புகார் பண்ண வந்தா ஏதேதோ சொல்லி சமாளிக்கிறீங்க போல?" என்று கத்தினான்.

அவன் முகத்தையும், கோபத்தையும் பார்த்தவர் பயந்து போய், "சாரி சார்...இப்போ ஆளை அனுப்பிடுறேன்" என்று பவ்யமாகக் கூறினார்.

சிறிது நேரத்தில் ஆட்கள் வந்தனர். விரைந்து வேலை பார்த்தனர். இரண்டு மணி நேரத்தில் பைப் லைன் பிரச்சினை சரியாகிவிட்டது. இருந்தும் தினேஷ் முகம் இறுக்கமாகவே இருந்தது.

ரம்யா "என்னாச்சு?" என்றாள்.

அவன் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் ஒரு பெண் உள்ளே வந்து ரம்யாவிடம் இனிப்பைக் கொடுத்துவிட்டு "அக்கா எங்க குடும்பத்தில் உள்ள பிரச்சனை சரியாகி விட்டது. அம்மா கொடுக்கச் சொன்னாங்க" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

"என்ன விஷயம்?" என்று தினேஷ் கேட்டான்.

"ஆடிட்டர் பொண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டில் ஏதோ பிரச்சனையாம். அதான் இப்ப தீர்ந்திடுச்சுன்னு அவங்க அம்மா ஸ்வீட் கொடுத்து விட்டுருக்காங்க"

"ஓஹோ. இந்தப் பொண்ணுக்கா பிரச்சனை?"

"சுத்தம். இது அவளோட தங்கச்சி"

"அப்படியா?"

"என்ன அப்படியா?. ஆடிட்டர் பொண்ணோட கல்யாண வரவேற்புக்கு நம்ம ரெண்டு பேரும் போனோம். மறுநாள் நீங்க ஆஃபீசுக்கு லீவு போட்டீங்க. நாம கல்யாணத்துக்கும் போயிட்டு வந்தோம்"

"என்னது நாம அவங்க வீட்டுக் கல்யாணத்துக்குப் போனோமா?"

"ஆமா. அங்க போயும் மொபைலைத்தான் நோண்டிக்கிட்டு இருந்தீங்க. பொண்ணு மாப்பிள்ளை முகத்தை எங்கே பாத்தீங்க?"

"போச்சுடா" என்று முனகியவன் மெல்ல அங்கிருந்து நழுவினான். அதன் பிறகு தூங்கும் வரை ரம்யாவிடம் எந்த பேச்சும் கொடுக்காமல் தப்பித்தான். மறுநாள் காலை அலுவலகத்திற்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். பதினோரு மணிக்கு மேல் அவனுக்கு லேசாகத் தலை வலிப்பது போல் இருந்தது. சூடாக டீ குடிக்கலாம் என்று தோன்றியது. கேன்டீனுக்குள் நுழைந்தபோது வேணி அக்கா பரபரப்பாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஒரு வடையும் டீயும் வேணும் அக்கா" என்று சொல்லிவிட்டு வந்து அமர்ந்தான்.

சில நிமிடங்களில் வேணி அக்கா வடை, டீயுடன் வந்தாள். எதுவும் பேசாமல் மேசையில் வைத்துவிட்டு நகர்ந்தாள். அப்போது அவள் வலது கையில் பெரிய தழும்பு இருப்பதைக் கவனித்தான்.

"கையில் என்ன தழும்பு அக்கா என்னாச்சு?" என்று அப்பாவியாகக் கேட்டான். உடனே அவள் திகைத்தாள். ஏதாவது கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டோமோ என முழித்தான். பின்பு வேணி அக்கா வருத்தமாகக் கூறினாள்.

"போன வாரம் வடை போடும் போது கொதிக்கிற எண்ணெய் என் கையில் கொட்டி ஆஃபீசே ரணகளமாயிருச்சு தம்பி. எல்லாரும் வந்து என்னை விசாரிச்சாங்க. நீங்க மட்டுந்தான் என்னை ஒரு வார்த்தை கூடக் கேக்கலை"

தினேஷ் திரு திருவென்று விழித்தான். ஆஃபீஸ் கேன்டீனில் கூட தன் மானம் கப்பலேறுவதை உணர்ந்தான். எதையோ சொல்லி வேணி அக்காவைச் சமாளித்துவிட்டு பாதி வடை டீயுடன் தன் இருக்கைக்குத் திரும்பினான்.

மாலை அவன் வீட்டிற்கு வந்ததும் ரம்யா வழக்கம்போல் காபி போட சமையலறைக்குச் சென்றாள்.

"ரம்யா காபி வேண்டாம். நீ கிளம்பு நாம வெளியே போறோம்" என்றான்.

"எங்கே?" என்று ரம்யா கேட்டாள்.

"ஹோட்டலுக்கு"

"நீங்க நல்லா இருக்கீங்கல்ல. உடம்புக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லையே?" என்று கேட்டாள்.

"விளையாடாதே ரம்யா. நிஜமாத்தான் சொல்றேன்"

அதன் பிறகு ரம்யா கிளம்பிவிட்டாள். அவளை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

"ரெண்டு நாண் ஒரு பன்னீர் பட்டர் மசாலா" என்று ஆர்டர் செய்தான்.

விவாகரத்துப் பிரச்சனையை முடிக்கவே தனக்குப் பிடித்த நாணை ஆர்டர் செய்து ஐஸ் வைக்கப் பார்க்கிறான் என்று ரம்யா நினைத்தாள். அதனால் அமைதியாகச் சாப்பிட ஆரம்பித்தாள். அதைக் கண்டதும் தினேஷ் தயக்கத்துடன் பேச ஆரம்பித்தான்.

"ஒரு நிமிஷம் ரம்யா"

"என்ன?"

"நீ விவாகரத்து என்று சொன்னதும் தேவையில்லாம பிரச்சனை பண்றன்னு நினைச்சேன். ஆனா நான் எந்த அளவுக்கு இந்த உலகத்தை விட்டு விலகி இருக்கேன்னு இப்பதான் புரியுது. மொபைலுக்கு அடிமையாகி சுற்றி உள்ள மனுஷங்களோட எந்த நல்லது கெட்டதையும் கவனிக்காமல் இருந்திருக்கேன். அது அவங்க மனசை எவ்வளவு காயப்படுத்தியிருக்கும்னு நல்லாத் தெரியுது. எல்லாத்தையும் விட ஒரு மனைவியா நீ எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பன்னு இப்ப எனக்கு தெளிவாப் புரியுது. நீ விவாகரத்து கேட்டது தப்பே இல்லைன்னு தோணுது. அந்த அளவுக்கு நான் உன் பொறுமையைச் சோதிச்சிருக்கேன். என்னை மன்னிச்சிரு"

ரம்யா அவனை நம்ப முடியாமல் பார்த்தாள். வீட்டிற்கு வரும்வரை அவள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. கதவைத் திறந்து உள்ளே வந்ததும் அவள் அருகில் சென்று பரிவோடு கூறினான்.

"சத்தியமா சொல்றேன் ரம்யா. ஆஃபீஸ் வேலைகளுக்கு மட்டும் இந்த மொபைலை வச்சுக்கிறேன். மற்றபடி இனி என்னுடைய பழைய நோக்கியா மொபைலையே பயன்படுத்தலாம்னு நினைக்கிறேன். அதுதான் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு"

ரம்யா கண்கலங்கினாள்.

"சாரிங்க.. எனக்கும் வேற வழி தெரியாமல்தான் விவாகரத்து என்று சொல்லி உங்களை மிரட்டினேன். உண்மையில் உங்களைப் பிரிஞ்சு என்னாலும் இருக்க முடியாது" என்று கூறி அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அதுவரை மேஜை டிராயரில் கவனிப்பாரற்றுக் கிடந்த தினேஷின் பழைய நோக்கியா 1100 மொபைல் அவர்களின் உரையாடலைக் கேட்டுச் சிரித்தது.

முற்றும்.

மாறிவரும் எழுத்துலகம்

முனைவர் த.ஜான்சிபால்ராஜ்
திருநெல்வேலி

புத்தகங்கள் வெறும் உயிரற்ற காகிதங்களின் குவியல் அல்ல. அவை அலமாரியில் இருந்து நம்மை வழிநடத்தும் உயிரோடு இருக்கும் மனிதங்கள்

என்றார் அமெரிக்க எழுத்தாளர் கில்பர் ஹையாத்.

புத்தகங்கள் மனிதனது எண்ணக்குவியல்களின் வரிசைகிரமம். உலகின் நேற்றைய ,இன்றைய ,நாளைய வரலாற்றை தன்னகத்தே அடைத்து வைத்திருக்கும் பெட்டகங்கள். ஒவ்வொரு பதிப்பும் ,இலக்கியங்களும், அவை எழுதப்பட்ட காலகட்டத்தைப் புரதிபலிக்கும் வரலாற்றுக் கண்ணாடிகள்.

புத்தகங்களைப் படிக்க விரும்பாதோர் தம் வாழ்வின் பெரும்பகுதியை அறிந்தே வீணில் தள்ளுபவர்கள். புத்தகங்களை வாசிக்க வைக்கவும், அவற்றின் சுவையை அறியச் செய்யவும் அதன் மகத்துவத்தை அறிந்த ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். இந்த உயரிய நோக்கத்தோடுதான் யுனஸ்கோ அமைப்பு உலக புத்தகத் தினம் 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதி முதல் உலக புத்தகத் தினம் மற்றும் காப்புரிமை தினமாக இத்தினத்தைக் கடைபிடிக்க வைத்துள்ளது .

இந்நாள் பிரபல எழுத்தாளர்களான மிகெல் டி செர்வாண்டிஸ் என்பவரின் பிறந்த நாள்,மற்றும் வில்லியம் ஷேக்ஸ்பியர்,இன்கா காரிசிலாசோ டி ல வேகா ஆகியோரின் நினைவு நாளுமாகும்.

இந்தியாவில் 2007 ஆம் ஆண்டு முதல், இத்தினம் உலக புத்தகத் தினமாகக் கொண்டாடி வருகிறது.

புத்தகங்கள் மனித வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியவை.

ஆய்வாளர்களது தெளிவித்தலின்படி சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன், தான் வாழ்ந்த குகைகளிலும், பாறைகளிலும் தனது எண்ணங்களை,

விருப்பங்களை, இரசித்தவற்றை சித்திரங்களாகப் பதித்து வைத்திருப்பதை கண்டு வியக்கின்றனர். அவற்றுள் கற்களில் வரையப்பட்ட ஓவியங்களே ஆதி மனிதனின் பதிப்பாற்றலுக்கான ஒருசில எச்சங்களாக இன்றும் தெரிகின்றன.

மனிதன் தனது கருத்துக்களை மணல்பரப்பிலும், மரக்கிளைகளிலும், மண்ணேடுகளிலும், உணவுப் பொருட்களிலும், ஏன்...இலைகளிலும் பூக்களிலும் கூன பதிக்காமல் இருந்திருக்க மாட்டான். ஆதாரமற்ற இவை எதுவும் வரலாற்றில் பதிவேறாததில் வியப்பல்ல!

நம் முன்னோர்கள் கதை இயற்றிகளாகவும், கதைச் சொல்லிகளாகவும் இருந்திருப்பதற்கான எச்சங்கள் காற்றோடு எங்கும் இன்றும் பரவியிருப்பது மறுக்க இயலாது. அவை பலவாறு குறுகியும், நீண்டும், மறுவியும் உலாவிக்கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை காற்றில் எழுதிய இலக்கியங்கள் எனலாம்.

தலைமுறை தலைமுறையாக எழுதப்படாத இத்தகைய இலக்கியங்கள் எழுதுகோலும், காகிதமும் கண்டறியபட்டப் பிறகு அச்சேறி அமர்ந்து கொண்டிருக்கின்றன.

காகிதத்தைச் சீனர்கள் முதலில் கண்டறித்தனர். முதல் நூல் கி.பி 9 ஆம் நூற்றாண்டில் டையமண்ட் என்ற 868 சூத்திரங்கள் அடங்கிய முதல் அச்சுப் புத்தகம் உருவாக்கப்பட்டது. மனிதனின் எண்ணங்கள் குடிகொள்ளும் பிரத்யேக உலகமாய் அச்சுத் துறை தனது முதல் சாதனையை அரங்கேற்றியது.

பலபரிமாணங்களுக்குப் பிறகு புத்தகம் மனிதர்களுக்கு பரிச்சயமானது. அச்சுக்களில் ஏற்றப்படும் மனித சிந்தைகள் புதிய மதிப்பீட்டைப் பெற்றன.

உலகின் கலாச்சாரம், நாகரீகம்,அறிவியல், பொருளாதாரம், வரலாறு ...என்று புத்தகங்கள் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி முழு உலகையும் செதுக்கி சீர்படுத்தும் ஆயுதமானது. எழுத்துலகம் என்ற தனியொரு உலகம் பூமியில் மனிதர்களால் உருவாக்கப்பட்டது.

அச்சுக்கலை தோன்றும் முன்பே மக்கள் கழிமண் கலவைகளிலும் ஆட்டுத் தோல்களிலும், எழுதி தங்களது எண்ணக்குவியல்களைப் பத்திரப்படுத்தியிருக்கின்றனர்.

சுமார் கி.மு 2250 ஆண்டுகளுக்கு முன்பே சிரியாவில் உள்ள எப்லா நகரில் சுட்ட களிமண் பலகைகளில் க்யூனிபாரம் எழுத்துக்களால் எழுதப்பட்ட எழுத்துக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுமார் 37 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கோடுகள் போடபட்ட எலும்புகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

பபூன் குரங்கின் கால் எலும்பில் கோடு போன்ற குறியீடுகள் இருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்ளனர். இதுவும் மனிதன் தனது கருத்தைப் பதிவித்ததற்கான அடையாளம் தான்.

எதுவானாலும் புத்தகங்கள் எனப்படும் காகித கட்டுகளில் வரிசையாக்கப்பட்டு, வாசிப்பால்தான் உயிரடையும் .

எழுத்துக்கள் அச்சேறிய பிறகே மனித சமூகம் எல்லாவிதங்களிலும் வளர்ச்சிக் கண்டு வருகிறது.உலகம் தனது சுழலும் வேகத்திற்கும் அதிவேகமாக கருத்துக்களைக் கண நேரத்தில் கடத்ததுவதும் அறியப்படுத்துவதுமாகவே இயங்குகிறது் .

ஐரோப்பாவில் அச்சு இயந்திரம்14 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இதன் வேகம் பன்மடங்கு பெருகியது.

இந்த அச்சு இயந்திரமானது ஜெர்மனி நாட்டு அறிஞர் ஜான் கூட்டன்பர்க் என்பவரால்

1439ஆம் ஆண்டு முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.இதன் பிறகு புத்தகங்கள் மனிதனின் வாழ்வியலை அழகாக்கும் அற்புதமான படைப்பாக இன்றுவரை சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறது.

இன்று புத்தகங்கள் படிப்படியான மாற்றங்களடைந்து மின் நூல்களாகவும், மின்படிகளாகவும் வெளிவருகிறது. இளையத் தலைமுறையினரின் வாசிப்பு முற்றிலும் காகிதங்களிலிருந்து திறன்பேசி,கணினி, கையடக்க கணினி என்று மாறிவரும் இக்காலத்திய போக்கு வாசித்தல் கலைக்கு புத்துயிர் ஊட்டுவதாக அமைந்தால் மட்டுமே மனிதனது அறிவு வளர்ச்சியின் வேகமும் தரமும் செழுமையானதாக அமையும்.

கொசுறு

சாந்தினி பீ,
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை, அலிகார் பல்கலைக் கழகம்

"வரேன் அம்மா, இதோ வரேன்.. அம்மா வந்து கொண்டே இருக்கிறேன்"...

"ம்மம்.... என்ன விஷயம் ஒரு குரலுக்கு இத்தனை முறை எதிரொலி வருகிறது? இது என்ன காவல் காக்கும் அந்த பெரியவர் தானா? நான் பாபா என்று அழைக்கும் அவர்தானா?"

காலை உணவு அருந்தி கொண்டிருந்த ஷப்னாவின் மனக்குரல்.

பாபாவின் குரல் கேட்ட வேகத்தில் ஒலித்த எண்ணங்கள். எல்லையில்லா வேகத்தில் தான் எண்ணங்கள் பிறக்குமே.. அதே வேகத்தில் இன்னும் அடுக்கியது...."வண்டிகள் நிறுத்துவதை கவனித்து கொள்ளுங்கள், வெளியார் வண்டியை உள்ளே அனுப்ப வேண்டாம்" என்றாலே இவர், "நான் என்ன செய்ய" என்று ஏதோ ஒரு சாக்கு போக்கு சொல்லுவார். பத்து முறை கூப்பிட்டாலும் ஒரு குரல் கொடுக்க மாட்டார். இப்பொழுது ஒற்றைக் குரலுக்கு மூன்று குரல்கள்.... இப்படியாக ஷப்னாவின் எண்ணங்கள் தொடர்ந்தன. அது ஒரு சிறிய அடுக்குமாடி குடியிருப்பு. வசதியாக கட்டப்பட்ட குடியிருப்பில் இருபத்தைந்து வீடுகள் மட்டுமே இருந்தன . அதற்கு ஒரு பெரிய காம்பவுண்ட் போட்டு காவலுக்கு ஒரு பெரியவர். அவரைப் பற்றித்தான் இப்படியெல்லாம் அவள் மனது யோசித்துக் கொண்டிருந்தது.

"என்ன காரணமாக இருக்கும் எனக்கு மட்டும் ஏன் இவர் குரல் கொடுப்பதில்லை?" உள் மனம் பதில் சொல்லியது ..."அடி முட்டாள் நேற்று நீ பார்க்கவில்லை? அந்த பெரியவரை இப்போது கூப்பிட்டார்களே....இந்த அம்மா பணம் கொடுத்ததை... எத்தனை முறை பார்த்திருக்கிறாய்..? அப்பொழுதுமா உனக்கு தெரியவில்லை" என்றது. ஓ...அந்தப் பணத்தின் எதிர்குரலா ...? ஆமாம் சரி பாவம் போகட்டும் அது அவருடைய பசியின் குரல் இது ஷப்னா.

மனக்குரல் - பசியின் குரலது, ஆசையின் குரல் ...ஆசையின் அவலக்குரல்... தான் செய்யும் பணிக்கு கிடைக்கும் கூலியை விட அதிகமாக யாரேனும் கொடுப்பார்களா என்கின்ற ஏக்கக் குரல்! ஊழலுக்கு தன் நேர்மையை காட்டும் அநீதி குரல்... எல்லா இடங்களிலும் வருமானத்திற்கு மேல் வேறு ஒரு வருமானம். இந்த தமிழ்நாட்டில் இது என்ன அதிசயம்? ஊழல் தமிழகத்தின் புது நார்மல்.. ஆம் ..."சரி சரி விடு... காலகாலமாக கொசுறு கேட்டுப் பழகியவர்கள் தானே...நான் கிளம்பனும்" என ஷப்னா மனக் குரலை அடக்கி புறப்பட்டாள்.... அலுவலகத்திற்கு.

பசியின் பயணம்

சுகன்யா சம்பத்குமார்
மடிப்பாக்கம்

சுதாகருக்கு ஒரு மாதம் முன்பு தான் அமெரிக்காவில் பெரிய கம்பெனியில் வேலை கிடைத்தது . 43 வயதாகும் சுதாகருக்கு ரம்யா என்ற 38 வயது மனைவியும் ஹரிணி ராகினி என்ற இரு மகள்களும் உள்ளனர் .

சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தவனுக்கு திடீரென்று பெரிய யோகம் அடித்தாற்போல் வெளிநாட்டில் வேலை கிடைத்தது .

பூர்விக சொத்து இருந்ததால் அவர்களுக்கு புதிதாக வீடு வாங்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படவில்லை , எனவே சம்பாதிக்கும் அனைத்தும் அவர்கள் நினைக்கும் சேமிப்பு போக அவர்கள் செலவுக்கு தான் .

ரம்யாவும் ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் பணி புரிகிறாள் .எனவே குழந்தைகள் காட்டில் மழை .கேட்டதெல்லாம் கிடைக்கும் , சில நேரங்களில் கேட்காததும் கிடைக்கும் .

இப்படியே ஒரு வருடம் ஓடியது , சுதாகருக்கு குடும்பத்தை பிரிந்திருப்பதில் விருப்பம் இல்லை . அவனும் வேலையை விட்டுவிட்டு ஊருடன் வருவதாக ரம்யாவிடம் பல முறை கூறிவிட்டான் . ஆனால் அவளுக்கு அதில் விருப்பம் இல்லை .

அவன் வாயை அடைப்பதற்காக "வேண்டும் என்றால் , எனக்கு அமெரிக்காவில் ஒரு வேலை பார்த்துவிட்டு கூப்பிடுங்கள் , நாங்கள் மூவரும் அங்கு வந்து விடுகிறோம் " என்றாள் .அவனும் அரை மனதோடு சரி என்றான்

பொதுவாகவே ஹரிணி ஆடம்பரத்தை விரும்புபவள் , உணவு வாங்கினால் கூட தேவைக்கு மீறி வாங்கி ,அதனை மெனக்கெட்டு வீணடிப்பாள் . கேட்டால் இது பெரிய மனிதர்களின் தோரணை என்பாள் . இதை ரம்யா தடுத்ததே இல்லை .ஆனால் இவர்கள் நடவடிக்கை சுதாகருக்கு துளி கூட பிடிக்கவில்லை. சுதாகர் அவன் தன் சிறு வயதில் பசியால் வாடியதையும் கஷ்டப்பட்டதையும் தொலைபேசியில் எடுத்துரைத்தான் . ஆனால் அவர்கள் இருவரும் அவனை கிண்டலடித்தனர் . அவனுக்கு இவர்களை எப்படி திருத்துவது என்றே தெரியவில்லை . மிகவும் வருந்தினான் .

அவ்வப்போது அவன் இரவு நேரத்தில் தான் வீடியோ கால் செய்வான் , அப்பொழுது கூட நிறைய நேரம் , கண்டவற்றை வாங்கி சாப்பிட்டு விட்டு , தட்டில் உணவை அப்படியே மீதம் வைத்துவிட்டு எழுவாள் ஹரிணி . அதனை பார்த்து கூட சுதாகர் ஹரிணிக்கு உணவை வீணாக்காதே என்று அறிவுரை கூறுவான் .

ஆனால் அவள் வழக்கம் போல் , அப்பா சொல்வதை துளி கூட மதிக்க மாட்டாள் . இப்படியே அப்பாவிற்கும் மகளுக்கும் இடையே விரிசல் விழ ஆரம்பித்தது . ஒரு கட்டத்தில் அவள் ரம்யாவிடம் ‘‘அம்மா , நாம் மூவரும் இங்கேயே இருந்து விடுவோம் , அப்பா வேண்டும் என்றால் வருடத்திற்கு ஒரு முறை வந்து நம்மை பார்த்துவிட்டு போகட்டும் ‘‘என்றாள் . ரம்யாவிற்கு ஹரிணியின் எண்ணம் புரிந்தது . அவளுக்கும் அதில் விருப்பம் தான் .

ஏனெனில் சுதாகரிடம் சென்றால் தினமும் அறிவுரை மழை தான் இருக்கும் , நிம்மதி இருக்காது என்று எண்ணினாள்.

ஒரு நாள் சுதாகர் ரம்யாவிற்கு உற்சாகத்துடன் கால் செய்தான் , என்னவென்றால் ரம்யாவிற்கு தனக்கு தெரிந்த ஒரு கம்பெனியில் வேலைக்கு சொல்லி வைத்திருப்பதாகவும் , அவர்களுக்கு புது வீடு ஒன்று பார்த்திருப்பதாகவும் , அவர்கள் மூவரையும் உடனடியாக அமெரிக்கா புறப்பட்டு வர சொன்னான் .

ரம்யாவிற்கு ஒரு பக்கம் வெளிநாட்டு வாழ்க்கை மீது மோகம் , ஒரு பக்கம் இவ்வளவு சுதந்திரமாக அங்கு சென்றால் இருக்க முடியாதோ என்ற குழப்பம் . ஒரு வழியாக , அவர்கள் அமெரிக்காவில் வாழ்க்கையை தொடங்குவதற்கு ஆயத்தமானார்கள் .

நாட்கள் நகர்ந்தன , உள்ளூர் உறவுகளிடம் கூறிக்கொண்டு குழந்தைகளையும் மூட்டை முடிச்சுகளையும் கட்டிக்கொண்டு அமெரிக்கா கிளம்பினாள் ரம்யா .

அவர்கள் துபாய் வழியாக செல்ல முடிவு செய்திருந்தனர் . ரம்யா ஹரிணி ராகினி மூவரும் , சென்னை விமான நிலையத்தில் வயிறு முட்ட உணவு உண்டனர் .

மிகுந்த மகிழ்ச்சியோடு விமானத்தில் மூவரும் ஏறினார்கள் . துபாய் வந்தடைந்தனர் . மறுபடியும் உணவு இடைவேளை வந்தது . ஹரிணி ரம்யாவிடம் உணவு வாங்கித்தர சொன்னாள் .

ரம்யாவும் விமான நிலையத்தில் இருந்த ஒரு உணவகத்திற்கு சென்று உணவுகளை ஆர்டர் செய்துவிட்டு , பணம் கொடுப்பதற்காக பணப்பையை கைவிட்டு தேடினாள், அவளுக்கு அவளுடைய பணப்பை கிடைக்கவில்லை , அதில் தான் நிறைய பணம் இருந்தது . பதட்டத்தில் ரம்யாவிற்கு அழுகையும் கோவமும் சேர்ந்து வந்தது .

ஒரு நிமிடம் நிதானித்து கொண்டு குழந்தைகளை அவசரம் அவசரமாக உணவகத்தில் இருந்து வெளியே அழைத்து வந்தாள் . இப்பொழுது எல்லாம் சில டெபிட் கார்டுகளை

கொடுத்தால் இலவசமாக உணவு உண்ணலாம் என்று இருக்கிறதே , அதை கூட அவளால் செய்ய முடியவில்லை , ஏனெனில் அவள் டெபிட் கார்டையும் சேர்த்து தொலைத்து விட்டாள் .

ஹரிணி ‘‘என்ன ஆயிற்று அம்மா ?‘‘என்று கேட்க ,நடந்த விஷயத்தை அழுதுகொண்டே கூறினாள் . ஹரிணிக்கோ பசி உயிர் போயிற்று , ரம்யா சிறிதும் எதிர்பாக்காத விதமாக ரம்யாவை கவனம் இல்லாமல் இருந்ததற்கு திட்டி தீர்த்தாள் . ராகினிக்கும் பசி , ஆனால் 10 வயது சிறுமி என்பதால் பசியில் உறங்கிவிட்டாள் .

என்ன செய்வதென்றே தெரியவில்லை ,யாரிடமும் சொல்ல முடியாத வேதனை . அவள் விமான நிலைய தொலைபேசி மூலம் தன் கணவருக்கு எப்படியோ தகவல் கொடுத்துவிட்டாள் , ஆனால் பாவம் சுதாகருக்கும் இவளுக்கு எப்படி உதவுவது என்று புரியவில்லை . நல்ல வேலையாக பாஸ்போர்ட் தொலையாமல் இருந்தது .

என்ன செய்வதென்றே தெரியாமல் இரு குழந்தைகளுடன் உட்கார்திருந்தாள் . அப்பொழுது அவர்கள் உட்கார்ந்த இடத்திலிருந்து அந்த உணவகத்தை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள் ஹரிணி . அங்கு அவளை போல் நிறைய பேர் , தேவைக்கு மேல் உணவை வாங்கி அதை எச்சில் படுத்தி தட்டில் மீதம் வைத்து சென்றனர். அவளுக்குள் அப்பொழுது தான் பசியின் வலி தெரிய ஆரம்பித்தது . உணவின் அருமையும் புரிந்தது .

அப்பா அயல் நாட்டில் சம்பாதிக்கிறார் , பாட்டி தாத்தா விடம் நிறைய சொத்து உள்ளது ,அம்மாவிடம் நிறைய நகை பணம் இருக்கிறது ஆனால் என்ன செய்ய ,அன்றைய பொழுது அந்த மத்திய வேளையின் பசியை இவை எவற்றாலும் காப்பாற்ற முடியவில்லை . அவளுக்கு பிடித்த அழகு சாதன பொருள் கடை ,துணி கடை என அனைத்தும் அருகில் இருந்தது . அவற்றுக்கெல்லாம் சென்று பொருட்கள் வாங்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு தான் வீட்டிலிருந்து பயணத்தை தொடங்கினர்,ஆனால் பசி இருக்கும் போது அவளுக்கு எதுவுமே கண்ணுக்கு தெரியவில்லை ,

உடனே துபாயிலிருந்து டல்லஸ்க்கு புறப்படும் விமானத்திற்கு அறிக்கை வரவே , உடனே கிளம்ப ஆரம்பித்தாள்.ரம்யாவிற்கு ஒரு சிறு நம்பிக்கை கண்டிப்பாக விமானத்தில் ஏறியவுடன் ஏதாவது சாப்பாடு கொடுப்பார்கள் என்று.

ஆவலுடன் மிகுந்த பசியோடு விமானத்தில் காத்திருந்தார்கள் . அப்பொழுது விமான பணிப்பெண் எல்லோரிடமும் அன்று சில தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர்களால் பயணிகள் கேட்ட உணவை கொடுக்க முடியவில்லை என்றும் அதற்காக வருந்துவதாகவும் , விமானம் தரை இறங்கியதும் உணவுக்கு ஏற்பாடு விமானம் நிலையத்தில் செய்யப்படும் என்றும் கூறினாள் .அதுமட்டுமின்றி அப்பொழுதைய பசி அடங்க பிஸ்கட் பொட்டலமும் குளிர்பானமும் கொடுப்பதாக கூறினாள் .

இதை கேட்டதும் ஹரிணி அழவே ஆரம்பித்துவிட்டாள், கோபம் கொள்ள கூட தெம்பு இல்லை.

மற்ற அனைவரும் மதிய உணவு உண்டு விட்டு விமானம் ஏறியதால் அவரக்ளுக்கு இது பெரிதாக தெரியவில்லை அவர்களால் சமாளிக்க முடிந்தது. ரம்யாவிற்கு தன் கவுரவத்தை விட்டு யாரிடமும் உணவு கேட்க முடியவில்லை. எதுவும் பேசாமல் அந்த பிஸ்கட் பொட்டலத்தை சாப்பிட்டு விட்டு நேரத்தை கடத்தினர். ஆனாலும் பசி அடங்கவில்லை.

அதற்குள் டல்லஸ் விமான நிலையத்தில், தன் வீட்டிலிருந்து தன் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உணவு சமைத்து எடுத்து வந்து காத்திருந்தான் சுதாகர்.

ரம்யாவும் அவள் குழந்தைகளும் வந்து இறங்கினர். உடனே தங்கள் பொருட்களை எடுத்துக்கொண்டு விமானம் நிலையம் வெளியில் வந்தனர்.அங்கு ஆவலோடு காத்திருந்த சுதாகரை சென்று மூவரும் கட்டி அணைத்தனர்.

அவன் அவர்களை தன்னுடைய காரில் ஏற்றிக்கொண்டு விமானம் நிலையத்திலிருந்து சற்று வெளியில் வந்து , அவர்களுக்காக அவன் சமைத்து கொண்டு வந்த உணவை கொடுத்தான். ராகினிக்கு அவன் ஊட்டிவிட , முதல் வாய் எடுத்து அவர்கள் வாயில் வைக்கும் போது அவர்களையும் மீறி அவர்கள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. ஆனால் அப்பொழுது ஹரிணி சாப்பிட்டு முடிக்கும் போது மிச்சம் மீதி வைக்க வில்லை, உணவை கீழே சிந்தவில்லை ……..

வார்த்தைகள் தூர்ந்து போன

நெஞ்சுக் குழியின்
மௌனத்தை
மொழிபெயர்க்கச்
சொல்கிறாய்
வறண்ட மௌனம்
புழுதியாய்
பிடிபடாமல் பறக்கிறது
ஒரு துளி....
ஒரே ஒரு துளி
ஒரு துளியேனும்
அன்பைத் தெளி
உயிர்ப்பின் சுவாசத்தை
மட்டுமேனும்
வாசித்துவிடுகிறேன்
நேயா!

– கவிஞர் வர்த்தினி பர்வதா, மதுரை

முனைவர் ராஜேஸ்வரி சாட்டர்ஜி

மேனகா நரேஷ்,
நியூஜெர்சி

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்-3

ராஜேஸ்வரி சாட்டர்ஜி ,மின் பொறியியல் துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்த இந்தியாவின் முதல் பெண் என்ற பெருமைக்குரியவராகத் திகழ்கிறார். கர்நாடக மாநிலத்தின் முதல் பெண் பொறியாளர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் (IISc) பணியாற்றிய காலத்தில் ஒரு பேராசிரியராகத் திறம்படச் செயல்பட்டவர் ராஜேஸ்வரி. நுண்ணலை (microwave) பற்றிய ஆராய்ச்சிகளும், ஆன்டனா பொறியியல் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்புகளும் அவரது திறமையை நிரூபிக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

ஆரம்பக் கால வாழ்க்கையும் கல்வியும்:

ராஜேஸ்வரி சட்டர்ஜி 1922 ஆம் வருடம் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி அன்று கர்நாடகாவில் பிறந்தார். "நான் ஒரு முற்போக்கான, திறந்த மனதுடைய குடும்பத்தில் பிறந்தேன். என் வாயில் வெள்ளி ஸ்பூன் இல்லாவிட்டாலும், நிச்சயமாகக் கையில் ஒரு புத்தகத்துடன் பிறந்தேன்!" என்று தன்னுடைய குடும்பத்தைப் பற்றி மிகவும் உயர்வாக ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார் ராஜேஸ்வரி. இவரது தந்தை பி.எம். சிவராம்ஜா, வழக்கறிஞராகப் பணியாற்றியவர். பாட்டி கமலம்மா தாசப்பா முந்தைய மைசூர் மாநிலத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமைக்குரியவர். பெண்கள் கல்வித் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் துரிதப்படுத்தப்பட்ட பள்ளி பாடத்திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தினார் கமலம்மா. இந்தத் திட்டம் மாணவிகள் 14 வயதிற்குள் தங்கள்

மெட்ரிகுலேஷன் படிப்பை முடிக்க வழி வகுத்தது. "மகிலா சேவா சமாஜம்" என்ற அமைப்பு நடத்திய சிறப்பு ஆங்கிலப் பள்ளியில் இந்தப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ராஜேஸ்வரி இந்தப் பள்ளியில் படிப்பை முடித்தவுடன், இயற்பியலையும் கணிதத்தையும் தனது விருப்பப்பாடமாக எடுத்துக்கொண்டு, பெங்களூருவில் உள்ள சென்ட்ரல் காலேஜில் படிப்பைத் தொடர்ந்தார். பி.எஸ்.சி ஆனர்ஸ், எம்.எஸ்.சி பட்டப் படிப்பில் முதன்மை மாணவியாக விளங்கியதற்காக உம்மடி கிருஷ்ணராஜ உடையார் விருது, எம்.டி. நாராயண ஐயங்கார் பரிசு, வால்டர் நினைவுப் பரிசு ஆகிய உயர்ந்த விருதுகளைப் பெற்றார். இதைத் தொடர்ந்து 1943 ஆம் ஆண்டில் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் மின் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மாணவியாகப் பணியில் சேர்ந்தார்.

அமெரிக்கப் பயணம்:

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றுவதற்காக இந்தியாவில் ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கம் இளம் விஞ்ஞானிகளுக்கு வெளிநாடுகளில் படிக்க உதவித்தொகை வழங்கியது. "மின்னணுவியல் துறையில் உதவித் தொகைக்கு நான் விண்ணப்பித்தேன். 1946 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு , அமெரிக்காவின் ஆன் ஆர்பர் என்ற நகரில் உள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் மேல்படிப்பு படிப்பதற்காகச் சென்றேன்.இன்னும் திருமணம் ஆகாத நிலையில், நான் எடுத்த இந்த முடிவுக்கு என் குடும்பத்தினர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை! இன்றைய காலகட்டத்தில் இளம் பெண்கள் தங்கள் விருப்பப்படி படிக்கலாம் , வேலை செய்யலாம் ஆனால் ,அன்றைய காலகட்டத்தில் பெண்கள் மிக அதிகமான கட்டுப்பாடுகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது .மேற்கத்திய நாடுகளில் கூடப் பல பல்கலைக்கழகங்கள் 1920 கள் வரை பெண்களை அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், பாகுபாடு எதையும் பெரிதாக எதிர்கொள்ளாதது எனக்கு வாய்த்த அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும் !" என்று ஒரு பேட்டியில் ராஜேஸ்வரி குறிப்பிட்டு இருக்கிறார்.

அமெரிக்காவில் மின் பொறியியல் துறையில் முதுகலை பட்டம் பெற்ற பிறகு , ராஜேஸ்வரி 1953 ஆம் ஆண்டுத் தன்னுடைய 31 வது வயதில் முனைவர் பட்டம் பெற்றார் . அவரது மேற்பார்வையாளரான பேராசிரியர் வில்லியம் கோல்ட் , மின் பொறியியல் துறையில் முன்னோடியாக விளங்கியவர். போர் சூழலில் உயிர்காக்கும் ரேடார் ஜாமிங் தொழில்நுட்பத்தை உருவாக்கியவர் என்ற பெருமை இவருக்கு உண்டு. அமெரிக்காவில் ஒரு நல்ல நட்பு வட்டாரத்தை வளர்த்துக் கொண்ட ராஜேஸ்வரி புதிய சிந்தனைகளை வரவேற்கவும் கற்றுக்கொண்டார்.

இந்தியா வருகை:

1953 இல் இந்தியா திரும்பிய பிறகு , இந்திய அறிவியல் நிறுவனத்தில் (IISc) இணைந்து பணியாற்றினார் . இந்தக் காலகட்டத்தில் தன்னுடன் பணிபுரிந்த சிசிர் குமார் சாட்டர்ஜி என்பவரை திருமணம் செய்து கொண்டார் . அவருடன் இணைந்து பல திட்டங்களில் பணியாற்றினார் . காந்தக் கோட்பாடு ,எலக்ட்ரான்ஸ் குழாய் சுற்றுகள் , நுண்ணலை தொழில்நுட்பம் மற்றும் வானொலி பொறியியல் ஆகியவற்றைக் கல்லூரி மாணவர்களுக்குக் கற்பிக்கும் பேராசிரியராகத் தன் பணியைச் செவ்வனே செய்து வந்தார் முனைவர் ராஜேஸ்வரி. அவரது கணவருடன் இணைந்து நுண்ணலை தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆய்வகத்தை நிறுவி அந்தத் துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதுவே இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் நுண்ணலை தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கூடம். முனைவர் ராஜேஸ்வரி மின்தொடர்பு பொறியியல் துறையின் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன்னுடைய வாழ்நாளில் அவர் 20 முனைவர் படிப்பு மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார் 100க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதினார் மேலும் ஏழு புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

1982 ஆம் ஆண்டுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, இந்தியப் பெண்கள் ஆய்வுகள் சங்கம் உட்படப் பல சமூகத் திட்டங்களில் பணியாற்றினார். பெரும்பாலான பொறியாளர்களைப் போல அவர் தொழில்துறையில் பணியாற்றாததால், தன்னை ஒரு "பொறியியல்-விஞ்ஞானி" என்றே அழைப்பதை விரும்பினார்.

இவரது மகளான இந்திரா சாட்டர்ஜி அமெரிக்காவில் உள்ள நிவாடா பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் , பயோமெடிக்கல் பொறியியல் துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இறப்பு:

2010 ஆம் ஆண்டுச் செப்டம்பர் மாதம் 3 ஆம் தேதி அன்று முனைவர் ராஜேஸ்வரி காலமானார். முனைவர் ராஜேஸ்வரியின் சாதனைகள் பெரும் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவையாகத் திகழ்கின்றன. ஆண் ஆதிக்கம் செலுத்தும் துறையில் நுழைந்த முதல் பெண்ணாக அவர் கருதப்படுகிறார். அறிவியலில் அவர் செய்த சாதனைகளால் பெண்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட முன்னோடியாக விளங்குகிறார் முனைவர் ராஜேஸ்வரி.

பெற்ற விருதுகள்:

நுண்ணலை பொறியியல் துறையில் அவரது பங்களிப்புகளுக்காக, பல விருதுகளைப் பெற்றிருக்கிறார் முனைவர் ராஜேஸ்வரி. குறிப்பிடத்தக்க விருதுகளில் சில:

-பி.எஸ்.சி (ஹானர்ஸ்) பட்டப்படிப்பில் முதல் தரவரிசைக்கான மும்மாடி கிருஷ்ணராஜ உடையார் விருது, எம்.டி. நாராயண ஐயங்கார் பரிசு , எம்.எஸ்.சி.யில் முதல் தரவரிசைக்கான வால்டர் நினைவுப் பரிசு.

-மின் பொறியியல், வானொலி பொறியியல் துறைகளில் சிறந்த ஆய்வறிக்கைக்கான மவுண்ட்பேட்டன் பரிசு (இங்கிலாந்து).

-இன்ஜினியர்ஸ் இன்ஸ்டிடியூஷனில் சிறந்த ஆராய்ச்சி ஆய்வறிக்கைக்கான ஜே.சி. போஸ் நினைவுப் பரிசு.

-மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியாளர்கள் நிறுவனத்தின் சிறந்த ஆராய்ச்சி, கற்பித்தல் பணிக்கான ராம்லால் வாத்வா விருது.

-2017 ஆம் ஆண்டில் இந்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் நுண்ணலை பொறியியல் , ஆண்டெனா பொறியியலில் முனைவர் ராஜேஸ்வரியின் பணியைப் போற்றும் வகையில் "இந்தியாவின் முதல் பெண் சாதனையாளர்" என்ற விருதை மரணத்திற்குப் பின் அவருக்கு அளித்துக் கௌரவித்தது.

முடிவுரை:

பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில், கல்வியின் மேன்மையை உணர்ந்த குடும்பத்தில் பிறந்து, தனது விடாமுயற்சியால் பல சாதனைகளைப் புரிந்த ராஜேஸ்வரி சாட்டர்ஜி பெண்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார். முனைவர் ராஜேஸ்வரி சாட்டர்ஜி தனது சாதனைகளின் மூலம் , பொறியியல் துறையை முன்னேற்றியது மட்டுமல்லாமல் எதிர்காலத் தலைமுறை பொறியாளர்கள் குறிப்பாகப் பெண்கள் பெரிய கனவுகளைக் காணவும் பெரிய சாதனைகளைச் சாதிக்கவும் வழி வகுத்துள்ளார்.

''விஞ்ஞானிகளாக, பொறியாளர்களாக, நாம் இருக்கும் இடத்தை அடைந்த அதிர்ஷ்டசாலிகளாக, மற்றவர்களுக்கு, குறிப்பாக நம்மை விடக் குறைந்த சலுகைகள் கொண்ட பெண்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்று நான் உறுதியாக உணர்கிறேன். அவர்கள் படிக்கவும், வேலை செய்யவும், அவர்கள் விரும்பும் எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கவும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும்.'' என்று பெண்களின் முன்னேற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் முனைவர் ராஜேஸ்வரி. இக்கருத்தை வலியுறுத்தும் வகையிலேயே அவரது வாழ்க்கையும் பணியும் அமைந்தது.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		விலை
1.	திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
7.	புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு	200
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)	
11.	பாட்டுடைத்தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை.	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	
	முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்	
1.	தலைமை பொறுப்பேற்கலாம்	200
2.	இணையத் தமிழ்	120
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200

5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*200*
6.	*பாரதியார்*	*100*
7.	*நவீன மொழி பெயர்ப்பு உத்திகள்*	*200*
8.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	
9.	*மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)*	

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1.	*பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ்*	*200*
2.	*மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு*	*150*
3.	*சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*200*
4.	*ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
5.	*உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
6.	*தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு200*	
7.	*கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ)*	*300*
8.	*இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி*	*300*

Other Books

1.	Concepts of Constitution - Dr. S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200
3.	Translating Tamil Poetry - Dr. C. Rajeswari	200
4.	Tie Your Hears with Words - Afrah Fathin F.N.	215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	*பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*250*
11.	*பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்)**	*300*
12.	*உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள்*	*200*

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்)	*300*
விரதங்களின் விளக்கம்	*200*
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி)	*200*
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்)	*200*
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு	*250*
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக்கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*ஆங்கிலத் தேன் கவிதைகள்*	*400*

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	*குறுந்தொகைக் கவிதைகள்*	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
2.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
3.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள்* (Co-author)	*200*
4.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
5.	*மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு*	*400*

தமிழ் இலக்கண நூல்

1.	*தமிழில் வேற்றுமை உருபுகள்*	*200*

சிறுகதை, கவிதை

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*200*
2.	*ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா*	*200*
3.	*மகிழ் பேரின்பம்*	*200*

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம்	*200*
ரிஷப ராசியின் சூட்சும ரகசியம்	*200*
நவரத்தினமும் உபரத்தினமும்	*200*
மிதுன ராசி சூட்சும ரகசியங்கள்	*200*
கடக ராசியின் சூட்சும ரகசியம்	*200*

மாத இதழ்கள்

1.	*தமிழணங்கு மாத இதழ்*	*200*
2.	Love Thamizh	*500*
3.	*சக்தி (பெண்ணிதழ்*	

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி
Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)	200 200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari [Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	200

வேலி

ராஜம் கிருஷ்ணன்

''இன்றைக்கேனும் கட்டாயம் கேட்பார்கள்'' என்ற சபலத்துடன் வீட்டுப் படியேறினாள் மாலதி. கண் சோர, நடை துவள வந்த நிலையில் மச்சுப்படி ஏறுகையில் விழுந்துவிடாமலிருக்கும் பொருட்டு, சுவரைப் பற்றிக் கொண்டு நின்றாள். அப்பொழுது மங்களத்தம்மாளும், அவள் கணவனைப் பெற்றவளும் கூடத்தில் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. மாலதிக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. பக்கத்துவீட்டு மங்களத்தம்மாள் நெருப்புக்குச்சியைக் கிழித்துத் தீப்பற்ற வைத்தாள். அந்தத் தீயும் பற்றிக் கொண்டு எரிந்ததை அவர்கள் பேச்சின் மூலம் மாலதியால் அறிய முடிந்தது. மாலதி, கோமதி அம்மாளின் மகனைக் காதல் திருமணம் செய்து கொண்டவள். திருமணத்திற்குப் பின் அவள் கணவன் ஒரு பயிற்சியின் பொருட்டு வெளிநாடு சென்றிருந்தான். மாலதி மட்டும் மாமியார் வீட்டில் ஒதுக்கப்பட்ட ஒரு தனித்த அறையில் இருந்தாள். அவள் கருவுற்றிருந்தாள்.

''சீமைகடந்து அவன் போறான்னு தெரிந்திருந்தால் இவளை நான் வீட்டுக்குக் கொண்டான்னு சொல்லியிருக்க மாட்டேன், அதுவும் அவள் குலம் தெரிந்த பிறகு என் மனது குறுகுறுத்து உறுத்துது. ஏதோ உத்தியோகம் சாக்கிலே அவள் வெளியே போகட்டும் வரட்டும்னு ஏன் வச்சிருக்கேன். வீட்டுக்குள்ளே அவளை வச்சுக்கிட்டு உள்ளே தொட்டு ஒத்தாசை செய்யச் சொல்ல முடியுமா'' என்று கோமதி பேசிக்கொண்டே போனாள். அதற்கு மங்களத்தம்மாளும் ''குலமில்ல, சாதியில்லேன்னு சொன்னாலும் அவங்க தொட்டு நீங்க எடுத்துக்க முடியுமான்னு?'' தீக்குச்சியை உரசிப் போட்டாள். ''இவன்தான் ஏடாகூடமாகக் கொண்டு வந்திட்டான்னா, இருக்கிறவங்களுக்கு நல்லவிதமாக் கல்யாணம் ஆக வேண்டாமா? இவ வீட்டுக்கு வந்த பிறகு இந்திரா வீட்டிலிருந்து யாரும் வருவதில்லை. நான் என்ன பண்ணுவேன்? வேலிதாண்ட முடியல. முள்ளிலே சிக்கிக்கிட்டாற் போலிருக்கு'' என்று கோமதி புலம்பினாள்.

அதற்கு மங்களத்தம்மாள், ''அது எப்படித் தாண்ட முடியும்? எதோ நல்லா உடுத்தி, சிரித்துப் பேசி, வேலைக்குப் போனாலும் கூட மண்ணு மண்ணுதானே? மண்ணிலிருந்து பூவையும், கிழங்கையும் எடுத்துக் கொண்டாலும் மண்ணைப் பூசிக்கவா முடியும்?'' என்றாள். அதோடு ''மகன் வர ஒரு வருஷம் ஆகும். பேறுகாலம்ன்னா என்ன செய்வீங்க'' என்று விசாரித்தாள். அதற்கு ''கோமதி ஆசுபத்திரி இருக்கிறது, பெத்த பின்னே அவங்க அம்மா அல்லது அக்காவுக்குச் சொல்லி அனுப்பினா வந்து பாத்திட்டுப் போறாங்க.

இவளுக்காக அவர்களுடன் நான் என்ன சம்பந்தி உறவா கொண்டாட முடியும்'' என்று பெருமூச்சு விட்டாள்.

கடைக்குட்டி செண்பகம், அண்ணி நிற்பதைப் பார்த்து அம்மாவிடம் அறிவிக்க அவர்கள் பேச்சை அத்தோடு முடித்துக் கொண்டனர். அந்தப் பத்து வயதுச் செண்பகத்துக்குக் கூடத் தெரியும் என்னதான் அண்ணி அழகாகவும், மற்ற வீட்டுப்பெண்கள் போல இருந்தாலும், அவள் தங்களுக்குச் சமமானவள் அல்ல என்பது.

மாலதி எண்ணிப் பார்க்கிறாள். ''காதலின் பாதை கரடு முரடாவதை, கல்யாணம் ஆகும்வரைதான் நாவலிலும், சினிமாவிலும் அந்தப் பாதையை நீட்டிக் காண்பிப்பார்கள். உண்மையிலேயே அந்தப்பாதை கல்யாணத்தில் தொடங்கித்தான் நீள்கிறது என்பது பலபேருக்குத் தெரிவதில்லை'' என்று எண்ணுகிறாள். அவள் எடுத்ததற்கெல்லாம் அழும் பிறவி அல்ல. இருந்தாலும் இதையெல்லாம் கேட்டுவிட்டு அவளுக்கு அழவேண்டும் என்று தோன்றினாலும் அதற்குச் சக்தியில்லாமல் படுக்கையில் விழுந்தாள்.

''கீழே வந்து காபி குடித்துவிட்டுப் போ'' என்ற மாமியின் குரல் அவளுக்குக் கேட்டும் தலைசுற்றியதால் எழ முடியாமல் பழைய காதல் நினைவுகளை, பிரச்சினையின் ஆரம்பத்தை எண்ணிப் பார்த்தாள். ''ஏன் படுத்திட்டே மாலதி? உடம்புக்கு என்ன? மயக்கமா என்ன?'' என்றாள் மாமி. செண்பகத்தை அழைத்து ''அண்ணியைத் தொட்டுப்பார்'' என்றாள். ''களைப்பாயிருக்கு ஒன்றுமில்லை'' என்று மாலதி பதில் கூறினாள். ''லீவு வேணும்னா எடுத்துக்கோ'' என்று மாமி சொல்லிவிட்டுப் பிறகு, ''பிள்ளைகள் ஸ்கூலுக்கும், காலேஜுக்கும் சென்றுவிடுவார்கள். உனக்குப் பொழுது போகாது. மேலும் பேறுகாலத்திற்குப் பிறகுதான் லீவு தேவைப்படும். இப்பப் போட வேண்டாம்'' என்ற பாணியில் மாமி கீழே சென்றுவிட்டாள். மாலதி கீழே இறங்கி வருவதற்குள் வெளியறை மேசை மீது காபி, பலகாரம் கொண்டுவந்து வைத்துவிட்டாள். ''குடும்பத்தில் ஒருத்தியாக உலகுக்கு முன்னே ஏற்றாலும், உள்ளத்துக்கு ஏற்கவில்லையே. வீட்டிற்குள் தாராளமாக வளைய வரச் சுதந்திரம் இல்லையே'' என்று எண்ணிக் கலங்குகிறாள். வாய் திறக்காமல், மாமி செயலில் காட்டும் சாதுர்யம் அவளுக்கு வியப்பினைத் தந்தது.

''மாலு. . .?'' என்ற குரல் அக்காவும், மாமாவும் வந்திருந்ததை அறிவித்தன. சுட்டிப்பையனை மாலு கொஞ்சினாள். அவர்களின் வருகையை, செண்பகம் கோமதியிடம் தெரிவிக்க, சற்றைக்கெல்லாம் மூச்சிறைக்கப் படியேறி வந்தாள். அவள் அக்காளின் கருப்பு நிறமும், அவளுடைய உடையும், மில்லில் வேலைசெய்யும் அவள் மாமனின் தோற்றமும் அவர்களைச் சமமாக மதிக்க, கோமதிக்கு மனம் வரவில்லை. வெறுப்பை விழுங்கிவிட்டு உபசரித்தாள். அவள் அக்கா ருக்குவும் "அம்மாவுக்கு உடம்பு சரியில்லாததால் அவர்கள் வரவில்லை. பூ முடிப்பு, வளைகாப்புன்னு நீங்க செய்யறது உண்டான்னு அம்மா கேட்டிட்டு வரச் சொன்னாங்க'' என்றாள். ''நாங்கள் பணம் தந்து விடுகிறோம். நீங்கள் ஒரு நாளைக் குறித்துச் செய்யுங்கள்'' என்றாள். மாலு ''இந்த சம்பிரதாயமெல்லாம் எதுக்கு அக்கா?'' என்றாள். இதைக் கேட்ட கோமதி, ''வழக்கத்தை ஏன் குறைக்கணும், பிறக்கும்

குழந்தை நன்றாக இருக்க வேண்டாமா?'' என்று கண்டிக்கும் தோரணையில் ருக்மணி கொடுத்த பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள்.

ருக்மணி அவர்கள் கொடுத்த காபியைக் குடித்துவிட்டு டம்ளரைக் கழுவி வைக்க எழுந்தாள். ''இருக்கட்டும் அக்கா, நீ கழுவ வேண்டாம்'' என்று பிடுங்கிக் கீழே வைத்தாள். அத்துடன் அவர்கள் பெரிய கும்பிடு போட்டுவிட்டு விடைபெற்றுச் சென்றனர். மாலதிக்குத் தலையைச் சுற்றி வயிற்றைப் புரட்ட மீண்டும் படுக்கையில் விழுந்தாள். மீண்டும் கோமதி அவளை நலம் விசாரித்துவிட்டு, ''சீரக ரசமும், சோறும் கலக்கிக் கொடுத்து அனுப்புகிறேன், குடிச்சிட்டுப் படுத்துக்கோ'' என்று கூறிவிட்டு, ''அஞ்சு தேதியாச்சே, ஆபீசில் இன்னும் சம்பளம் போடலையா?'' என்றாள். ''போட்டுட்டாங்க, சம்பளம் பெட்டியில் இருக்கு'' என்றாள் மாலதி.

கோமதி அதற்கு, ''உன்னைக் கேட்க வேண்டாம்ன்னுதான் நெனச்சேன். நாளைக்கு சனிக்கிழமை. ஒரு பொழுது மோருக்குக் கூடப் பால் இல்லை. எங்கே வச்சிருக்க சொல்லு?'' என்றாள். மாலதி பெட்டியைத் திறந்து சேலைக்கடியில் இருந்த பர்ஸை எடுத்துக்கொடுத்தாள். ''எந்திரிக்க வேண்டாம். ரசம் சோறு குடிச்சிடு, வாந்தி வந்தாலும் குத்தமில்லை'' என்றபடி சென்றாள். மகளை அழைத்து ''அவர்கள் காபி தம்ளரை கழுவாம வச்சிட்டுப் போயிட்டாங்க; எடுத்துப்போய்க் கழுவு'' என்றாள். மாலதி முழுசாய் ஒரு சம்பளம் கூட அவள் அம்மாவிடம் கொடுத்ததில்லை. படிப்புக்கும் வேலைக்கும் தகுந்த வேஷமிடவே அது அவளுக்குச் சரியாக இருந்தது. வேஷத்துக்கும் தகுந்த பலன் கிடைத்துவிட்டது. ஒரு சம்பளம் கூட இந்த வீட்டில் அவளுக்குத் தங்கவில்லை.

துயரத்திற்குப் பதிலாக மாலதிக்குச் சிரிப்பு வந்தது. ''வேலியும் இல்லை, முள்ளும் இல்லை, பணத்துக்கு ஒன்றுமே இல்லை'' என்பதோடு கதை முடிவடைகிறது.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

ஊர்மிளா

இரா. சைலஜா சக்தி

பெங்களூரில் ஒரு கணவர் அரசுப் பேருத்து டயரின் அடியில் தலையை வைத்து தற்கொலை செய்ய முயற்சித்தார். காரணம் பெண்களுக்கான இலவச பேருந்துப் பயணத் திட்டம். எனவே கர்நாடகாவில் உள்ள பெண்கள் தங்கள் பெற்றோர்களின் வீடுகளுக்குச் சென்று பல நாட்கள் தங்குவதும், கோவில்களுக்கு நாட்கணக்கில் சுற்றுலா செல்லவும் ஆரம்பித்துவிட்டனர். அப்படி ஒரு வாரமாகச் சுற்றுலா சென்ற தன் மனைவி வீடு திரும்பாததால் கோபமடைந்த கணவர் அரசுப் பேருந்து டயரின் அடியில் தலையைக் கொடுத்து, இத்திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்.

ஒரு வாரத்திற்கே இப்படி எனில், பதினான்கு வருடங்கள் ஒரு ஆண் தன் மனைவியைப் பிரிந்து வாழ்கிறான். கைகேயி கேட்ட வரத்தினால் இராமனும் சீதையும் வனவாசம் செல்கின்றனர். உடன் லட்சுமணனும் செல்கிறான். ஆனால் அவன் மனைவி ''ஊர்மிளா'' அவனுடன் செல்லவில்லை. கணவனின் கட்டளையை ஏற்று அயோத்தியின் அரண்மனையில் தங்குகிறாள்.

இராமனையும், சீதையையும் பாதுகாக்க லட்சுமணன் பதினான்கு வருடங்கள் இரவு பகல் உறங்காமல் இருக்க முடிவெடுக்கிறான். நித்திராதேவி அவனை ஆட்கொள்ள வரும்போது ''எனக்குப் பதிலாக எனது மனைவி ஊர்மிளாவை ஆட்கொள். அவள் எனக்காக எதையும் செய்வாள்'' என்று கூறுகிறான். நித்திராதேவியும் ஊர்மிளாவைச் சந்தித்து நடந்ததைக் கூறுகிறாள். ஊர்மிளா மிகுந்த மகிழ்ச்சியோடு கணவன் கூறியதை ஏற்றுக் கொள்கிறாள். உடனே நித்திராதேவி ஊர்மிளாவை ஆட்கொள்ளுகிறாள். பதினான்கு வருடங்கள் ஊர்மிளா தன் உறக்கத்தையும், தன் கணவன் உறக்கத்தையும் சேர்த்து நீண்ட உறக்கத்தை மேற்கொள்ளுகிறாள். இவ்வாறு உணவின்றி பதினான்கு வருடங்கள் இரவு, பகல் தெரியாமல் உறங்குகிறாள்.

லட்சுமணன் எந்தக் களைப்பும் இன்றி பதினான்கு ஆண்டுகள் கண் விழித்திருக்கிறான். இப்படி பதினான்கு ஆண்டுகள் எவன் ஒருவன் உறங்காமல் கண் விழிக்கிறானோ அவனால் மட்டுமே தனக்கு மரணம் நிகழ வேண்டும் என்று இராவணனின் மகன் இந்திரஜித் வரம் வாங்கியிருந்தான். அதனால்தான் போரில் லட்சுமணனால் இந்திரஜித்தை அழிக்க முடிந்தது.

இந்திரஜித்தின் மரணத்திற்கு லட்சுமணன் பதினான்கு ஆண்டுகள் கண் விழித்தது மட்டும் காரணம் அல்ல. லட்சுமணனின் உறக்கத்தையும் சேர்த்து உறங்கிய ஊர்மிளாவின் தியாகமே காரணம். ராமாயணத்தில் கும்பகர்ணனின் உறக்கத்தை அறிந்த பலரும் அப்பாவிப் பெண்ணான ஊர்மிளாவின் நீண்ட உறக்கத்தைப் பற்றி அறியவில்லை என்பது வருத்தமான ஒரு உண்மை.

ஆசிரியர் விபரம்

திருமதி. இரா. சைலஜா சக்தி, எழுத்தாளர், பேச்சாளர். பத்து ஆண்டுகளாகக் கதை, கவிதை, கட்டுரை, குறுநாவல், நாவல் ஆகியவற்றை எழுதி வருகிறார். மேலும் தனது வலைப் பக்கத்திலும், பிரதிலிபி வலைத்தளத்திலும் எழுதுகிறார். இவர் ஒரு முதுகலை கணிதப்பட்டதாரி ஆவார்.

2017 இல் "அய்யனார் குதிரை" என்ற சிறுகதை மங்கையர் மலர் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. இக்கதை சுடுமண் சிற்பங்களைப் பற்றியது.

2017 இல் "பொம்மிபுரம்" என்ற குறுநாவல் அமுதசுரபி நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது. இக்குறுநாவல் கணியான் ஆட்டம் என்ற கிராமியக் கலையைப் பற்றியது. இக்கதையை எழுத்தாளர் திருமதி. சிவசங்கரி அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

2021 இல் "ஹேக்கர்ஸ் ஜாக்கிரதை" என்ற சிறுகதை பிரதிலிபி இணையதளம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. இக்கதை சைபர் கிரைம் பற்றியது.

2023 இல் "ராவண நிழல்" என்ற நாவல் காவ்யா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இந்த நூல் தோல்பாவைக்கூத்துக் கலையை மையமாக வைத்து எழுதப்பட்டது. இதற்காக நாஞ்சில் நாட்டில் களப்பயணம் மேற்கொண்டு, பாவைக் கூத்துக் கலைஞர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை நேரில் சந்தித்து பல தகவல்களைத் திரட்டி, கூத்து நிகழ்த்துவதை நேரில் கண்டு, அது குறித்த விபரங்களைச் சேகரித்த பின் மூன்று ஆண்டு கடும் உழைப்பில் "ராவண நிழல்" நாவல் எழுதப்பட்டது. "ராவண நிழல்" தோல்பாவைக் கூத்துக் கலையின் சிறப்பு மற்றும் அக்கலைஞர்களின் வாழ்வியல் ஆகிய இரு விஷயங்களையும் பேசுகிறது. இந்நாவல் 2024 ஆம் ஆண்டிற்கான சௌமா இலக்கிய விருதைப் பெற்றுள்ளது.

"அய்யனார் குதிரை" என்ற சிறுகதைத் தொகுப்பு 2024 இல் காவ்யா பதிப்பகம் மூலம் வெளிவந்துள்ளது. இதில் வெவ்வேறு தளத்தில் அமைந்த 12 சிறுகதைகள் உள்ளன.

"குவிகம்" இதழ் நடத்திய குறும்புதினப் போட்டியில் "பொன்னியும் வில்லும்" என்ற குறுநாவல் கலந்து கொண்டு பிரசுரத்திற்குத் தேர்வாகியுள்ளது. இது வில்லுப்பாட்டுக் கலை பற்றிய கதை.

டாக்டர். அய்க்கண் நினைவு சிறுகதைப் போட்டியில் "காலை வணக்கம்" என்ற சிறுகதை சிறப்புப் பரிசு பெற்றுள்ளது. பொதிகைச் சாரல் 15வது ஆண்டு விழா சிறுகதைப் போட்டியில் "அம்மாவின் டைரி" என்ற சிறுகதை சிறப்புப் பரிசு பெற்றுள்ளது.

அகில இந்திய வானொலி, தூத்துக்குடியில் "காதலிக்க நேரமில்லை" என்ற சிறுகதையை எழுதி வாசித்துள்ளார். மேலும் அகில இந்திய வானொலி, திருநெல்வேலியில் "சுற்றுச்சூழல் விழிப்புணர்வு" குறித்து பேசிவருகிறார். முத்து மாநகரின் சாதனைப் பெண்களைக் கவுரவிக்கும் விதமாக வழங்கப்படும் "முத்துத் தாரகை விருது 2025" பெற்றுள்ளார்.

உங்களில் ஒருத்தி

அறிவியலே, தொழில்நுட்பமே
உமக்கு நன்றி சொல்கிறேன்
என் பணிகளைப்
பகிர்ந்து கொள்ள
யாரும் முன்வராதபோது
துவைக்கும் இயந்திரமாய்,
அரைக்கும் இயந்திரமாய்,
கழுவும் இயந்திரமாய்,
அழுத்த சமையற்கலனாய்
பல கருவிகள்
உருவாக்கித் தந்து
கல்வி பயில,
பணிக்குச் செல்ல
நேரம் தந்தீர்!
பெண்ணடிமை தீர்க்க வந்த
பெரும் வரமே
அறிவியலே, தொழில்நுட்பமே
உமக்கு நன்றி சொல்கிறேன்.
இப்படிக்கு உங்களில் ஒருத்தி
- மகாலிங்கம்

அழுமூஞ்சி இளவரசி

முனைவர் மெய் சித்ரா
ஆங்காங்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். (குறள் 56)

கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன்கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

(மு வரதராசன்)

இன்றைய வட கொரியாவின் தலைநகரமாய் விளங்கும் நாட்டை, ஒரு காலத்தில், பழங்காலக் கோட்டை நகரான பியாங்யாங் நகரை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குப் பல குழந்தைகள் பிறந்தன. அதில் மிகவும் இளையவள் மிகவும் மென்மையான குணம் கொண்டவளாய் இருந்தாள். சின்னஞ்சிறு விடயங்களுக்கும், மனம் வருந்தி அழுத வண்ணம் இருப்பாள். அவளுடன் பிறந்தவர்கள் அனைவரும் அவளை அழுமூஞ்சி இளவரசி என்று கேலி செய்வர்.

ஒரு நாள் கூட்டம் மிகுந்த தெரு ஒன்றில், சகோதரிகளும் தாயும் பல்லாக்கில் சென்று கொண்டு இருந்தனர். திடீரெனச் சென்று கொண்டு இருந்த பல்லக்கு நின்றது.

பல்லக்குத் தூக்கிகளின் தலைவன், "நாயே... வழி விட்டுச் செல்," என்று கத்தியது அவர்களுக்குக் கேட்டது. இளவரசி அவன் எதற்கு அப்படிக் கத்துகிறான் என்பதைப் பார்ப்பதற்காய் வெளியே தலையை நீட்டிப் பார்த்தாள்.

தெருவின் நடுவில், புழுதியில் ஒரு பிச்சைக்காரச் சிறுவன் படுத்து இருப்பதைக் கண்டாள்.

"ஏய்... பபோ ஒண்டால் வழி விடு," என்று மேலும் உரக்கக் கத்திய தலைவன், அந்தச் சிறுவனை எட்டி உதைத்தான்.

இதைக் கண்ட இளவரசி, அந்தச் சிறுவனுக்காய் வருத்தப்பட்டு அழத் தொடங்கினாள்.

இதைக் கண்ட அவளது சகோதரிகள், ''சரி தான்... அழுமூஞ்சி இளவரசி அழத்தொடங்கி விட்டாள்!'' என்று கேலி செய்தனர். தாய்க்கு மகள் இப்படியே அழுத வண்ணம் இருந்தால் பெரியவளாகும் போது யார் அவளை மணக்க முன் வருவார்கள் என்ற எண்ணம் வருத்தத்தைத் தந்தது.

யாருமற்ற அனாதையான அந்தப் பிச்சைக்காரச் சிறுவன் பபோ ஒண்டால் மலையிலும், காட்டிலும் விலங்குகளுடன் வசிப்பவன். பபோ என்றால் கொரிய மொழியில் முட்டாள் என்று பொருள். அத்தகைய முட்டாளைப் பற்றி மக்கள் மத்தியில் பல கதைகள் கூறப்பட்டு வந்தது. அரசரும் கூட அவனைப் பற்றிச் சில கதைகளைக் கேள்விப்பட்டிருந்தார்.

ஒரு முறை, நாட்டில் புது வருடக் கொண்டாட்டம். அதில் கலந்து கொள்ள இளைய இளவரசி தன் சகோதர சகோதரிகளுடன் அரண்மனைக்கு வந்தாள். தன்னுடைய தந்தையை வணங்கக் குனிந்த போது, எதேச்சையாய் தடுமாறி கீழே விழுந்தாள். உடனே இளவரசியின் கண்களில் நீர் வழியத் துவங்கியது.

''என்ன இளவரசி... என்ன நடந்து விட்டது. இதற்காகப் போய் புது வருடமும் அதுவுமாய் ஏன் அழுகிறாய்?'' என்று அரசர் கேட்டார்.

ஆனால் மகளோ பதில் ஏதும் சொல்லாமல் மேலும் தேம்பித் தேம்பி அழத்துவங்கினாள்.

''சே... என்ன பெண் இவள்! இவள் இப்படியே எதற்கெடுத்தாலும் அழுது கொண்டு இருந்தால், நாளை பிச்சைக்கார பபோ ஒண்டாலுக்குத் தான் மணம் செய்ய வேண்டி வரும்,'' என்று அரசரே கேலி செய்தார்.

இதைக் கேட்ட அரசிக்கோ அதிர்ச்சி. மயக்கமே வந்து விடும் போலிருந்தது.

''புது வருடமும் அதுவுமாய், இப்படிப்பட்ட சொற்களைத் தயவு செய்து சொல்லாதீர்கள்,'' என்று வேகமாய்க் கூறினார்.

அவரது சொற்கள் அந்த முழு வருடத்திற்கும் ஒரு கெட்ட சகுனமாய் அமைந்து விடுமோ என்று எண்ணி வருந்தினார்.

இளவரசி வெட்கித் தலை குனிந்தாள். சபையில் கூடியிருந்த அனைவரும் அரசரின் அந்தக் கேலி சொற்களைக் கேட்டனர். அதனால் அன்று முதல் அழுமூஞ்சி இளவரசி எல்லோராலும் கேலி செய்யப்பட்டாள். பபோ ஒண்டாலின் வருங்கால மனைவி என்று பலமுறை அழைக்கப்பட்டாள்.

இந்தக் கேலிகளைப் பொறுக்க முடியாத இளவரசி எப்போதும் தன்னை அரண்மனை நூலகத்தில் ஒளித்துக் கொண்டாள். கூடுதல் நேரம் தனிமையில் இருந்தாள். தன்னை ஆற்றுப்படுத்திக் கொள்ள, விருப்பப்பட்ட கவிதைகளையும் கதைகளையும் படித்தாள். யாருக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமாய் இப்படித் தன்னுடைய நேரத்தைக் கழித்தாள்.

இளவரசிக்குப் பதினாறு வயதான போது, அரசர் அவளது திருமண ஏற்பாட்டைச் செய்யத் துவங்கினார். கோ என்ற மன்னரின் மகனுக்கு மணம் முடிக்கலாம் என்று முடிவு செய்தார்.

இதைக் கேள்விப்பட்ட இளவரசி, தன்னை ஒரு அரச குடும்பத்தினரின் மருமகளாய் எண்ணிப் பார்த்தாள். மகாராணியான மாமியாரின் பேச்சைக் கேட்டு, பலவிதமான விழாக்களிலும், அரண்மனையிலும் சபைப் பேச்சுக்களைக் கேட்க வேண்டும், ஆட்டம் பாட்டங்களைக் காண வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தாள்.

தனக்கென்று நேரம் கிடைக்குமா, இரகசியமாய் பிடித்த விடயங்களைப் படிக்க இயலுமா என்ற எண்ணங்கள் ஏற்பட்டன. அத்தகைய அரச போக வாழ்க்கையைத் தன்னால் வாழ இயலாது என்ற முடிவுக்கு வந்தாள்.

அதனால் தந்தையிடம் சென்று. "தந்தையே! என்னால் இதை ஒத்துக்கொள்ள முடியாது," என்று அழுகையுடன் சிறிது துணிவுடன், இளவரசி சொன்னாள்.

கோபத்தைக் கண்டு பயந்தாலும், மிகவும் மென்மையாய், "மதிப்பிற்குரிய தந்தையே! என்னைத் தயவு செய்து மன்னியுங்கள். நான் மன்னர் கோவின் மகனை மணப்பதைவிட பபோ ஒண்டாலின் மனைவியாய் ஆக விரும்புகின்றேன்," என்றாள்.

இதைக் கேட்ட அரசருக்குச் சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை. பிறகு, "என்ன பபோ ஒண்டாலின் மனைவியா? முட்டாள்தனமாய்ப் பேசாதே. இது என் ஆணை. நீ மன்னர் கோவின் மகனைத் தான் மணக்க வேண்டும்," என்று மேலும் கோபத்துடன் அரசர் கூறினார்.

"இருந்தாலும் மதிப்பிற்குரிய தந்தையே... நீங்களே கூட ஒரு முறை புது வருடத்தின் போது கூறியதை இப்போது நினைவு படுத்துகிறேன்," என்று பயத்துடன் வாதாடத் துவங்கினாள்.

இதைக் கேட்ட அரசர், மேலும் பயங்கரமாய்க் கோபம் கொண்டு, "போ...போ... அப்படியென்றால் நீ பபோ ஒண்டாலிடமே போ. எங்கள் முகத்தில் முழிக்காதே," என்று இடியென முழங்கினார்.

மகள் இத்தனைப் பேசுவாள் என்று எதிர்பார்க்காததால், வாயடைத்து அமர்ந்திருந்தார் அரசி. அழுமூஞ்சி இளவரசி அவர்களை வணங்கிச் சென்றாள்.

அன்று இரவே, அதிகாலைக்கு முன்னரே, இளவரசி அரண்மனையை விட்டுக் கிளம்பினாள். அவளது தாய் ஒரு சிறிய பையில் சில தங்க நாணயங்களை இட்டு, மகளுக்குச் சீதனமாய்த் தந்தார். அவள் கொரியக் கலாச்சாரத்தின் படி மணப்பெண் அணியும் ஹான்பொக் என்ற ஆடையை அணிந்து கொண்டாள். தனது வாழ்க்கையிலேயே முதன்முறையாய், அரண்மனையை விட்டுத் தனியாய், நடந்து செல்ல முற்பட்டாள்.

பபோ ஒண்டால் பியோனி முகட்டில் வாழ்பவன் என்று கேள்விப்பட்டிருந்தாள்.

அதனால் பியோனி முகட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். பல மணி நேரங்கள் நடந்த பின்பு, சூரியன் மறையும் சமயம் அவள் ஒரு சிறிய குடிசைக்கு அருகே வந்தாள். இரவில் எங்கே செல்வது என்று புரியாமல் பயத்தாலும் ஆயாசத்தாலும், அழுது கொண்டே அங்கிருந்த பாறையின் மேல் அமர்ந்தாள். அப்போது ஒரு கரகரப்பான குரல் ''எதற்காக அழுகிறாய்?'' என்றது.

அதைக் கேட்டு அதிர்ந்து, தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

ஒரு மனிதன் பரட்டைத் தலையுடன், கிழிந்த ஆடைகளுடன் நிற்பதைக் கண்டாள்.

''நான் பபோ ஒண்டாலை மணக்க வந்திருக்கிறேன்,'' என்று மிகவும் மெல்லிய குரலில் இளவரசி கூறினாள்.

''என்னை எதற்காக கேலி செய்கிறாய்?'' என்றான்.

''பபோ ஒண்டால் என்னை மணக்கவில்லை என்றால், எனக்குப் போவதற்கு வேறு இடமே இல்லை. என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டனர்,'' என்று பதிலளித்தாள்.

அவள் உண்மையில் யார் என்பதை அறியாத அவன், தன்னை நம்பி வந்த பெண்ணைக் காக்க எண்ணினான். அவளது விருப்பத்தின் உறுதியைத் தெரிந்து கொண்ட பின்பு, அவள் கண்ணீரைத் துடைத்து, அவளது கைகளைப் பற்றினான்.

இளவரசி மகிழ்ச்சியுடன் அவனைத் தன் கணவனாய் ஏற்றாள். அவனைத் தொடர்ந்து சென்றாள். அவர்கள் இருவரும் காட்டிலேயே தங்கினர்.

ஒண்டால் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடி வந்தான். பழங்களையும் வேர்களையும் எடுத்து வந்தான். இளவரசி தன் கணவனுக்காக நல்ல உடைகளைத் தைத்துக் கொடுத்தாள். கோடை கால முடிவில், இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, மகிழ்ச்சியுடன் வாழக் கற்றுக் கொண்டனர்.

நீளமான, இருண்ட குளிர் நாட்களில் இளவரசி தனக்குப் பிடித்தமான கவிதைகளை ஒண்டாலுக்குச் சொல்லிக் காட்டினாள். பிறகு அவனுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தாள். அவளுக்கு அவன் கற்றுக் கொண்ட விதம் பிரமிப்பைத் தந்தது. எல்லாவற்றையும் வெகு வேகமாய்க் கற்றான். வெகு வேகமாய்ப் புரிந்து கொண்டான். அவன் அன்புடனும் கனிவுடனும் காட்டு விலங்கினங்களுடன் பழகுவதைக் கண்டு வியந்தாள்.

ஏன் கிராம மக்கள் இப்படிப்பட்ட நல்லவனை முட்டாள் என்கிறார்கள்? அவனுடைய உண்மையான குணத்தை அவர்கள் அறியும் வண்ணம் செய்வேன் என்று ஒரு நாள் முடிவு செய்தாள்.

இதைக் கேட்ட ஒண்டால், ''இதற்கெல்லாம் கவலைப்படாதே! நாம் இப்போது மகிழ்ச்சியுடன் இருக்கிறோமா இல்லையா? எனக்கு அதுவே போதும்,'' என்றான்.

''நீங்கள் இந்த இரண்டு தங்க நாணயங்களைக் கொண்டு ஒரு குதிரை வாங்கி வாருங்கள். குதிரை நோஞ்சானாய் இருந்தாலும் பரவாயில்லை, நல்ல சாதி குதிரையாய் மட்டும் இருந்தாலும் போதும்,'' என்று இளவரசி கூறினாள்.

''நான் குதிரை வாங்கச் சென்றால் என்னை எல்லோரும் திட்டுவார்கள், அடிப்பார்கள்,'' என்று அவன் மறுத்தான்.

''இல்லையில்லை, அப்படியெல்லாம் நடக்காது. நீங்கள் இப்போது ரொம்ப மாறிவிட்டீர்கள். அதனால் நீங்கள் யார் என்பதே யாருக்கும் தெரியாது. இப்போது நீங்கள் பிச்சைக்காரன் பபோ ஒண்டால் இல்லை. நானும் அழுமூஞ்சி இல்லை. அதனால் துணிவுடன் போகலாம்,'' என்று கூறி அவனை அனுப்பி வைத்தாள்.

ஒண்டால் சந்தைக்குச் சென்று, ஒரு உயரமான நோஞ்சான் குதிரை ஒன்றை வாங்கி வந்தான். இருவரும் அந்தக் குதிரைக்கு நன்கு தீனி போட்டு, பத்திரமாய் பார்த்துக் கொண்டு வந்தனர். குதிரை நல்ல பலத்துடன் ஓடும் தகுதியைப் பெற்றதும், இளவரசி ஒண்டாலுக்குக் குதிரையேற்றப் பயிற்சி தந்தாள்.

ஒரு வருட பயிற்சிக்குப் பின்னர், ஒரு நாள் இளவரசி ஒண்டாலிடம் ''என் அன்புக் கணவரே... நீங்கள் இப்போது நன்றாகவே குதிரைச் சவாரி செய்கிறீர்கள். வருடத்தின் மூன்றாம் மாதத்தில் வரும் மூன்றாம் நாளில் அரசர் வேட்டைத் திருவிழா ஒன்றை நடத்துவார். இந்த வருடம் நீங்களும் அதில் கலந்து கொள்ள வேண்டும்,'' என்றாள்.

''அரசர்களுடன் நான் வேட்டைத் திருவிழாவில் கலந்து கொள்வதா? என்னால் முடியாது,'' என்று மறுத்தான்.

''நீங்கள் கட்டாயமாய் அதில் நடக்கப் போகும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். வெற்றி பெற்றுத் திரும்ப வேண்டும்,'' என்று உற்சாகப்படுத்தினாள்.

வேட்டை விழாவில், யாருமே பார்த்திராத ஒரு சாதாரண குடிமகன், மற்ற அரச குடும்பத்தினருக்கு இணையாய் பல வித்தைகளைச் செய்து காட்டி, பல போட்டிகளில் வெற்றி பெற்றான். யாரும் அவனை அடையாளம் கண்டு கொள்ளும் முன்னர் மறைந்தும் போனான்.

அந்த விழாவில், அவன் செய்த சாகசச் செயல்களைக் கண்டவர்கள், அதைத் தவிர வேறு எதையும் பேசவில்லை. அந்த வீரனை அறிந்து கொள்ளத் துடித்தனர்.

பிறகு அவர்கள், ஐந்தாம் மாதத்தில் வரும் முழு நிலா நாளன்று நடக்கும் அறிஞர் விழாவிலும் அவன் கலந்துகொள்ளக் கூடும் என்று கணித்தனர். அப்போது அவனைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளலாம் என்று ஆவலுடன் காத்திருக்கத் துவங்கினர்.

ஒண்டாலின் வெற்றியைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தாள் இளவரசி. அடுத்து வரும் அறிஞர் விழாவிலும் அவன் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினாள்.

அதற்காக அவனுக்குத் தேவையான பயிற்சியைக் கொடுத்தாள். சென்ற முறை போலில்லாமல், இம்முறை தானும் விழாவிற்கு வருவேன் என்று அவள் கூறிய ஒரே காரணத்திற்காய், ஒண்டால் அதற்கு ஒப்புக் கொண்டான்.

விழாவில் கலந்து கொள்ள அவர்கள் தலைநகருக்குச் சென்ற போது, வழியெல்லாம் ஆரவாரம் நிறைந்திருந்தது. மேளமும், குழலோசையும் காற்றிலே மிதந்து வந்தன. பல முகமூடியிட்ட நடனக் கலைஞர்களும் உழவர்களும் நடைபாதையில் செல்வோரும் என வீதிகளில் மக்கள் நிறைந்து காணப்பட்டனர்.

மாலையில் அறிஞர் விழா தாமரை மேடையில் நடைபெற்றது. பலரும் கூடியிருந்த அந்தச் சபையில், கவிதைப் போட்டியில் ஒண்டால் கலந்து கொண்டான். அவன் அணிந்திருந்த எளிய உடையைக் கண்ட அரச குடும்பத்தினர், ''சாதாரண மக்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது. அதனால் கலந்து கொள்ளக் கூடாது,'' என்று ஆர்ப்பரித்தனர்.

ஒண்டால் அவர்களிடம் பணிவுடன், ''அப்படியானால் ஏன் பயப்படுகிறீர்கள்? என்னையும் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்,'' என்று கூறி, அவையோரை வாயடைக்கச் செய்தான்.

இறுதியில் ஒண்டாலின் முறை வந்த போது, அவன் தன் எழுது மையைத் தயார் செய்தான். பிறகு எழுதுகோலை மிகவும் லாவகமாய் கையாண்டு, கவிதை வரிகளை அழுத்தமான கோடுகளால் எழுதினான். அவனது கவிதையிலிருந்த அருமையான பொருளும் எளிய அழகிய நடையும் நடுவர்கள் பலரையும் கவர்ந்தது.

போட்டி முடிவில், நடுவர் ஒண்டாலின் கவிதை வெற்றி பெற்றதாய் அறிவித்தார்.

அவனது கவிதையைச் சபையோருக்குப் படித்துக் காட்டினார். அவர் படித்து முடிக்கும் முன்னரே, அனைவரும் கைதட்டிப் பாராட்டினார்கள்.

இளவரசி தன் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவையோர் அனைவருக்கும் மேலாய், அரசர் அவனது கவிதைத் திறனைப் பாராட்டி, பலமாய்க் கைகளைத் தட்டி, ஒண்டாலைப் பரிசு பெற அழைத்தார்.

பரிசைத் தரும் சமயம், அரசர் அவனைப் பார்த்து, "நீ தான் வேட்டை விழாவில் சாகசம் காட்டிய வீரனா?" என்று ஆவலுடன் கேட்டார்.

"ஆம் அரசே... அது நான் தான்," என்று ஒண்டால் மிகுந்த பணிவுடன் பதிலளித்தான்.

"எப்படி உன்னால் அரச குடும்பத்தினரின் கலையில் இவ்வளவு நன்றாய் தேர்ச்சி பெற முடிந்தது?" என்று மற்றொரு கேள்வியையும் கேட்டார்.

"அரசே... நான் கற்ற வித்தைகள் அனைத்திற்கும் என்னுடைய மனைவியே காரணம்," என்றான்.

"அப்படியென்றால் நான் அவளைப் பார்க்க வேண்டும். உன் திறமையை வளர்த்த அவளை ஒரு முறையாவது பார்க்க விரும்புகின்றேன்," என்றார்.

அரசரின் வேண்டுகோளைக் கேட்டு, இளவரசி தாமரை மேடைக்கு வந்து, தன் கணவர் அருகே சென்று நின்றாள். அரசரை நோக்கி வணங்கினாள். அவர் அவளை அடையாளம் கண்டு கொள்ளும் முன்னரே "அரசே... என் கணவர் முன்பு பபோ ஒண்டால் என்று அழைக்கப்பட்டவர்," என்று கூறினாள்.

அனைவரும் ஆச்சரியத்துடன் ஒருவருக்கொருவர் பார்த்துப் பேசிக் கொண்டனர்.

"நாடு கடத்தப்பட்ட இளவரசி திரும்பி வந்து விட்டார்," என்று கூறி மகிழ்ந்தனர்.

அந்தக் குதிரை வீரன் பபோ ஒண்டால், அரசர் நடத்திய கவிதைப் போட்டியிலும் வெற்றி பெற்றான் என்று அவனைப் பாராட்டிப் பேசினர்.

சபையில் இருந்த சலசலப்பை அடுத்து, இறுதியில் அரசர், "என்னுடைய மகள் திரும்ப வந்து விட்டாள். மரியாதைக்குரிய மருமகனை உருவாக்கி வந்து இருக்கிறாள். மகளே நீ என்னை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்திருக்கிறாய். உனக்கு என்ன வேண்டுமோ கேள்," என்று மகளைப் பார்த்து, பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் கேட்டார்.

"மரியாதைக்குரிய தந்தையே! நாங்கள் உங்களுக்குச் சேவை செய்வதையே விரும்புகின்றோம். அதற்கான வாய்ப்பைத் தந்தால் போதும்!" என்று அமைதியுடன் பதிலளித்தாள்.

அரசர் ஒண்டாலைப் பாராட்டி, அரசவைப் பணியில் அமர்த்தினார். அடுத்து வந்த வருடங்களில் ஒண்டால் நாட்டிற்காய் பல வகைகளில் பணி செய்து, மக்களை

மகிழ்ச்சியுடன் வாழச் செய்தான். இளவரசியும் ஒண்டாலும் அரசுப் பணி கிட்டிய போதும், பியோனி மலை முகட்டில் வாழ்வதையே விரும்பினர். அதனால் எத்தனை வேலை இருந்த போதும், அவன் தன் மனைவி குழந்தைகளுடன் பியோனி மலை முகட்டில் மகிழ்ச்சியுடன் அளவளாவி இருக்க மட்டும் தவறியதேயில்லை.

திருக்குறள் வழி குறிப்பு

அழுமூஞ்சி இளவரசி, அரச வாழ்வைத் துறந்து எளியவனை மணந்து, தன்னையும் தன் கணவனையும் காப்பாற்றி, முட்டாளான கணவனை அறிவாளியாகவும் வீரனாகவும் மாற்றி, உறுதி தளராமல் வாழ்ந்த பெண்ணாய், இந்த திருக்குறளுக்கு ஒரு சான்றாய் அமைகிறாள்.

ஹைக்கூ கவிதைகள்

புட்டி நீரருந்தும் அணில்
இன்னும் உயிரோடிருக்கிறது
சிற்றுயிர் நேசம்

2

உயிர் ஒன்றுதான்
பயணம் இரு திசைகளில்
வேரும் செடியும்

3

சுவாசக் காற்று
செவியடைகிறது
புல்லாங்குழல் இசையாக

4

இருள் வந்ததும்/
ஒழிந்து கொண்டது/
நிழல்

5

காலத்தால் அழியாத
ஞாபகமாகி விடுகிறான்
காலமாகியதும்

6

அறைக்கதவு சாத்தினேன்
விடாது துரத்தி வருகிறது
இடுக்கில் வெளிச்சம்/

7

அதிகாலையில் கண்விழித்து
ஆரத் தழுவிக் கொள்கிறது
பூமியை சூரியக்கதிர்கள்

8

மரணத்தின் பின்னும்
புன்னகைதான்
உதிர்ந்த பூவுக்கு

9

பால் நிலவு
மிகத்தெளிவாக
கிளையில் வாலசைக்கும்
குருவி

10

காளான் வீடு
குள்ள மனிதர்களோடு
கனவுலகில் சிறுமி

- Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர் இலங்கை

தொண்டாற்றி இன்பமாக வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி
சென்னை

தொண்டு என்பது மற்றவருக்கு உதவி தேவைப்படும் போது அல்லது பிறர் துன்பம் அடையும்போது அத்துன்பத்தைப் போக்க தங்களால் இயன்றதைச் செய்வது. மனம் விரிந்த நிலையில் அது இயல்பாகிறது.

தன்னலமற்ற தொண்டால் உயர்ந்தவர்கள் மக்கள் மனதில் வாழ்வாங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்தம் புகழ் காலம் கடந்தும் நிலைத்திருக்கிறது.

தற்காலத்தில் மனித நேயம், பிறருக்கு உதவும் குணம், உயிர் இரக்கம் இவையெல்லாம் குறைந்து வருகிறது.

‘அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே’

என்பார் தாயுமானவர்.

‘வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே’

என்றார் பாரதியார்.

தொண்டுள்ளம் கொண்டவர்கள் உலகம் இயங்கக் காரணமானவர்கள்.

‘சமூகத்தின் நன்மைக்காகப் பாடுபடும் நன்மக்கள் தங்களுக்கும் ஒரு விதத்தில் நன்மை செய்துக் கொள்கிறார்கள். பிறர் நலனிற்காகப் பாடுபடுவதன் மூலம், அவர்கள் தங்கள் பக்கம் மகிழ்ச்சி, சுபிட்சம், உடல்நலம் இவற்றை வரவழைத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொருநாள் வேலையும் அவர்களால் ஒளி பெறுகிறது. உலகம் அவர்களால் இயங்கிக் கொண்டிருக்கிறது’ என்கிறார் மேனாட்டறிஞர் ஜேம்ஸ் அல்லன்.

தொண்டே கடமையறம்

ஒவ்வொருவரும் இப்புவியில் பிறந்து, வளர, வாழ, சமுதாயமே காரணமாக இருக்கிறது. உலக மக்களின் உழைப்பாலும் உதவியாலும் தான் வாழ்கிறோம் என்பதை உணர்ந்து அவர்களுக்கு உதவி வாழ்வதே கடமை உணர்ந்த வாழ்வாகும்.

ஒரு பிடி உணவு நமக்குக் கிடைக்க எத்தனை பேர் உழைப்பு தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து பிறருக்கு உதவி வாழ்வது கடமை ஆகும்.

'ஒரு பிடி உணவில் உலக ஒற்றுமையைக் கண்டிடு

உழைப்பால் பதில் உலகுக்குத் தந்திடு'

என்பார் வேதாத்திரி மகிரிசி.

எல்லோருக்கும் உறவினர்

எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி உதவி செய்வதே சிறந்த தொண்டு.

'பலன் எதிர்பாராது கடமை ஆற்றுக களிப்பு உண்டு!' என்பார் அறிஞர் அண்ணா.

'தொண்டு செய்து பழுத்த பழம்' என்று தந்தை பெரியாரைப் போற்றுவர்.

அன்னை தெரசா, மாமா நேரு, தாத்தா காந்தி என அனைவராலும் உறவு முறையோடு அழைக்கப்படுவதை அறியலாம்.

'கடவுள் மீது செலுத்துவது பக்தி. அதே உணர்வு மக்கள் மீது செலுத்தப்படுவதை அன்பு என்கிறோம்.'

'இங்கே வாழ்க்கை குறுகியது. இந்த வாழ்க்கையை ஒருமுறைதான் வாழ்கிறோம். அதை நாம் அழகாக மகிழ்வுடன் நமக்கும் பிறருக்கும் நாட்டுக்கும் பயன்படுமாறு வாழ்ந்துவிட வேண்டும்' என்பார் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி.

நெல்லுக்கு தண்ணீர் இறைக்கும் பொழுது அது வாய்க்கால் வழி சென்று அருகே முளைத்திருக்கும், புற்களுக்கும் கசிந்தூறுவது போல் இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர் இருந்து விடுவாரானால், அவரை முன்னிட்டு மழைவளம் செழிக்கும். எல்லோருக்கும் பயன்படும் சான்றோரைப் பொறுத்துதான் உலக வளம் அமைந்திருக்கிறது என்பார் ஔவையார்.

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லாவொருவர் உளரேல் அவர் பொருட்
டெல்லார்க்கும பெய்யு மழை (மூதுரை - 10)

மரத்தில் பழங்கள் பழுத்துவிட்டால், வௌவால்களை கூவியழைக்கத் தேவையில்லை. பசுங்கன்றுக்குத் தானாகவே பால் சுரக்கும். பசுமாட்டைப்போல் ஒருவன் எல்லாருக்கும் பரிவுடன் உதவி செய்கிறான் என்றால் உலகம் முழுவதும் அவனுடைய உறவினராகி விடுவார்கள்.

‘மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவரு மங்கில்லை – சுரந்தமுதங்
கற்றா தரல்போற் காவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். (நல்வழி – 30)

தானும் வாழ, பிறரும் வாழ நெறிமுறையில் நின்று வாழ்ந்து தம்மிடமுள்ளதை மற்றவர்க்கும் தருபவர்களே உயர்ந்த சாதியினர்.

‘இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்’

என ஔவையார் குறிப்பிடுதல் காணலாம்.

பண்டிகையின் நோக்கம்:

பண்டம் + ஈகை = பண்டிகை. வறியவர்க்கு ஒன்று கொடுப்பதே ஈகை. பண்டிகை நாளில் ஏழை எளியவருக்கு உணவு முதலியன வழங்குதலே பண்டிகை ஆகும்.

‘ஈகைத் திருநாள்’ என இசுலாத்தில் கொண்டாடுவர்.
‘ஈகையுள்ளவனுக்கு எவனும் சிநேகிதன் என்பார் ஏசுபிரான்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!

அன்றைய பாரதத்தின் இழிநிலை, வறுமை, பொறாமை, அழுக்கு மற்றும் தம் சொந்த மக்களையே தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கும் அறியாமை, மிகுந்த மக்களைக் கண்டு வருந்தினார். - சுவாமி விவேகானந்தர்.

சோர்ந்திருந்த இந்திய இளைஞர்களையும், பழமையில் ஊறி அடிமைகளாக இருந்த இந்தியப் பெண்களையும் விழிப்படைய வைக்க எழுச்சி உரைகளையும் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்.

‘பாரதமே விழித்தெழு! உலகிற்கு ஒளியூட்டு!’ என்று முழங்கினார்.

அயர்லாந்தைச் சேர்ந்த மார்க்கரெட் நோபில் எனும் இயற்பெயர் கொண்ட அன்னை நிவேதிதாவை பெண்களுக்கு கல்வி கற்பிக்க இந்தியாவுக்கு அழைத்தார்.

‘சுவாமி விவேகானந்தரின் கொழுந்து விட்டெரியும் உயர் குணமும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ஆன்மாவின் தூய்மையும், அவர் பொருட்டு அவருடைய தாய்த்திருநாட்டின் பணிப் பெண்ணாகத் தன்னை உருமாறச் செய்ததாக அறிவித்தார்’ அன்னை நிவேதிதா.

மகாகவி பாரதியாரின் உள்ளத்தில் பெண் விடுதலைக்கு வித்திட்டவர் அவர். வங்காளத்திலும் கல்கத்தாவிலும் அவருடைய தொண்டு அளப்பரியது. சுவாமி விவேகானந்தரின் சிறந்த சீடராக விளங்கினார்.

‘எல்லோரும் இன்பமாக இருக்கட்டும், எல்லோரும் அமைதி பெறட்டும். எல்லோரும் ஆனந்தமடையட்டுமே என்று மனதில் திரும்ப திரும்ப கூறுங்கள். நீங்களும் நலத்தை அடைவீர்கள். உங்கள் நலத்தையும் இன்பத்தையும் எளிதில் பெருக்கும் வழி, பிறர் இன்புற்று இருக்க உதவுவதுதான் என்பதை நாளடைவில் அறிந்து கொள்வீர்கள்.’’ என்பார் சுவாமி விவேகானந்தர்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

‘சித்’ என்னும் மனதை வென்றவர்கள் சித்தர்கள். அவர்களுடைய வாழ்க்கை நெறி தமிழர் கலையான மரணமிலா பெருவாழ்வாகும். அது மகிழ்போகம், ஈதல், இறவாமை எனும் மூன்று நிலைகளைக் கொண்டது.

1. மகிழ்போகம்

போகம் என்பது துய்த்தல் ஆகும். உணவு, உடலுழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் என்ற ஐவகை செயல்களையும் அளவு முறையோடு துய்த்தல். 1. அலட்சியம் கூடாது. 2. மிகையாக துய்க்கக் கூடாது. 3. இயற்கைக்கு முரணாக அனுபவித்தல் கூடாது. இந்த மூன்று வகையிலும் தவறு செய்யாமல் இருந்தால் நாம் அனுபவிக்கும் எந்த இன்பமும் இன்பமாகவே இருக்கும்.

இந்த உண்மைகளை உணர்ந்து கொண்டு எந்தப் பொருளோடு தொடர்பு கொண்டாலும் அந்தக் கருவி தாங்கும் அளவிற்குதான் உறவு அமைய வேண்டும். அப்பொழுதுதான் அது இனிமையாகவே இருக்கும். அதுவே மகிழ்போகம் ஆகும்.

2. ஈதல்

பிறருக்கு உதவும் மனப்பான்மையை சித்தர்கள் ஈதல் எனும் வார்த்தை மூலம் வெளிப்படுத்தினர். பிற உயிர், பிற மக்கள் துன்பப்படும்போது இயன்றவரை அத்துன்பத்தைத் தீர்க்க உதவ வேண்டும் என்பதுதான் ஈகை, ஈதல் எனப்படுகிறது.

3. இறவாமை

இறவாமை என்பது நீண்ட நாட்கள் உயிர் வாழ்தல் என்பதாகும். உடல் நலம், மனவளத்தோடு வாழ்ந்து உயிரை உடலிலேயே சுவரவிட்டு ஜீவசமாதி அடைவர். உடல், உயிர், மனம் பற்றி நன்கு அறிந்து கொண்டு தனது செயல்பாடுகளை சீரமைத்துக் கொண்டு எந்த நோக்கத்திற்காக உடல் எடுத்து வந்தோமோ அந்த நோக்கம் நிறைவேறும்வரை வாழ்ந்து இறையோடு ஒன்றுதலே மரணமிலா பெருவாழ்வு.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு (திரு. 269)

என தவத்தாலும், பயிற்சியிலும் மரணத்தை வெல்லும் நிலை அடையலாம் என திருவள்ளுவர் குறித்தல் காணலாம்.

துன்பம் போக்கும் தூயநெறி.

பிறருக்கு உதவி செய்து அதனால் பயன் பெற்றவர் மனநிறைவோடு வாழ்த்துவதே ஒருவருக்கு உயர் புகழ் என்பர்.

'கொண்டுவந்த வினைகள் தொண்டு செய்தால் தீரும்'
'நீதிநெறி உணர் மாந்தராக வாழும்
நிலை உணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்'

என்பார் வேதாத்திரி மகரிசி.

சிந்தனையாளர் செயல் திறம்:

சிந்தனையறிவின் சிறப்பே மனிதன்' சிந்தனை என்பது மனம் விரிந்த நிலையில் இயற்கையை அதன் அமைப்பை, இயக்கத்தை, இயக்க ஒழுங்கை அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை அறிந்து கொள்ளக்கூடிய திறன், ஆர்வம், செயல் இதுதான் சிந்தனை என்பார் வேதாத்திரி மகரிசி.

சிந்தனையால் உயர்ந்தவர்களே கவிஞர்கள். எழுத்தாளர்கள், படைப்பாளிகள் அறிஞர்கள் ஆவர்.

மனம் விரிந்து ஆழ்ந்து இருக்கும்போது பிரபஞ்சத்தின் எண்ணங்கள் அவர்களை அடைந்து ஒரு தீர்வை நாடும்.

'ரவி (சூரியன்) காணாததை கவி காண்கிறான்' என்பர். சிந்தனை விரிந்து அன்பும் கருணையுமாய் உலகுக்கு தொண்டாற்றும் எண்ணம் உண்டாகிறது.

இறையுணர்வு பெற்றவர்களே படைப்பாளிகள் சமுதாய அக்கறை அவர்தம் படைப்பில் வெளிப்படும்.

பலர் கருத்தும் கவிஞனின் அறிவில் பிரதிபலிக்கும்.

'பாட்டெழுதும் பழக்கமுளான் அறிவு நன்றாய்ப்
பண்பட்டுப் பற்றறற நிலை யடைந்தால்
நாட்டு மக்கள் கஷ்டம் அவனறிவில் தோன்றும்
நல்வாழ்வுக் கேற்ற முறையனைத்தும் தோன்றும்
மேட்டுளநீர் பள்ளம் போய்ச் சேர்தல் போல
மேதினியோர் ஆராய்வும் முடிவும் தோன்றும்
ஏட்டினிலேகை, எண்ணம் அகண்டா காரம்
இயற்கை ரகசியம் மலர்ந்து எழுத்தாய் மாறும்

எனபார் வேதாத்திரி மகரிசி.

‘இந்த நாட்டுக்கு ஒரு விடிவு வரவேண்டும் என்று தீவிரத்துடன் நாம் எண்ணினால் போதும். அத்தகைய தாகம் கொண்டோர் உள்ளமெல்லாம் அந்த எண்ணம் நிறையும்’ என்பார் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி.

தெய்வம் துணை நிற்கும்

கடமையைச் செய்வதற்கு சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல் மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

கருமம் செயஒருவன் கைதூரவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல்’ (திரு. 1021)

குடியை உயரச்செய்வேன் என்று முயலும் ஒருவனுக்கு தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு தானே முன்வந்து துணை செய்யும் என்பார் திருவள்ளுவர்.

‘குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (திரு. 1023)
‘வாழ்வதனை முற்றுணர்ந்ததை அமைதி வெற்றி
வழிகண்டு வாழவைக்கும் பேரறமே தொண்டு’

‘‘வயது, வாழ்வு, கல்வி, செயல்திறம், அறிவின் நுட்பம், பொருள் வளம், செல்வாக்கு இவற்றில் எங்கு, எப்படி, எவ்விடத்தில் இருக்கிறாய் என்பதை கணித்துக் கொண்டு, ஐவகை கடமைகளில் தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகத்துக்கு என்ன நன்மை செய்ய முடியும் எனதிட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் இன்பம் பெருகும்’ என்பார் வேதாத்திரி மகரிசி.

‘எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் இந்த ஓர் உண்மையை உணர்ந்தேன். கடவுள் ஒவ்வொரு உயிரிலும் நிறைந்துள்ளார். அதைத் தவிர வேறு கடவுள் இல்லை. உயிர்களுக்கு சேவை செய்பவன் உலக நாயகனுக்குச் சேவை செய்தவனாகிறான்.’ என்பார் சுவாமி விவேகானந்தர்.

வாழ்க வையகம்! வாழ்க வையகம்! என்று மனதில் எப்போதும் கூறிக் கொண்டிருப்பது உலக அமைதிக்கு வழி வகுக்கும்.

தொண்டாற்றி இன்பமாக வாழ்க!

கடற்கரையில் ஒரு புதுவித ஜோடி



கதையாசிரியர்: ஆர்.சூடாமணி
கதைத்தொகுப்பு: சமூக நீதி

கிழவி தன் கறுப்பு நிற ப்ரீமியர் பத்மினியின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தாள். தனியாக இருந்தாள். கதவைத் திறந்து வைத்துக் கொண்டு காற்று வாங்கிக் கொண்டிருந்தாள். தண்ணீர் ஒற்றைக் காலடியில் வைத்திருந்தாள்.

மெரீனா கடற்கரையில் இன்று நல்ல காற்று. தினம் இப்படி இருக்கும் என்று நம்ப முடியாது. சில மாலை நேரங்களில் கதவடைத்த அறைபோல் கடற்கரையே புழுக்கமாயிருக்கும். வெளிறிய வானத்திலிருந்து காற்றுக்குப் பதில் அனல் இறங்கும். கழுத்தும் முகமும் வேர்வையாய்ப் பெருகும். 'ராத்திரி மழை பெய்யப் போகுது' என்று மனசுக்கு லாலிபாப் தந்து ஆறுதலுறுத்த வேண்டி இருக்கும். இன்று அப்படியில்லை. உண்மையாகவே இரண்டு நாள் நல்ல மழை பெய்திருந்த ஈரத்தின் குளிர்ச்சி, காற்றில் விரவியிருந்தது. தன்மையாய்க் கிழ உடலுக்குச் சாமரம் வீசியது. மழைக்கால இருளும் சூழ ஆரம்பித்திருந்தது. அல்லது மாலை ஆறரை மணியின் இருளாகவும் இருக்கலாம். "ஆறரையா?" மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். ஆறரைக்கு எட்டு நிமிஷம் இருந்தது. கடற்கரையில் வழக்கமான கூட்டம் இல்லை. சுண்டல் விற்கும் பொடிசுகளைக் கூடக் காணோம். மழைப் பயத்தாலோ அல்லது இருட்டி விட்டதாலோ பெரும்பாலும் மக்கள் கிளம்பிப் போய்விட்டிருந்தார்கள். வெறிச்சோடிய மணற்பரப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பொறுக்கி எடுக்கலாம் போல தலைகள்.

அவனும் இருந்தான். இளைஞன். சாயம் போன பழுப்பு நிற பான்ட் அணிந்திருந்தான். "இன்" பண்ணிய முழுக்கை சாம்பல் நிறச் சட்டை, ஒரு காலத்தில் வெள்ளையாய் இருந்திருக்கலாம். சட்டைக் கைகளை மடக்கி விட்டிருந்தான். ஒட்டு மீசை, ஒட்டிய தாடைகள், சராசரிக்கு மேல் உயரம்; ஒல்லியோ – பருமனோ இல்லாத உடல்வாகு. அவன் இங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருந்ததைக் கிழவி முன்னமே கவனித்திருந்தாள். சற்று நேரம் முன்பு வரை அவள் காருக்கருகில் ஒரு யமாஹா பைக்கில் இரு இளம் பெண்கள் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் பையலுக்கு அங்கேயே திருட்டுப் பார்வை. அந்தப் பக்கமாய் வாக்கிங் செய்கிறவன் மாதிரி முன்னேயும் பின்னேயுமாய் நடை போட்டுக் கொண்டிருந்தான். அவ்வப்போது ஓரக் கண்ணால் கிழவியையும் பார்த்துக் கொண்டான். இளசுகளிடம் வம்பு செய்ய முடியாமல் கிழடு ஒன்று பக்கத்தில் இருப்பது அவனுக்கு சுத்தமாய்ப் பிடிக்கவில்லை என்று தோன்றியது.

இந்த அசடுகள், இறுக்கிப் பிடிக்கும் பனியன்களின் பிரக்ஞை இல்லாமல், கண்ட கழிசடைகளின் கண்களுக்கு விருந்தாய் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறதுகளே! சினிமா பற்றிய பேச்சாயிருக்கும். அதுதான் அத்தனை லயிப்பு. கடற்கரையில மனித நடமாட்டம் குறைந்து வருகிறது என்ற எச்சரிக்கை கூட இல்லாமல்... இருட்டு நேரம் வேறு. என்ன பைத்தியக்காரத் துணிச்சல்! என்னதான் மாடர்ன் என்றாலும் பெண்மைக்குள் எப்போதும் சிவப்புக் கண் விழித்திருக்க வேண்டாமோ?

அந்தப் பயல் இன்னும் இங்கேயே சுற்றிக்கொண்டிருந்தான்.

ஒரு தீர்மானத்துடன் கிழவி காரை விட்டிறங்கி அந்தப் பெண்களை அணுகினாள்.

"எக்ஸ்கியூஸ் மீ."

தலை நரைத்து முகத்தில் கோடுகளுடன் கைத்தறிப் புடவை சுற்றிய ஒரு கிழ வடிவம் சாந்தி நிகேதன் ஹேண்ட்பாகும் ஷோலாப்பூர் சப்பல்களுமாய் ஆங்கிலம் பேசக் கேட்ட அதிர்ச்சியில், பேசிக் கொண்டிருந்தவர்கள் வாயில் "பிரசாந்த்..." பாதியில் நின்றார்.

"நான் சொல்றத தப்பா எடுத்துக்காதீங்க யங் லேடீஸ். உங்களுக்குப் பாட்டியாயிருக்கக் கூடிய வயசு எனக்கு. உங்க நல்லதுக்காக ஒன்று சொல்றேன்..."

"என்ன, ஜீஸஸ் வரப் போறாரா?" என்றாள் ஒருத்தி சீரியஸான முகத்துடன். இன்னொருத்தி சிரமப்பட்டுச் சிரிக்காமல் இருந்தாள்.

"சமத்து சொட்டுது. கிண்டல் பண்ணாலும் பொருத்தமாப் பண்ணணும். நெத்தியில் கால் ரூபா அளவுக்கு இருக்குற குங்குமப் பொட்டைப் பார்க்கமா பேசறீங்களே. இவ்வளவுதானா உங்க கவன சக்தி? போகுது. இப்ப நான் சொல்றதையாச்சும் கவனமா கேளுங்க. அதோ அங்க பாருங்க. தீவட்டித்தடியன் ஒருத்தன் இங்கயே சுத்திக்கிட்டிருக்கான். நான் ரொம்ப நேரமா கவனிக்கறேன். பயல் உங்களத்தான் டாவடிக்கறான். இருட்டிட்டு வருது. ஆள் நடமாட்டம் அதிகமில்லே. வம்பை விலைக்கு சேதமில்லாம வீடு போய்ச் சேருங்கம்மா குழந்தைகளா. பிரசாந்த் விமர்சனத்தை வீட்ல வச்சிக்கலாம். அதுக்குள்ள அவருக்கு ஒண்ணும் வயசாயிடாது."

அந்த "டாவடிக்கறான்" என்ற அருமையான சொற்பிரயோகம். அவள் வெறும் பஞ்சாங்கமல்ல ; இன்றைய பிரக்ஞை உள்ள நாகரிகப் பாட்டி என்று உணர்த்தியிருக்க வேண்டும். ஒரு கணம் ஆராய்ச்சியுடன் அவளை நிமிர்ந்து பார்த்த இளம் பெண்கள் தலை திருப்பி நோக்கினார்கள். "தீவட்டித் தடியன்" இவர்கள் மீது பதிந்திருந்த கண்களைச் சட்டென்று வேறெதையோ பார்ப்பது போலத் திருப்பிக் கொண்டதைக் கவனித்த போது முகங்களில் கலவரம் தெரிந்தது.

"ம்.ம் கிளம்புங்கடியம்மா. பாட்டி சொல்லைத் தட்டாதேண்றது வெறும் சினிமா மட்டும் இல்லே."

“ஷி இஸ் ரைட், சுசி. வா, போயிடலாம்.”

“சரிடி. நாங்க போயிடறோம் பாட்டி, தாங்ஸ்.”

“வெல்கம்.”

அந்த மறுமொழி கேட்டு மீண்டும் ஒரு சிறிய ஆச்சரியத்துடன் மறு கணம் இரு பெண்களும் பைக்கில் சிட்டாய்ப் பறந்து மறைந்தார்கள். கிழவி மிதப்பாய் புன்னகை செய்து கொண்டாள். தடியன் மேல் திருப்தியுடன் ஒரு பார்வை வீசிவிட்டு, திரும்பி வந்து காரில் உட்கார்ந்தாள்.

இதெல்லாம் முடிந்து சிறிது நேரம் ஆகியிருந்தது. பயல் இன்னும் ஏன் இடத்தைக் காலி பண்ணவில்லை? இங்கேயே சுற்றிக் கொண்டிருக்க, வேறு யாரும் இளம் பெண்கள் கண்களில் படவில்லையே?

மூன்று ஆண்கள் வானத்தைப் பார்த்து, “இன்னிக்கும் மழை வரும்” என்று

பேசியபடி, செருப்பு சரசரக்க விரைந்து கடந்து சென்றார்கள்.

கிழவி கவனித்தாள். பயல் தலை தெரியவில்லை. ஒரு வழியாய்ப் போய்த் தொலைந்தானா? அப்பாடா, தானும் கிளம்ப வேண்டியதுதான்.

இந்த ‘பார்க்கிங்’ பகுதியில் அவள் காரைத் தவிர வேறு வாகனங்கள் இல்லை. அவள் வந்த போது இங்கிருந்த இரண்டு டூரிஸ்ட் பஸ்களும் ஓர் ஊதா நிற மாருதியும் மூன்று பைக்குகளும் எப்போதோ போய்விட்டிருந்தன. அந்தப் பெண்களும் போன பின்பு வேறு வாகனங்களில்லை.

சில்லென்று அடித்த காற்றில் நரைமுடி படபடத்தது. கையால் சரிப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். தலையைத் திருப்பினாள். வியப்புற்றாள். அவள் கார் பக்கத்திலேயே முளைத்திருந்தான் அந்த இளைஞன்.

திறந்திருந்த கார் கதவின் மேல் லேசாய் சாய்ந்த படி அவளையே பார்த்தான். உதடுகளில் வினோதமான புன்னகை. அந்த அருகாமையில் ஷர்ட்டின் லேசான வியர்வை வாடை அடித்தது.

ஏன் இங்கே வந்து நிற்கிறான்? அந்தப் பெண்களை அப்புறப்படுத்தி விட்டாளென்ற ஆத்திரத்தில் அவளிடம் கூச்சலிட வந்திருக்கிறானா? ஜிவ்வென்ற கோபடம் இழை காட்டியது.

“யாருப்பாநீ? எதுக்காக இங்க வந்து நின்னுட்டிருக்கே? உன் வேலையப் பார்த்துக்கிட்டுப் போ.”

"என் வேலையத்தான் பார்த்துக்கிட்டுப் போறேன்." நாகரிகக் குரல். உரக்காத, ஆனால் தெளிவான தொனி. மறுபடியும் அந்தப் புன்னகை. "ஏன் பெர்சு, உன் கூட யார் வந்திருக்காங்க? புருஷனா? புள்ளயா? பேரனா?

அவள் பேச்சின்றி வெறித்தாள்.

"சொல்லு பெர்சு, யார் வந்திருக்காங்க? சமுத்திரத்துல கால் நினைக்கப் போய்ட்டாங்களா, இங்க உன்னை தனியாவிட்டுட்டு?"

கோபத்தை மீறிக் கலக்கம் எழுந்தது. கண் எட்டும் தூரம் வரை, தான் தனியாக இருப்பது உறைத்தது. எதையும் காட்டிக்கொள்ளாமல் தைரிய நகலுடன் பேசினாள்.

"ஏய் யாருடா நீ? எதுக்கு இங்க வந்து அநாவசியமா கலாட்டா பண்றே? மரியாதையா போயிடு."

"இல்லாட்டி என்ன செய்வே?"

கிழவியின் வாய் உலர்ந்தது. இளைஞன் கையில் திடீரென்று பளீரிடும் அந்த மின்னல் கத்தி, இடது சட்டைக் கை மடிப்பு பிரித்துவிடப்பட்டிருந்தது. எப்படிச் செய்தான் இமை நேரத்தில்-

"உன் புருஷனோ, புள்ளையோ, பேரனோ இல்ல. எல்லாருமோ திரும்பி வரதுக்குள்ள நான் என் வேலைய முடிச்சுக்கிட்டுப் போயிடறேன். நோ, நோ, நோ பயந்துக்காத பெர்சு. நான் சொல்றபடி கேட்டியானா உன்னை ஒண்ணும் செய்யமாட்டேன். முதல்ல, கொஞ்சம் அந்த சைடுக்கு தள்ளி உக்காரு. நான் உள்ள ஏறி உன் பக்கத்துல உக்காந்துக்கறேன். ஒருத்தர் ரெண்டு பேர் எதிர்க்க நடந்து போறவங்களுக்கு அப்பத்தான் சந்தேகம் வராது."

அவன் சரேலென்று பின் இருக்கையில் அவள் பக்கத்தில் ஏறி அமர்ந்து கதவை மூடி இரு கதவுகளையும் "லாக்" செய்தான். வெளியிலிருந்து பார்ப்பவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் அவன் இடது கை கத்தியோடு அவள் முதுகுக்குப் பின் இருந்தது.

"முனை உறுத்துதில்ல பெர்சு? ஜாக்கிரதை. நீ ஏதானும் சத்தம் போட்டு கலாட்டா பண்ணினே, முனையோடு முழுக்கத்தியும் உன் உடம்புக்குள்ள பூந்துடும்."

பயங்கரக் கனவு காண்பது போல் இருந்தது. ஏதோ திகில் படம் டி.வி.யில் பார்ப்பது போலிருந்தது. அவளும் ஒரு பாத்திரம். கதை தெரியாமல் பங்கேற்கும் பாத்திரம். எப்படி முடியப் போகிறது?

நரை மயிர்க்கால்களிலிருந்து வெப்ப அலைகளாய் வியர்வை பெருக்கெடுத்தது.

"ஒரு வேடிக்கை தெரியுமா பெர்சு? உன் கார் பக்கத்துல பைக் மேலே ரெண்டு பொண்ணு உக்காந்திருந்தாங்க இல்லே? அவங்க இருக்கறபோது எப்படி உன்னை நெருங்கி வந்து மிரட்டறது அப்படின்னு எனக்கு ஒரே டென்ஷன். இந்த நாள் பொண்ணுங்க வெவரமானவங்க. சந்தேகமான ஆளுனு தோணிச்சுன்னா அப்படியே பாஞ்சு வந்து ஆளுக்கு நாலு கராத்தே உதை உதைச்சு போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்தாலும் கொடுத்துடுவாங்க. என்னடா செய்யறதுன்னு யோசனையோடு குறுக்கும் நெடுக்குமா நடந்துகிட்டே இருந்தேன். அவங்களோ கிளம்பற வழியாத் தெரியல. அப்புறம் என் அதிர்ஷ்டம்; நீயே அவங்களண்ட போய் ஏதோ சொல்லி விரட்டியடிச்சிட்டே!" மறுபடியும் சிரித்தான்.

அவள் அதிர்ச்சியுற்றாள். அட ஈஸ்வரா, இப்படி ஒரு விதி விளையாட்டா? தானே தன் தலையில் மண் அள்ளிப் போட்டுக் கொண்டு... இன்று அவளுக்கு ஆபத்து என்பது

விதியின் தீர்மானம் போல் இருக்கிறது. இனி பயந்து ஆவதொன்றுமில்லை.

"சரி பெர்சு, விஷயத்துக்கு வருவோம்..."

"இந்தாப்பா, பேச்சுக்குப் பேச்சு அது என்ன, ஏளனமாய் 'பெர்சு'? பெரியவங்களா ஆகறது ஒரு குத்தமா? மனுஷன் ஆயுசை எப்படியெல்லாம் நீட்டிக்கலாம்னு ஒரு பக்கம் அறிஞர்கள் மாஞ்சு மாஞ்சு ஆராய்ச்சி பண்றாங்க. கட்டுரை எழுதறாங்க. இன்னொரு பக்கம் வயசாளின்னா கிண்டலா? நீ கிழவனா ஆகவே மாட்டியா? ஒரு நாள் நீயும் 'பெர்சு' ஆகமாட்டியா? ஒருவேளை அற்பாயுசுலேயே செத்துப்போயிடலாம்னு ஏதானும் சங்கல்பம் பண்ணியிருக்கிறயா என்ன?"

அவன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்.

"அட, பலே கிழவியாயிருக்கியே! பெர்சுங்கள்ளாம் கூட இப்படிப் பேச முடியுமா? சரி. இனிமே பெர்சுன்னு கூப்பிடலே. அதுக்காக உன்னை விட்டுடப் போறேன்னு அர்த்தமில்ல."

அவளுக்கு மறுபடியும் பயம் பற்றியது. தொலைவில் கடலலைகள் இரைச்சல். மணல்மேல் ஒரு சிலர் தென்பட்டார்கள். இங்கு கார் நிறுத்தியிருந்த இடத்துக்கு எதிராக சிலர் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். கார்மீதும் இரண்டொரு பார்வைகள் பட்டன. பாட்டியும் பேரனும் அழகான குடும்பக் காட்சி. இந்த நாளிலும் இப்படியொரு பாசமுள்ள பேரனா என்று வியந்திருப்பார்கள் ஒருவேளை.

கூச்சல் போடலாமா? கொலை கொலை என்று கத்தலாமா? வாயைத் திறப்பதற்குள் கூர் முனை ஒன்று முதுகில் உரசியது. திறக்க இருந்த வாய் மூடிக் கொண்டது.

அவர்கள் கடந்து போய்விட்டார்கள். கடற்கரையில் இப்போது ஈ, காக்காய் இல்லை. இருட்டில் அழுத்தம் கூடியிருந்தது. மப்பு மூடிய இரவின் சோடியம் வேப்பர்

விளக்கொளியை அது சட்டை செய்யவில்லை. சிலுசிலுவென்ற காற்றினாலோ, பயத்தாலோ கிழ உடம்பு முள்குத்தி நின்றது.

"ஏண்டாப்பா உனக்குப் பாட்டியே கிடையாதா? இந்த அக்கிரமம் பண்றியே!"

"நிச்சயம் நீ புது டைப்தான் ஆயா, வம்பு பண்ற பசங்களண்டை பொண்ணுங்க உனக்கு அக்கா, தங்கச்சி கிடையாதான்னு கேட்பாங்க. நீ என்ன, உனக்குப் பாட்டி கிடையாதான்னு கேக்கற?"

"ஒரு பாட்டியத்தான நீ மிரட்டிகிட்டிருக்கே. அதுவும் தவிர, இதுதான் சரியான கேள்வி. எல்லாப் பசங்களுக்குமே அக்கா, தங்கச்சி இருக்கணும்னு அவசியமில்லே. ஆனா உலகத்துல ஒவ்வொருத்தருக்கும் ரெண்டு பாட்டி இருந்துதானே ஆகணும்."

அவன் சிரித்தான். "கில்லாடி ஆயா நீ, ஆமா உன் ஆளுங்க என்ன இன்னும் திரும்பி வரல்லே? இருட்டி இவ்வளவு நேரத்துக்கப்புறமுமா ஒரு வயசான பொம்பளயை தனியா விட்டுட்டு தண்ணியில அளைஞ்சி கிட்டிருப்பாங்க?"

கிழவி பேசவில்லை. அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான். "ஓ தனியாத்தான் வந்திருக்கியா?" மௌனம். "குருட்டு தைரியம்தான். அப்போ கார் ஓட்டத் தெரியும்னு சொல்லு." மௌனம். "பின்ன ஏன் பின் சீட்டில் உட்கார்ந்திருக்கே?" "காத்து வாங்கணும். அதுக்காக முன் சீட்டில் கதவைத் திறந்து உக்காந்திருந்தா கார் லைட் கண்ணைக் குத்தாதா? என் கூட பூனை – எலி விளையாட்டு விளையாடாதேப்பா. கையெடுத்துக் கும்பிடறேன். இந்தக் கிழவிக்குத் தாங்காது. உனக்கு என்ன வேணும்?"

"ஒரு கிழவிகிட்ட என்ன வேண்டியிருக்கும்? நகை, பணம், இல்லாட்டி உயிர்." காத்து வாங்க வந்து உக்காந்த இடத்துல நகைக்கும் பணத்துக்கும் எங்கே போக? காத்ரேஜ் பீரோவா கொண்டு வந்திருக்கேன்?" "இருக்கறதைக் கொடுத்தால் போதும். அதோ உன் காதுல பெரிசா தங்கக் கம்மல் மின்னுதே. உனக்குத் தேவையில்லாத கனம். அப்புறம் கழுத்துல தங்கச் செயின். மூணு பவுன் தேறுமா?" வெடுக்கென்று செயினை இழுத்துப் பார்த்துக் கையில் எடையைக் கணித்தான். "தேறும். கையில் ரிஸ்ட்வாட்ச் வேற கட்டியிருக்கே. க்வார்ட்சா? நல்ல விலை போகும். இன்னொரு கையில் தங்க வளையல்."

"நகையெல்லாம் கவரிங்." "அதை நான் பார்த்துக்கறேன். அப்புறம் ஹேண்ட் பாக். பலே, ஸ்டைலான ஆயாதான். ஹேண்ட் பேக் காலியாவா இருக்கப் போகுது? பேரனுக்காக ஏதேனும் கொண்டு வந்திருப்பியே?" அவசரமாய் தொடைக்கடியில் மறைத்துக் கொள்ள முயன்ற கைப்பையை உரிமையாய் வெளியே இழுத்து, திறந்தான். இந்தத் தங்கக் கம்மலும் செயினும் வளையும் கடிகாரமும் பார்த்துவிட்டுத்தானா அவளைக் குறி வைத்திருந்தான்? கடங்காரன்! திருட்டு ராஸ்கல்! இன்று உயிரோடு தப்பிச் சென்றால் நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான்.

கார் விளக்கை ஏற்றிக் கொண்டு கைப்பையில் இருந்தவற்றை அவன் ஆராய்ந்து கொண்டிருந்தான். "பேரு, அட்ரஸ் – கிழவிங்களுக்குக் கூட சரோஜான்னு பேர் இருக்குமா என்ன? டிரைவிங் லைசென்ஸ், கார் சாவி, சின்னப் பொட்டலத்தில் ஏதோ மாத்திரை, இன்னொரு பொட்டலத்தில் குங்குமம், ஒரு கைக்குட்டை, பால்பாயிண்ட் பேனா, கொஞ்சம் வெத்துக் காகிதம்... பணமே இல்லையே?" அவள் பேசாதிருந்தாள். "ஆ. இதென்ன இன்னொரு ஜிப்? அட, இந்தப் பையில் நோட்டுங்கதான்! ஒருநூறு, ஒரு அம்பது. இவ்வளவுதானா? காரெல்லாம் வச்சிருக்க, ஒரு ஆயிரமாவது கொண்டுவரக் கூடாது?" உதட்டைப் பிதுக்கினான். "கஞ்சப் பாட்டி! போகுது ; அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்."

"பாதி வழில திடீர்னு கார்ல பெட்ரோல் தீர்ந்து போயிட்டா அஞ்சு லிட்டராவது போட்டுக்கிட்டு போயிடலாம்னுதான்."

"அதான் முன்யோசனையுள்ள ஆயாவுக்கு அழகு. இப்போ பேரனுக்கு உதவுது பாரு! பையிலேர்ந்து பணத்தை மட்டும் எடுத்துக்கறேன் ஆயா?" விளக்கை அணைத்துவிட்டு நோட்டுகளை பான்ட் பாக்கெட்டினுள் போட்டுக் கொண்டு மற்ற எதையும் எடுக்காமல் ஹேண்ட் பேகை மூடி அவளிடம் கொடுத்தான். "அதென்ன, காலண்டை ஏதோ பளபளக்குது? ஓ, தண்ணி பாட்டில்தானா? சுத்தமான வீட்டுக் குடிநீராக்கும்! வச்சிக்க. சரி ஆயா, சத்தமில்லாம நகைங்களையும் ரிஸ்ட் வாட்சையும் கழட்டிக் குடு. நான் போயிடறேன். நீயும் வீட்டுக்குப் போவாணாமா? உன் புருஷனும் புள்ளயும் பேரனும் கவலைப்படுவாங்களில்ல?"

கிழவி தலை குனிந்து அசையாமல் உட்கார்ந்திருந்தாள். "ம் ம், சீக்கிரமாக கழட்டிக் குடு கிழவி, எனக்கு நேரமாகுது. இன்னும் ரொம்ப நேரம் என் பொறுமை நிக்காது."

கிழவி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். காருக்குள் மங்கலாய் விழுந்த கடற்கரை விளக்கின் ஒளியில் அவன் சில கணங்கள் அந்தப் பார்வையை எதிர்கொண்டான். பிறகு கண்களை விலக்கிக் கொண்டான். "என்னை அப்படி உருக்கமா பார்க்காதே ஆயா. ஒண்ணும் பிரயோஜனமில்லை. சீக்கிரம் நகைங்களும் வாட்சும் குடுத்துட்டியானா நம்ம ரெண்டு பேருக்குமே நல்லது." கிழவி மௌனமாய் கைக்கடிகாரத்தைக் கழற்றினாள். வளையலைக் கழற்றினாள். கழுத்துச் சங்கிலியைக் கழற்றினாள். காதுக் கம்மல்களைக் கழற்றினாள். எல்லாவற்றையும் உள்ளங்கையில் வைத்து அவனிடம் நீட்டினாள். "துண்டு துண்டாயிருந்தா எப்படி எடுத்துட்டுப் போறது? ஒண்ணு கீழே விழுந்தாக் கூடத் தெரியாது. கர்சீஃப் வச்சிருக்கயில்ல? அதில் சுத்திக் கொடு." சுற்றி முடிச்சுப் போட்டுக் கொடுத்தாள்.

அவன் வாங்கினான். பான்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். கத்தியை மடக்கி, பிரித்து விட்டிருந்த சட்டைக் கையில் வைத்து மறுபடியும் சுருட்டி மடித்துக் கொண்டான். கார் கதவைத் திறந்துகொண்டு இறங்கினான். அவளைப் பார்த்துத் தலையசைத்தான்.

"போய் வரேன் ஆயா. குட் நைட். நைஸ் டு ஹவாவ் மெட் யு."

அவன் வேகமாய் நடந்து சிறிது தூரம் சென்று விட்டான். காற்று, விட்டு விட்டுச் சுழன்று வீசியது. மேக அடர்த்தியில் நட்சத்திரங்கள் மறைந்து கொண்டிருந்தன. திடீரென்று பின்னாலிருந்து அவள் குரல். தொலைவினால் பலவீனமாய் இருந்தாலும் இயன்ற வரையில் உரக்க அழைத்த அவசரக்குரல். "இந்தாப்பா... இந்தாப்பா... பையா... யங்மேன், உன்னைத் தான். ஒரு நிமிஷம் நில்லேன் ப்ளீஸ்!" அவன் நின்று திரும்பினான். நாலடி முன்னால் வந்தான். "என்ன ஆயா, ஏதானும் ட்ரிக் செய்யாலாம்னு பார்க்கிறியா? என்னாகும் தெரியுமில்ல?"

மடித்த சட்டைக் கையைப் பிரிக்க முனைந்தான். "இங்கே ரெண்டாம் பேர் கிடையாது, கவனமிருக்கட்டும்." "இல்லேப்பா, அபடியெல்லாம் ஒண்ணுமில்ல." "பின்னே என்ன?"

"கொஞ்சம்... கொஞ்சம் அந்த கடிகாரத்தில் மணி பார்த்துச் சொல்றியா? ஏழரை மணிக்கு நான் என் பி.ப்பி மாத்திரை சாப்பிடணும் நேரப்படி அந்த மாத்திரையை முழுங்காட்டி ரத்த அழுத்தம் எகிறிடும். டாக்டர் ரொம்ப ஜாக்கிரதையாய் இருக்கணும்னு சொல்லியிருக்கார்."

கெஞ்சலாய் வந்த குரல். கண்களும் கெஞ்சியிருக்கும் மப்பலான வெளிச்சத்தில் அவனால் தெளிவாய்ப் பார்க்க முடியவில்லை. அவள் கிழக் கண்களுக்கும் அவன் முகபாவம் சரியாய்ப் பிடிப்படவில்லை. அவன் தன்னையே சிறிது நேரம் உற்றுப் பார்ப்பது மட்டும் தெரிந்தது. அவன் நெருங்கி வந்தான். கார் கதவைத் திறந்தான். பான்ட் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை வெளியே இழுத்து முடிச்சைப் பிரித்து கடிகாரத்தை எடுத்து, கார் விளக்கை ஏற்றி அதனடியில் பிடித்துப் பார்த்தான்.

"ஏழு நாப்பது, கொஞ்சம் லேட். பரவாயில்லே." கைப்பையிலிருந்து மாத்திரைப் பொட்டலத்தைப் பிரித்து மாத்திரையை எடுத்துக் கொண்டாள். வாயில் போட்டுக் கொண்டு பிளாஸ்டிக் பாட்டிலைத் திறந்து தண்ணீரோடு சேர்த்து மாத்திரையை விழுங்கினாள். நிமிர்ந்து அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள். "ரொம்ப தாங்ஸ்ப்பா." அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் நிதானமாய் மீண்டும் காரில் ஏறி அமர்ந்தான். "என்னப்பா...? எ... எதுக்கு...? அவன் ஏதும் பேசாமல் அவள் கையை மென்மையாய்ப் பற்றி எடுத்து கடிகாரத்தை அவள் மணிக்கட்டில் கட்டிவிட்டான். நகைகளை மறுபடியும் கைக்குட்டையில் முடிந்து அவள் ஹேண்ட்பேக்கினுள் வைத்தான். தன்பான்ட் பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாய் நோட்டையும் ஐம்பது ரூபாய் நோட்டையும் எடுத்து அவற்றையும் அவள் கைப்பையில் வைத்து மூடி அவள் மடியில் பையை வைத்தான். கார் விளக்கை அணைத்து விட்டு இறங்கி நின்றான்.

வியப்பில் அவளுக்கு வாயெழவில்லை.

"வரேன் ஆயா. நான் பிறவித் திருடனில்லை. தொழில் முறைத் திருடன் இல்லை. சொன்னா நம்புவியோ என்னமோ, நான் சரியா சாப்பிட்டு அஞ்சு நாளாகுது. நேத்திலிருந்து என் ஆகாரம் வெறும் டீ தான். அதுக்காக என்னை என்னமோ அப்பு சப்புன்னு

நினைச்சிடாதே, எம்.காம். படிச்சிருக்கேனாக்கும்! ஒரு கழுதையா பிறந்திருந்தா அந்தப் பட்டம் அச்சிட்ட காகிதத்தையாவது சாப்பிட்டுப் பசியாறியிருக்கலாம்.'' கார் கதவை மூடினான். ''குட் நைட் ஆயா. உடனேகிளம்பி ஒழுங்கா வீட்டுக்குப் போய் சேரு. உன் வயசுக்கு இந்த நேரத்துல ஒத்தையில வெளிய கிளம்பறது நல்லதில்லே. ஊர்ல திருட்டு பயம் ஜாஸ்தி!''

சிரித்து விட்டுப் பரபரவென்று நடந்து செல்லலானான். ''இந்தாப்பா... ஏ பையா... பேர் தெரியாதது கஷ்டமா இருக்கு. ஏ ஜென்டில்மேன் திருடா. கொஞ்சம் நில்லுப்பா யங் மேன்...'' ''வாட் நௌ?'' எரிச்சலுடன் திரும்பினான். இரைக்க இரைக்க ஓடி வந்து அவன் எதிரே நின்றிருந்தாள் கிழவி. அவன் கையில் எதையோ திணித்தாள்.

இரண்டு நோட்டுகள். நூறு, ஐம்பது. ''பிச்சை போடறியா?'' என்றான் சீற்றமாய், கண் கனல. ''இல்லை. நான் உயிர் தப்பிச்சச் சந்தோஷத்தைக் கொண்டாடறேன். முதல்ல போய் ஒரு நல்ல ஹோட்டல்ல ஒரு முழுச்சாப்பாடு வாங்கி வயிறாரச்சாப்பிடு. மிச்சப் பணத்தைக் கைச் செலவுக்கு வச்சிக்க. அப்புறம் – அடிக்க வராதே – உன் எம்.காமைக் கொஞ்சம் ஒதுக்கி வச்சிட்டு அந்த ஹோட்டல்லயே ஏதாவது எடுபிடி வேலையாவது இப்போதைக்குக் கிடைக்குமான்னு கேட்டுப் பாரு. ஒண்ணும் தப்பில்லே. நீ நல்ல பையன். ஆல் தி பெஸ்ட்.'' காரிடம் விரைந்து திரும்பினாள். வேகமாய் அதை செலுத்திக் கொண்டு அவனைக் கடந்து சென்றபோது பலமாக விழத் தொடங்கியிருந்த மழைத் துளிகளின் உணர்வே இல்லாமல் அவன் அதே இடத்தில் பிரமித்து நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

யாருமில்லை அங்கே

தாயை நினைத்து
வீட்டுக்குள் ஓடி வரும்
விளையாடி முடித்த சிறுவனைப் போல்

வேலை முடிந்ததும்
ஓடி வந்து
உன்னைத் தேடுகிறேன்

நீயோ
மாற்றாந்தாய் மனப்பான்மை
காட்டுகின்றாய்

சிலபோது
நான்
தாயில்லா பிள்ளை போல்
வெறும் வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு
வெளியே போய் விடுகிறேன்

தாயற்ற சிறுவனுக்கு
விளையாட்டே வாழ்க்கை
மைதானமே வீடு
யாருமில்லை அங்கே
அவன் மட்டும் தனியே

– சத்யபிரபா

குடும்ப வன்முறைக்குள் அடங்குதலும் எதிர்த்தலும்

– முனைவர் ஜ. ஜான்சிராணி,
ஆய்வு வளமையர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

குடும்பம் என்ற கட்டமைப்பிற்குள் வாழும் பல பெண்கள் சந்திப்பது வன்முறையையும் அடக்குமுறையையுமே. சந்தேகம் என்ற அரக்கனால் பல குடும்பங்களில் பெண்ணின் வாழ்வு நிம்மதியில்லாமல் குலைந்து போகிறது. இதிலிருந்து வெளியேவர நினைத்தாலும் தன் சுற்றத்தாரே அதைப் புரிந்துகொள்ளாமல் காயப்படுத்துவதும் இயல்பாகவே சமூகத்தில் உள்ளது.

''குடும்பம் என்ற சமூக நிறுவனம் பல இடங்களில் பெண்களுக்குப் பாதுகாப்பாக இல்லை. 'குடத்திற்குள் பாம்போடு வாழ்வது போல' வீட்டிற்குள் கணவனுடன் வாழும் பெண்கள் பலர். வாயாலும் கையாலும் துன்புறுத்தும் கணவனை எதிர்த்துக் கேட்கவும் விட்டுவிட்டுச் செல்லவும் கலாச்சாரம் பெண்ணை அனுமதிக்கவில்லை. இதை மீறி தங்களது உணர்வை வெளிப்படுத்தும் பெண்கள் வேறுவிதமாகப் பார்க்கப்படுகின்றனர். அதனால் விதியை நொந்துகொண்டும் விம்மிக்கொண்டும் உள்ளொடுங்கி வாழும் பெண்கள் இங்கு மிகுதி. அப்படிப்பட்டவர்களைத்தான் சமூகம் இன்றுவரை 'நல்ல மனைவி' என்ற தகுதிக்கு உட்படுத்துகிறது'' (பெண்ணியச் சிந்தனையும் இலக்கியப் பதிவுகளும், ப.89)

இந்த வகையில் குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பெண்ணின் நிலையினை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் பதிவு செய்திருக்கின்றன.

ஆதிலட்சுமியின் 'மௌனத்தின் அர்த்தங்கள்' என்ற சிறுகதை, தன் கணவனைப் பிரிந்து வாழும் கதையின் நாயகி, தன் வாழ்வில் எடுக்கும் முடிவினைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. மணமுடித்த பெண்ணிற்கான பிரச்சினையை மையப்பொருளாகக் கொண்ட இந்தச் சிறுகதை மணவாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால் அதிலிருந்து விடுபட நினைத்து விவாகரத்து பெறும் திலகா பற்றிப் பேசுகிறது.

தன் கணவனுடன் சந்தேகமும் பொறாமையும் உள்ளடங்கிய வாழ்க்கை... இன்று சண்டையும் பிரிவுமாய் ஆகிப்போனதே... என்ற கவலை. கணவன் செய்த கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு வாழும் பெண்ணே நல்லவள். அதை மீறிக் கணவனைப் பிரிந்து வாழும்

பெண் என்றால் ஏளனப் பார்வையே மிஞ்சுகிறது. அதிலும் வேலைக்குச் செல்லும் பெண் என்றால் கூடுதல் வசவுகள் தான் கிடைக்கின்றன. இந்தச் சிறுகதையில், "உத்தியோகம் புருஷ லட்சணமுனு சொன்னாங்களோ... இல்லையோ... இப்போ வேலை செய்யற பெண்களுக்கெல்லாம் தைரியம் ஜாஸ்தி ... புருஷனை மதிக்கிறது இல்லே... அதான் பொறந்த வீடுனு இருக்கே... முணுக்குனா இங்க வந்திட வேண்டியது" எனத் தங்கையும் "குடும்பமுனாபல பிரச்சினைகள்இருக்கத்தான்செய்யும். அதுக்குனுஎன்னஇதெல்லாம்?" எனத் தங்கையின் கணவரும் கூறுகின்றனர்.

அவளின் அம்மாவோ, "நல்லா யோசித்துப்பாரு திலகா... ஒவ்வொரு குடும்பமும் சமுதாயத்தின் பார்வையில்தான் இருக்கு. அவர்களுடைய வசதியும் வளமும் மற்றவர்களால் மதிக்கப்படுகிறது... அதேபோலத்தான் அந்தக் குடும்பத்தின் ஐக்கியமும் அன்பும் பிறரால் நேசிக்கப்படுகிறது. விதவைங்கறது கால தேவனின் சூழ்ச்சி... ஆனால், வாளா வெட்டிங்கிறது அப்படியில்லையே..." என்று கூறுகிறார்.

நடந்த நிச்சயதார்த்தம் முறிந்தநிலையில் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் சேர்ந்தபோது தன்னை விரும்புவதாகக் கூறிய முரளி, காதலிக்கும்போது பெரிதாக எடுத்துக்கொள்ளாத கடந்த காலம் திருமணத்திற்குப் பின் அதுவே பெரும் சந்தேகமாக உருவெடுத்தது.

"என் பொறுமை எல்லை மீறி..., எதிர்வாதம் செய்ய முற்படும் பொழுது... ஐயோ... கேட்கக் கூடாத வார்த்தைகளும் அடியும் உதையும் அல்லவா சன்மானமாகப் பெற வேண்டி வந்தது" இப்படி ஒரு வாழ்க்கை வாழ்வது அவசியம்தானா? மணவாழ்க்கை முறிந்து விவாகரத்திற்கு நீதிமன்றம் வரை செல்ல வேண்டியிருந்தது. தீர்ப்பு வரும் இறுதி நாள் திலகா நீதிபதியிடம் கூறுகிறாள்.

"என்னுடைய அன்பும் பரிவும் பணிவும் இவரிடத்தில் என்னைப்பற்றி ஒரு நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்கவில்லை. வெறும் கட்டிலும் மெத்தையும் பேசுவதுதான் வாழ்க்கையா... இரு மனமும் உறவாடி உணர்வு ஒன்றுபட்டு வாழும் தாம்பத்திய வாழ்க்கைக்கு மதிப்பில்லையா...? என்னுடைய ஒழுக்கம் இவரிடம் தன்னம்பிக்கையை வளர்க்கவில்லை. மாறாக சந்தேகம்...

நான் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டு, முறிந்து போனவள் என்று சொல்லித்தானே திருமணம் செய்து கொண்டேன். பாதிக்கப்பட்ட என் மனதிற்கு இவர் இதமாய் இல்லாவிட்டாலும் பரவாயில்லை... நெருப்பாய் இவர் சுட்ட வார்த்தைகள்... நான் அழுது பலவீனம் காட்டி இவரது காலடியில் வீழ்ந்து என்னை நிரூபித்துக்கொள்ள வேண்டுமாம்... எதற்கு? முடியவில்லை... என்னால் முடியவில்லை...

பாராட்டும் தோழமையும் இல்லறத்தில் இனிய ராகங்கள். நான் எத்தனை பொறுத்துப் போயும் இவருக்கு விட்டுக் கொடுத்துப் போகமுடியவில்லையே என நான் ஆதங்கப்பட்டப் போதெல்லாம்... புகழும் கௌரவமும் தனக்கே உரியதென செயல்பட்ட விதத்தில் நான் சிறுமைப்படுத்தப்பட்டுப் போனேன்.

"இதோ என் தாயின் மறுவுருவம்..." என்று தன் மனைவியைச் சுட்டிக்காட்டினார் காந்தி அடிகள். அவரை மகாத்மாவாக உருவாக்கினாள் அன்னை கஸ்தூர்பாய். என்னுடைய பக்தியும் பணிவும் இவரிடம் தெய்வீகத்தை வளர்க்காவிட்டாலும் பரவாயில்லை. மனிதத் தன்மையைக் கூடவா வளர்க்க முடியாமல் போய்விட்டது?"

இதற்குமேல் பேச முடியவில்லை. வார்த்தைகள் தொண்டைக்குள் அடைத்துக் கொள்கின்றன. நெருஞ்சிமுள் போல் இதயத்தில் குத்தப்பட்டிருந்த முள்ளை எடுத்தெறிந்துவிட்டு நீதிமன்றத்தைவிட்டு திலகா வெளியேறுவதாகக் கதை முடிகின்றது. ஒரு பெண்ணின் மன ஆதங்கத்தை வெளிப்படுத்துவதாக இந்தச் சிறுகதை அமைந்துள்ளது.

குடும்பச் சூழல் காரணமாகத் தனித்து வாழ விரும்பும் பெண்களின் உறுதியைக் குலைப்பதாகவே சுற்றுப்புறம் உள்ளது. இன்று பெண்கள் கல்வியில், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றுள்ளனர். பெண்கள் தங்களது வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமெனத் தீர்மானிக்க அவர்களுக்கு முழு உரிமை உள்ளது என்பதை இந்தச் சமூகம் உணர வேண்டும்... அவர்களின் வாழ்வை அவர்களை வாழ விட வேண்டும்...

வராகி பூஜையும் விரதங்களும்

முனைவர் செ. ராஜேஸ்வரி

வராகி ஒற்றைக் கொம்பு உடைய பன்றி முகமும் பெண் உடலும் கொண்டவள். அவள் கையில் நெல் வேளாண்மைக்குரிய கலப்பை, நெல் குத்தும் உலக்கை, காண்டாமணி, மாட்டுவால் ஆகியவை ஆயுதங்களாக இருக்கும். மருத நிலப் பெண் தெய்வமான வராகியை மருத நிலத்தின் வேந்தர்கள் போருக்குச் செல்லும் போது வணங்கிச் செல்வர். கிபி 7,8 ஆம் நுற்றாண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவில் வராகி வழிபாடு நடைமுறைக்கு வந்தது. அதுவரை கொற்றவை வழிபாடு போர் வெற்றிக்குரிய தெய்வ வழிபாடாக இருந்தது. கொற்றவையின் இடத்தை, வராகி, நிசும்ப சூதிணி, வக்ர காளி போன்ற தெய்வங்கள் பிடித்துக்கொண்டன.

வராகிக்கு உரியவை

வராகி மனித உடம்பில் எலும்புக்கு உரியவள். எலும்பு நோய் உடையவர்கள் வராகி விரதம் இருந்து நலம் பெறலாம். அறுவகைச் சக்கரத்தில் இவள் மணி பூரகத்துக்கு (தொப்புள் பகுதிக்கு) உரியவள். மருந்துகளில் இனிப்புக்கும் உரியவள். உன்மத்த பைரவி, ஸ்வப் நேசி, திரச்கரணி, கிரிபதா ஆகியோர் இவளது பரிவார தேவதைகள் ஆவர். கிரி என்றால் பன்றி. பன்றிகளால் இழுத்து வரப்படும் ரதத்தில் ஏறி வருபவள் வராகி. எனவே வராகியின் யந்திரத்திற்கு பெயர் கிரி சக்கரம் ஆகும்.

தஞ்சாவூர்

வராகி மாலை

பதினாறாம் நூற்றாண்டில் வீரை கவிராச பண்டிதர் என்பவர் வராகி மாலை என்ற நூலை எழுதினார். இந்நூலில் வராகி யந்திரமும் அதற்குரிய பாடலும் மந்திரமும் இப் பூஜையினால் கிடைக்கும் பலன்களும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வராகி கோவில்கள் பௌத்தர்கள் காலத்தில் தமிழகம் வந்த வராகிக்கு அவர்கள் திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம் பகுதியில் அதிக எண்ணிக்கையில் கோயில்கள் கட்டினர். வராகிக்கு

அருகில் விநாயகர் சிலைகளையும் வைத்தனர் எனவே வராகி உபாசகர்கள் விநாயகரை வணங்கிய பின்பு வராகி உபாசனையை தொடங்குவர்.

அரசாலை அம்மன்

உத்தரகோசமங்கையில் மிகப் பழைய கோவில் என்று சொல்லப்படுகின்ற ஒரு வராகி கோவில் உண்டு. விழுப்புரம் அருகே சாலமேடு என்ற ஊரில் உள்ள வராகி கோவிலை தமிழகத்தின் பழைய வராகி கோவில் என்று சொல்பவர்களும் உண்டு. காஞ்சிபுரத்தில் பள்ளூர் கிராமத்தில் உள்ள அரசாலை அம்மன் கோவில் வராகி அம்மனின் மிகப் பழைய கோவில் ஆகும். அரசாலை என்ற பெயரில் வராகி சகஸ்ரநாமத்தில் அவள் அழைக்கப்படுகிறாள். எனவே வைதீக சமயங்கள் பேரெழுச்சி பெற்ற காலத்தில் வராகி கோவில்கள் அரசாலை அம்மன் கோவில் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டன.

வராகி ரூபிணி

திருச்சியில் திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் அகிலாண்டேஸ்வரி வராகி ரூபமாக விளங்குகிறாள். இக்கோயில் வராகி பீடமாகும்.

நாகப்பட்டினத்தில் வழுவூர் வீரட்டேஸ்வரர் கோவிலுக்கு முன்பு பழைய வராகிக்குரிய தனிக் கோவில் இருந்துள்ளது. எட்டயபுரத்து அருகே நரிப் பட்டி என்ற ஊரில் வராகிக்குத் தனிக்கோயில்உண்டு. நரி என்ற பெயர்பௌத்தசமயத்தின்டாகினி தென்தெய்வத்தினோடு தொடர்புடையதாகும். அதிர்ஷ்டத்தை கொடுக்கும் டாகினி தென் என்ற பெண் தெய்வம் இருக்கும் இடங்களில் நரி இருக்கும். அவள் நரி வடிவில் காட்சி தருவாள். எனவே நரிமுகத்தில் விழிப்பது நன்மை தரும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது

புராணத்தில் வராஹி

அரசலூர்

தேவி மகாத்மியம் வராகி சும்ப விசும்பர்களை ரத்த பீஜனையும் காளி கொல்ல வந்த வந்தபோது அவர்களுக்கு உறுதுணையாக நின்றவள் என்று என்கிறது. லலிதோபாக்யானம் தேவியின் படைத்தளபதியாக வராகியைக் குறிக்கின்றது. இவள் விசுக்கிரன் என்ற அசுரனைத் தனித்து நின்று வதம் செய்தவள்.

வராகி உபாசனை

வராகி எதிரிகளின் கொழுப்பை அடக்கி அவர்களின் அறிவைக் குலைத்து பைத்தியமாக அலைய விடுபவள். எனவே இவளை உன்மத்த பைரவரின் இணையாக சேர்த்தும் இடைக்காலத்திலும் வடநாட்டிலும் நூல்களில் குறிப்பிட்டனர். வராகி வழிபாட்டை பாதியில் விட்டுவிட்டால் கை கால் விளங்காது, பைத்தியம் பிடிமக்கும் என்ற பயம் நிலவியது. வராகி உபாசகருக்குக் குடும்பம் நிலைக்காது. ஆண் வாரிசு தங்காது. பெண் வாரிசுகள் திருமண வாழ்வில் சுகப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் முன்பு இருந்தது. வராகி உபாசனை இல்லறத்தாருக்கு உரியது அன்று. அவர்களால் இல்லறத்தில் இருந்து கொண்டு நள்ளிரவு பூஜைகள் செய்ய இயலாது என்று ஆழமாக நம்பினர்.

இந்தியச் சமயங்களில் வராகி

பௌத்த சமயத்தில் வஜ்ராயன பிரிவில் வராஹியை வழிபடுவதால் அவளை அவர்கள் வஜ்ர வராகி என்றும் மரிச்சி என்றும் அழைத்தனர்.

இந்து சமயத்தில் வராகியின் செல்வாக்கால் அவளது எண்ணிக்கையும்அதிகரித்தது. ஆதி வராகி, மிருகத் வராகி, ரகுவராகி, பஞ்சமி வராகி, அஸ்வாரூட வராகி, சுத்த வராகி, தண்டனாத வராகி, தூம்ர வராகி, சொப்பன வராகி, வார்த்தாளி என்று பத்தாக வளர்த்தனர். இவற்றில் எட்டை மட்டும் எடுத்துக்கொண்டு அஷ்டவராகி என்றும் அழைப்பர்.

தாந்திரீக சமயத்தில் வராகியை ஐந்தாகக் கொண்டனர். இங்கு சோபன வராகி, கண்ட வராகி, மஹி வராகி, கிருஷ்ணா வராஹி, மச்ச வராகி என்று ஐந்து வராகி உண்டு.

சமண சமயத்தில் *உள்ள பத்மாவதி, சக்கரேஸ்வரி, ஜ்வாலா மாலினி, கூஷ்மாண்டி, வராகி, ஜீன வாணி என்று ஆறு பெண் தெய்வங்களில் வராகியும் ஒருத்தி.*

வெற்றித் தேவதை வராகி

வராகி பகை அழிக்கும் சக்தி கொண்டவள் என்பதால் அவள் தேவியின் தளபதியாக தேவி மகாத்மியத்தில் இடம்பெற்றாள்.. மார்க்கண்டேய புராணம், வராக புராணம், மச்ச புராணம், தேவி புராணம் ஆகியவற்றில் வராகி பற்றிய கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அசுரர்களை தேவி வதம் செய்யும்போது வராகியின் குறிப்பிடத்தக்கது.

சாக்தத்தில் வராகி

வராகி வழிபாடு என்பது சாக்தத்தில் ஆண்களுக்குரிய குறிப்பாக துறவிகளுக்குரிய வழிபாடாகவே தொடக்க காலத்தில் இருந்தது. இன்றைக்குக் குடும்பஸ்தர்களும் பெண்களும் வராகியை வணங்குகின்றனர்.



வாரணாசி

சிவன் கோயிலில் வராகி

வராகி ஓர் இருட்டுக் கடவுள். எனவே காசியில் உள்ள கால ராத்திரி கோவில் பகலில் பூட்டப்பட்டு இருக்கும். இரவில் மட்டுமே இக்கோவிலைத் திறந்து வராகிக்கு வழிபாடுகளைச் செய்வர். வராகியை நள்ளிரவில் அல்லது நண்பகலில் உச்சிப் பொழுதில் வணங்கலாம். இவளை சப்த மாதர்களில் ஐந்தாவது தேவதையாகக் கொண்டுள்ளனர். சப்த மாதர் வழிபாடு பௌத்த சமயத்தில் பெரு வழக்காக இருந்தது. பின்பு நாட்டுப்புறச் சமய வழிபாடாக நிலைத்து விட்டது. வைதீக சமயங்களில் சைவ சமயத்தில் மட்டும் சப்த மாதர் இடம் பெற்றுள்ளனர். குறிப்பாக சிவன் சந்நிதியின் பரிவார தேவதைகளுள் சப்த மாதர்களும் உள்ளனர். இவர்களில் வராகி ஐந்தாவது தேவதையாகவும் இடம் பெற்றுள்ளார்.



விரத நாட்கள்

வராகிக்கு உரிய திதி ஐந்தாவது திதியான பஞ்சமி திதியாகும். எனவே வராகியை வளர்பிறை, தேய்பிறை பஞ்சமி நாட்களில் விரதம் இருந்து வழிபடலாம். வராகியை திதிகளில் அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களிலும் வளர்பிறை தேய்பிறை பஞ்சமி நாட்களிலும் கிழமைகளில் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்பு விரதங்கள் இருந்து வழிபடலாம்

திருமதி. இராஜி ராமச்சந்திரன், அட்லாண்டா

(நேர்காணல்: மேனகா நரேஷ், நியூஜெர்சி)

அமெரிக்கத் தமிழ்ப் பெண் ஆளுமைகள் - 8

மென்பொருள் பொறியாளர், எழுத்தாளர், இதழ் ஆசிரியர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், தமிழ் ஆசிரியர் என்று பல தளங்களில் பயணித்து வரும் திருமதி. இராஜி ராமச்சந்திரன் அவர்களை "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறேன். அவரது பேட்டி இதோ உங்களுக்காக!

1. வணக்கம் இராஜி அம்மா. "சக்தி" இதழுக்காக உங்களைப் பேட்டி எடுப்பதில் மகிழ்ச்சி. தங்களைப் பற்றிய அறிமுகத்தை எங்கள் வாசகர்களுக்காகக் கூறுங்கள்.

வணக்கம் மேனகா! நான் பிறந்தது மானாமதுரை. உடன் பிறந்தோர் ஒன்பது பேர். தந்தை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர். தாயார் வீட்டுப் பொறுப்புகளோடு வாசிப்பு, கைவேலை என்று எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார். அவர் எழுதுவதிலும் ஆர்வம் உள்ளவர். அவரது கதைகள் 1950களில் பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ளன.

திருமதி. இராஜி ராமச்சந்திரன்

நான் பள்ளிப் படிப்பை முடித்ததும் சிவகங்கை மன்னர் கல்லூரியில் பி. எஸ். சி. இயற்பியல், தொடர்ந்து சென்னை எம். ஐ. டி. யில் பொறியியல் படிப்பை முடித்தேன். என் தந்தையைப் பின்பற்றி நானும் ஆசிரியராக வேண்டும் என்ற கனவு எனக்கு இருந்தது. ஆனால் சென்னையில் ஹிந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸில் பொறியாளராகச் சேர்ந்து அங்கு 17 ஆண்டுகள் பணிபுரிந்தேன். என் கணவர் சென்னை விவேகானந்தா கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

1998இல் நாங்கள் குடும்பத்துடன் நியூசிலாந்துக்குப் புலம்பெயர்ந்தோம். அழகிய நாடு, அன்பான மக்கள், ஆனால் வேலை வாய்ப்பு குறைந்த நாடு. எங்கள் இருவருக்குமே வேலை

கிடைக்கவில்லை. அன்றைய காலகட்டத்தில் மென்பொருள் துறை அதிகமாக முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த சூழல் நிலவியதால் அது தொடர்பான டிப்ளமோ படிப்பை அங்குப் படித்தேன். என் தம்பி அமெரிக்காவில் நடத்தி வந்த கன்ஸல்டிங் நிறுவனத்தில் மென்பொருள் துறை வேலைக்கு அழைக்க, நானும் பிள்ளைகளும் இங்கு வந்தோம். தம்பி குடும்பத்துடன் ஓராண்டு தங்கி இருந்தோம். அமெரிக்கச் சூழலுக்கு ஏற்ப என்னை மாற்றிக் கொள்ள எனக்குச் சிறிது காலம் பிடித்தது. கணவர் பிறகு சேர்ந்து கொண்டார். அவர் தற்போது கல்லூரி ஆசிரியராகப் பணி புரிந்து வருகிறார். நான் முதல் 4 ஆண்டுகள் தம்பி நிறுவனம், பிறகு 12 ஆண்டுகள் தொலை தொடர்பு நிறுவனம், பின் மீண்டும் தம்பி நிறுவனம் எனக் கடந்த 26 ஆண்டுகளாக மென்பொருள் துறையில் பணியாற்றி வருகிறேன். மகன், மருமகள், மகள், மருமகன், பேத்தி எனக் குடும்பம் விரிந்துள்ளது.

2. அயலகத்தில் உங்களுடைய தமிழ்ப்பணியைப் பற்றிக் கூறுங்கள்.

அட்லாண்டா லட்சுமி தமிழ்ப் பள்ளியில் கடந்த 23 ஆண்டுகளாகத் தன்னார்வ ஆசிரியர் மற்றும் துணை முதல்வர் பொறுப்பில் இருக்கிறேன். என்னுடைய எழுத்துகள் நூலாக்கம் பெற்றிருக்கின்றன. பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதி வருகிறேன். புதுச்சேரி கலைமாமணி அகன் அவர்களால் 2019ஆம் ஆண்டு நிறுவப்பட்ட "உலகப் பெண் கவிஞர் பேரவை"யின் மேலாண்மைக் குழு உறுப்பினர், "வல்லினச் சிறகுகள்" இதழின் முதன்மை ஆசிரியர், அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தில் தன்னார்வலர், ஜெர்மனியில் இயங்கும் "தமிழ் வான் அவை" என்ற அமைப்பின் அமெரிக்கக் கிளை ஒருங்கிணைப்பாளர் என்று தமிழ் மொழியின் வளர்ச்சி சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறேன்.

3.அயலகத்தில் தமிழாசிரியராக உங்கள் அனுபவங்களைப் பற்றிக் கூறுங்கள்.

தமிழ்மொழியில் எனக்குச் சிறு வயதிலிருந்தே ஈடுபாடு இருந்தது. அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்ததும் இது அதிகரித்தது. என்னுடைய பிள்ளைகளை லட்சுமி தமிழ்ப் பள்ளியில் சேர்த்து விட்டேன். 1987இல் திருமதி. லஷ்மி சங்கரால் தொடங்கப்பட்ட இப்பழம் பெரும் பள்ளியில் 2023இல் நானும் தன்னார்வ ஆசிரியராக இணைந்தேன்.

மென்பொருள் துறையில் எனக்கிருந்த அனுபவத்தின் காரணமாகப் படங்களுடன் கூடிய பவர் பாயிண்ட் பயன்படுத்தித் தமிழ் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். நானும் முதல்வர் திருமதி. லஷ்மியும் தமிழை அடுத்தத் தலைமுறையினருக்கு கடத்த வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கமாக முடிவு செய்து அதை நோக்கி ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

முதலில் திருமதி. லஷ்மியின் இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த தமிழ்ப் பள்ளி பின்பு அட்லாண்டா தமிழ் சர்ச்சில் இயங்க ஆரம்பித்தது. எங்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குக் கட்டணம் கிடையாது. மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்கள் சேர்க்கை, ஆசிரியர்களுக்குப் பயிற்சி, ஆண்டுதோறும் சிங்கப்பூரிலிருந்து புத்தகங்கள் வரழைத்தல், ஒவ்வொரு நிலைக்கும் உண்டான பாடத்திட்ட வரையறை, கணினி முறையில் தமிழ்ப்

பாடங்கள் தயாரிப்பு, சீசா, புளூக்கட், க்விஸ்ஸஸ் போன்ற நவீன செயலிகள் மூலம் எண்ணற்ற செயல்பாடுகள்/பயிற்சிகள் என்று முதல்வருடன் இணைந்து பல்வேறு பணிகளைச் செய்து வருகிறேன். 2020ஆம் ஆண்டு கொரோனா தொற்று ஏற்பட்ட காலகட்டத்தில் எங்களுடைய பள்ளியின் செயல்பாடுகளை இணைய வழிக்கு மாற்றினோம். அதன் பிறகு எங்கள் பகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் அமெரிக்காவில் உள்ள மற்ற மாநிலங்களில் இருந்தும் தமிழ் படிக்க ஆர்வமுள்ள பிள்ளைகளை எங்கள் பள்ளியில் இணைத்துக் கொண்டோம். தற்போது கனடா, ஜப்பான், இங்கிலாந்து, டென்மார்க், ஆஸ்திரேலியா மற்றும் அமீரகத்திலிருந்தும் பல மாணவர்கள் எங்கள் பள்ளியில் சேர்ந்துள்ளார்கள் என்பது மகிழ்ச்சியான செய்தி. 330க்கும் மேற்பட்ட மாணவர்கள் எங்கள் பள்ளியில் இணைந்து தமிழ் பயில்கிறார்கள். இப் பள்ளியில் நான் துணை முதல்வராகச் செயலாற்றி வருகிறேன்.

அமெரிக்க எட்யுரைட் அறக்கட்டளை மற்றும் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம் அமெரிக்கத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கு அளித்த 8-வாரப் புத்தொளிப் பயிற்சியில் பங்கேற்றிருக்கிறேன். அயலக மாணவர்களுக்கு எளிய முறையில் இலக்கணம் கற்பித்தல் பற்றிய ஆய்வுக் கட்டுரையும் எழுதியிருக்கிறேன்.

என் தந்தை வழியில் ஆசிரியப் பணி புரிய வாய்ப்பு கிட்டியதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

4. நீங்கள் இதுவரை பெற்ற விருதுகள்?

- *"ஆற்றல்மிகு பெண்கள்" விருது – 2024, வட அமெரிக்கத்தமிழ்ச்சங்கப் பேரவை (FeTNA)*
- *உரைநடைக்கான "தமிழன்பன் 80" விருது – 2020, ஒருதுளிக்கவிதை, புதுச்சேரி*
- *"தமிழ்ப்பணிச் செம்மல்" விருது – 2022, தமிழ் அமெரிக்கா தொலைக்காட்சி, அமெரிக்கா*

இவை இதுவரை நான் பெற்ற விருதுகள்.

5.உங்கள் எழுத்துப்பணியைப் பற்றிக் கூறுங்கள்.

சிறுவயதிலிருந்தே என் அனுபவங்களைப் பற்றி எழுதுவதை நான் ஒரு வாடிக்கையாக வைத்திருக்கிறேன். அந்த வகையில் நான் அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்தவுடன் என் அனுபவங்களைக் கட்டுரைகளாக எழுதத் தொடங்கினேன். "எங்கிருந்தோ வந்தான்" என்று தலைப்பிடப்பட்ட என் முதல் கட்டுரை அமெரிக்காவில் வெளியாகும் "தென்றல்" என்ற பத்திரிகை வெளியிட்டது . இதுவே நான் எழுதிப் பிரசுரமான முதல் கட்டுரை. இதைத் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதி தினமலர், வளரி என்று தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் இதழ்களுக்கும், பனிப்பூக்கள் என்று அமெரிக்காவிலிருந்து வெளியாகும் இதழுக்கும் அனுப்பத் தொடங்கினேன். இவ்வாறாக என்னுடைய எழுத்துப் பயணம் தொடங்கியது.

"கொஞ்சம் கதை கொஞ்சம் இலக்கணம்" என்ற பயிலரங்கின் மூலம் முனைவர் அகன் அவர்களுடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது. இந்தப் பயிலரங்கத்தில் ஒரு கதை சொல்லி அந்தக் கதையிலிருந்து இலக்கணச் சொற்களைப் பிரித்தெடுத்து எப்படி எளிய முறையில் குழந்தைகளுக்குப் புரிய வைப்பது என்பதைப் பற்றி அமெரிக்காவில் உள்ள தன்னார்வத் தமிழ் ஆசிரியர்களுக்கு விளக்கமாக முனைவர் அகன் சொல்லிக் கொடுத்தார். நான் கட்டுரைகள் எழுதுவதை அவரிடம் பகிர்ந்து கொண்டபோது என் கட்டுரைகளை ஒரு நூலாக வெளியிடலாம் என்று அவர் தெரிவித்தார். நான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து "அம்மா வருவாயா?" என்ற தலைப்பில் பயணம் மற்றும் பட்டறிவுக் கட்டுரைத் தொகுப்பை ஒரே மாதத்தில் புதுச்சேரி ஒருதுளிக்கவிதை மூலம் 2019இல் நூலாக்கம் செய்தார் முனைவர் அகன். இதைத் தொடர்ந்து,"வட அமெரிக்காவின் ஆற்றல்மிகு பெண்கள்" என்ற நேர்காணல் கட்டுரைத் தொகுப்பு நூலை ஒருதுளிக்கவிதை 2021ஆம் ஆண்டு வெளியிட்டது. அதே பதிப்பகம் வெளியிட்ட "கொஞ்சம் கதை கொஞ்சம் இலக்கணம்" பட நூல் வரிசை 10 நூல்களில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான எளிய இலக்கணப் பகுதிகளை எழுதியிருக்கிறேன்.

6. உலகப் பெண் கவிஞர் பேரவைப் பணியைப் பற்றிக் குறிப்பிடுங்கள்?

புதுச்சேரி கலைமாமணி முனைவர். அமிர்தகணேசன் அவர்களால் 2019 ஆம் ஆண்டு அட்லாண்டாவில் நிறுவப்பட்டு, வழிநடத்தப்பட்டு வரும் இப்பேரவையின் மேலாண்மைக் குழு உறுப்பினராகச் செயலாற்றி வருகிறேன்.

உலகெங்கிலும் உள்ள பெண்களின் எழுத்துத் திறமையை வெளிக் கொணர ஊக்கம் அளித்தல், தொகுப்பு நூல்கள் உருவாக்கத்தில் உதவி, நூல் வெளியீட்டு நிகழ்வுகள், நூல் மற்றும் சிறுகதைப் போட்டிகளுக்கான திட்டப்பணியில் உதவி, பன்னாட்டுக் கவியரங்க, உரையரங்க நிகழ்வு ஏற்பாட்டில் உதவி, அட்லாண்டா தமிழ் நூலகத்துடன் இணைந்து நிகழ்த்திய தமிழ்ப் புத்தகக் கண்காட்சிகளில் முதன்மைக் குழு உறுப்பினர் (2021, 2022), நன்கொடைத் திட்டங்களில் உதவி, இணையதள ஒருங்கிணைப்பு ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். குழுவுடன் இணைந்து, இணையவழியில் வல்லினச்சிறகுகள் வாரமலர் நிகழ்ச்சி ஏற்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவி செய்து வருகிறேன். உறுப்பினர்கள் வழங்கும் நூல் மதிப்புரை, தொடர் உரைகள், நூல் அறிமுகம், கவிதை வாசிப்பு, டிவிட்டரில் 24-மணி நேர 100ஆவது வாரமலர் / மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் 90ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் திட்டப் பணி மற்றும் தொழில்நுட்பப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன்.

7. உங்களுடைய இதழியல் பணி குறித்துக் கூறுங்கள்.

உலகப் பெண் கவிஞர் பேரவை உறுப்பினர்களால் பெண்களுக்காக நடத்தப்படும் "வல்லினச் சிறகுகள்" இதழின் முதன்மை ஆசிரியராக 2020ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வருகிறேன். மாதாந்திர மின்னிதழ் 2022ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்டது. 2024ஆல் ஓராண்டு காலம் அச்சிதழாக வெளி வந்தது. வெளிநாட்டு அஞ்சல் சிக்கல்கள் காரணமாக

மீண்டும் மின்னிதழுக்குச் செல்கிறோம். இதழுக்கான திட்டப்பணி, ஆசிரியர் குழுச் செயல்பாடுகள், படைப்புகள் தேர்வு, மெய்ப்புப் பணி, வடிவமைப்புக்கான ஒருங்கிணைப்பு எனப் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறேன்.

8. அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத் தன்னார்வப் பணி பற்றிக் குறிப்பிடுங்கள்?

முன்னாள் கல்விக் குழு உறுப்பினர் / மின்னேடு ஆசிரியர் குழு உறுப்பினர், ஆண்டு மலர் 2020 ஆசிரியர், "தமிழே! அமுதே!" குழு உறுப்பினர். "தமிழே! அமுதே!" நிகழ்ச்சியில் சில நூல்களைப் படித்துப் பகிர்ந்தது, தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சியளித்துப் பங்கேற்ற வைத்தது, உறுப்பினர்களின் படைப்புகள்/நூல்களுக்கு மெய்ப்பு பார்த்து உதவியது போன்றவை.

9. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையில் உங்கள் பணிகள் பற்றி?

தமிழ்த் தேனீ – 2020 சொற்பட்டியல் தயாரிப்புக் குழுஉறுப்பினர், குழுவுடன் இணைந்து 2,000 சொற்களைத் தொகுத்தது, லட்சுமி தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுடன் இணைந்து பங்கேற்கும் மாணவர்களுக்கான பயிற்சிப் பாடங்கள் தயாரிப்பு (படங்கள் மற்றும் எளிய வாக்கியங்களுடன் 6 தொகுப்புகள்), பேரவையின் 35ஆவது ஆண்டு விழா (2022) இணை அமர்வில் "உலகப் பெண் கவிஞர்" குழுவின் பன்னூல் வெளியீட்டு விழா ஏற்பாடு ஆகியவை.

10. இலக்கியம் தவிர்த்து வேறு எந்தத் துறைகளில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது?

எனக்குச் சமையலில் ஈடுபாடு அதிகம். சமையலுக்காக ஒரு "பிளாக்" ஆரம்பித்து எழுதி வந்தேன். ஆனால், பிற பணிப் பொறுப்புகளால் அதைத் தொடர முடியாமல் போனது. தையல் கலையிலும் பூக்கள், பழங்கள் வைத்து அலங்காரம் செய்வதிலும் ஆர்வம் உண்டு.

11. நவீன எழுத்தாளர்களைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

இப்பொழுது நிறைய எழுத்தாளர்கள் அறிவியலைச் சார்ந்த படைப்புகளை எழுதி வருகிறார்கள். இது வரவேற்கத்தக்கது. புதிய எழுத்தாளர்களை அனைவரும் ஊக்குவிக்க வேண்டும், அவர்களுடைய படைப்புகளுக்கான உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம். அறிவியல் வளர்ச்சி அடைந்து வரும் சூழலில் அது தொடர்பான படைப்புகளை அனைவருக்கும் புரியும்படியான எளிய தமிழில் எழுதினால் அது பல வாசகர்களைச் சென்று சேரும் என்பது என் கருத்து. பேலும் எழுத்தாளர்கள் எழுத்துப் பிழையின்றி எழுதிப் பழக வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அயலகத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அயராது உழைக்கும் திருமதி. இராஜி ராமச்சந்திரன் அவர்களது தமிழ்ப்பணிச் சிறக்க மனமார்ந்த வாழ்த்துகள்! ஒரு மிகச்சிறந்த ஆளுமையைச் சந்தித்த மனநிறைவு இந்த நேர்காணலை முடித்ததும் உணர்ந்தேன் என்றால் அது மிகையாகாது!

ஸ்ரீ ராதா

நீ வந்து இருக்கிறாய் _ தெரிந்து விட்டது
அதற்குள் நாள் முடிந்து போய் இருந்தது
பசுத் தொழுவம்
எப்போதிருந்து திறந்து இருந்தது
அதிகமாக மனிதன் போய் இருந்த வேளையில்,
பெண்கள் வழங்கிக்
கொண்டிருந்தனர்
குளிப்பதற்குப் பள்ளத்தாக்கு போவதற்குத்
தெரியவில்லை
ஏன்
நன்றாக மௌனமாக
இருந்தனர்
எல்லா ஆண்களும்
பெண்களும்
அர்த்தமற்று தாமதமாக தாமதமாக
ஆக்கிக் கொண்டிருந்தார்கள்
பாதை சுற்றியலைந்து வந்திருந்தனர்
பாதை சுற்றியலைந்து போய்
இதை அறிந்தும்
எப்படி போவார்கள்/
இங்கே தான் யோசித்துக் கொண்டிருக்கிறா-
ர்கள்/,
உண்மையை ஏற்றுக் கொள்
உன்னுடைய வருகையின் செய்தி
கேட்பதற்கு
முன்பு மிகவும் தெளிவற்று
நீ வந்து இருக்கிறாய்
இது அறியப்பட்டு இருந்தது
அந்த நாள் காலையிலிருந்து
நதி மற்றும் கரையின் மணல்
மரம்
செடிகள், ஆகாசம், மலை
சில மற்றவைகளைக் காட்டி,
உண்மையை ஏற்றுக் கொள்/ அவைகள்
அமைந்து இருக்கின்றன
ஏதாவதொரு எதிர்காலத்தில்
எங்கெங்கோ தடுமாறுகின்றன _
தடுமாற்றத்தில் போகின்றவையின்
இன்னல்கள் அழிந்து போகின்றன
எங்கோ ஓய்வின்,
மறு சந்திப்பின்
ஒளிரும் சுகம் வாழ்கிறது

அந்த நாள் காலை/
நான் நதியில் குளிக்கும் நேரம்
தண்ணீரில் பார்த்தோம்
எங்களது பாதங்கள்
தொடர்ந்தது
இந்தப் பாதங்கள்
என்னுடைய பாதங்கள் இல்லை
இந்த உடல் என்னுடையது இல்லை
எதுவும் என்னுடையது இல்லை
கணவன், வீடு, வாசல்
பசுக்களின் கூட்டம்
எதுவும் என்னுடையது இல்லை/

இந்த உயிர் என்னுடையது இல்லையானால்/
மரணமும் என்னுடையது இல்லை
நான் என்றென்றும்
பசிப்பிணியால் வாடுகிற
விண்வெளி வரை
விரிகிறது
என்னுடைய இரண்டு எல்லையில்லா
தோள்களில்
நான் கடுமையான இடமாக இருக்கிறேன்
சூன்ய இடமாக இருந்து போவது மட்டும்
யாரோ ஒருவரின் விதியில் இருக்கிறது.

ஹிந்தியில்: ரமாகாந்த் ரத் (ஒரியா கவிஞர்)
தமிழில் : வசந்ததீபன்

ARANYANI

VIJENI

CHAPTER - 3

1439, Aani Maatham, Siddhārthi Aandu
Arava Kingdom
Athikoodoor

Kathiravan woke when the bullock cart bumped on a stone. They had been travelling long, and the journey was tiresome. But it did not matter anymore. Soon, he was going to reach his house. The little boy looked over to his mother, and Mathangi was staring at the rows of trees that passed by. He leaned on her shoulder and yawned. She kissed him on his hair and patted his shoulder.

"Where are we?"

"Somewhere near the hills, I think," Mathangi said, without taking her eyes from the road. "Good sleep?"

Kathiravan pushed aside the short curtain to the left of the cart. "Not, as usual, Mother."

"Do not worry, everything will be fine soon."

He peeked outside; it was starting to grow dark, and the roads were eerily quiet except for the sound of their chariot. "When will we reach, Mother?"

"Can't you see the beauty of nature welcoming us? We are not far away, Kanna."

"Hmmm." His voice came out muffled, "I just want to be there already."

Mathangi turned to her son and wrapped an arm around him. "I know you want to go home. We will reach soon."

A gust of wind brushed across Kathiravan's face, relishing the familiar smell of roasted beans. It brought him the consciousness of the arrival of his village. He lifted his head, scrutinising the stone signboard.

"ARAVA–ATHIKOODOOR VILLAGE."

Of all his friends, he was the only one who knew to read and write. Sometimes, it sort of gave him unexplainable happiness. The bullock cart rolled through several closely packed houses and finally stopped at one of the mud huts.

Vishnu in a plain angavastram over his upper body was waiting anxiously on the veranda. He was from the family that had been serving the royals for generations, and was the chief warrior. He knew that his son was coming today, after six days of treatment. That was the deal, if his little boy went to get treatment for his illness, Vishnu had promised to spend time with him.

Kathiravan jumped down from the cart. "Father!"

"There comes my boy!" Vishnu rushed outside, his white antariya fluttering around his brawny legs. "I have been waiting to see you both." He lifted Kathiravan onto his shoulder and planted kisses all over his face.

"Have you forgotten our deal, Father?"

"Ha-ha, no Kanna, I will stay up the night with you."

"Yaay!" The little boy hopped down from his father's arms and scurried inside, tightly clutching his dhoti from falling.

Vishnu turned towards his wife. "How was the treatment Mathangi? Any improvement in his health?"

She lifted her chin to face her tall husband. "Yes Deva, the treatment went well, but he chocked, and vomited blood twice. However, Maruthuvar has asked us not to lose hope."

Mathangi was one of the most beautiful women in the village. She made people go jealous of her for the beauty and the calmness she held. The ever brighten face was not like before. She had become dull and low since her son fell prey to the unknown illness. They had been trying, but the cure was never to be found.

"Father!" he cried from inside the house, "Come soon."

A tiny kitchen, two wooden chairs, a not-so-large reed mat, and that was quite it that was placed in their living room. There was a window box with a cotton curtain overlooking the only room that was structured in the hut. Kathiravan and Vishnu had comfortably settled down on the mat spread on the mud floor, to spend time with each other.

"Father! Father!" He jumped up and down. "I got a new friend in the Siddhar Koodam."

"That is good, Kanna."

"And he is so good, Father. He keeps playing with me and makes me laugh every time. Only—"

"Only?"

"His thamaiyan hurts me, Father."

"Hurts? Did he beat you?"

"No… no, Father." He stared at his toes for a few seconds. "He keeps telling me that I am going to die, Father."

Vishnu's face felt hot. Unable to face his son, his eyes fitted around. The room contained a small thread cot, a lantern over a mirror, and a small stone pedestal. A butterfly was buzzing, up and down, up and down, trying to get out.

"Father?"

Clearing his throat, he held Kathiravan's shoulder and looked directly at him. "That is not true, Kanna. His brother seems to be a bad boy, do not be friends with him anymore."

"But Father, he says that all the children admitted in the Koodam are going to die, Father."

What would I tell this innocent child? When I itself did not have answers to the questions that lingered around me, how am I going to answer him?

The count had been increasing. In the past three months, five children had died in their village. Vishnu never kept count of all the neighbouring villages, because he would never be able to take in the total count of the kingdom.

He looked at his son, who was soon going to be six years old. He was becoming so thin, day by day, that anyone could take his spindly body and snap over their knee. That was how the disease affected the infants. When they grow, their body would lack the necessary nutrients and would eventually give up.

"No Kanna." He kissed his pale forehead. "The Koodam is for making you into the strongest and bravest boy."

Kathiravan tilted his head and gave a confused look. "Is it Father?"

"Yes, yes, Kanna! It is for creating strong men for our kingdom! When bad people affect our kingdom, we should be ready to fight them out."

His tiny eyes brightened with joy. "I will, Father! I will!"

"I know Kanna!"

Vishnu told a story about how their former king Sukamaandran won the battle against their rival Valasai kingdom until he went to sleep.

In the kitchen, Mathangi's lean hands flattened the rice dough with her pin. She rolled it again, repeatedly, until it was long and papery. Then, she filled the dough with daal and sealed it. When the steaming pot was ready, she placed the round, almost ball-like dough into it.

After a week of eating his desperate own cooked food, Vishnu came inside the kitchen sniffing the rich smell. He playfully snatched his copper plate from his wife, placed it on the wooden chowki, and settled on the mat. He took a bite of the golden brown dumpling with the reddish-orange side dish. The tomato chutney was smooth while the dumpling was crispy, and the combination tasted immensely satisfying. The warm mixture was pure ambrosia in his mouth.

He raised his brows. "It is amazing, Devi."

Mathangi paused from the dough that she was flattening. "I love that look in your eyes when you are delighted, Deva."

"I know you did this despite your tiredness just because I love it."

"Hmm-Hmm" She smiled and placed another dumpling on his plate.

For minutes, he was seen digging into the rich food with ravenous hunger. He ate rapidly, stuffing his mouth too full. After letting out a massive belch at the end, he sauntered to the room and covered Kathiravan with a thin blanket.

While he was gone, Mathangi cleared the dishes and began to scrub the pots with ash. And as usual, she would not retire until they were pristinely clean.

"Mathangi?"

She peered at the front door. A woman in a plain brown sari and only a pair of glass bangles as her ornament, looked eagerly at her.

"Yes, Savithri. Come in." She looked into her eyes and saw tears. "Is everything fine, Savithri?"

"I-I—"

Mathangi directed her to sit on the mat near the kitchen and darted across the room to the wooden table. A large earthen pot stood by it, and she took a glass of water towards her. "Calm down, Savithri." She looked at her tangled hair. "Tell me, what happened?"

Savithri dimmed the wick in the lantern that was placed near her cot. When she was about to retire to sleep, there came the sound of footsteps. At first, it was as soft as a whisper and sounded quite distant. But slowly it grew in intensity until it was right next to her ear. Gulping down nervously, she relit the lantern. And before it illuminated the room, a shadow passed by the wooden bars of the mud window.

She forced her body to inch forward. What was it?

Thump. Thump. Thump. Thump.

Savithri heard the knocks on her door. Swallowing the lump that had formed in her throat, she asked, "Ummm, who is it?"

Taking the largest inhale she ever made in her life, she inched towards the door. And called. There was no sound. Sighing, she placed her ear against the wooden door and called out again. No sound. Another shaky sigh escaped her parted lips.

She knew someone was in there. "Who knocked?"

No answer.

Just when she was about to turn back to her room, without warning, the door came open. She stumbled backward, falling in the process. A man, his face completely covered in black cloth, entered and took her hand by force.

She twisted herself, protesting in spite of his grip. "HEEEEELLLLLPPPPP!"

The steady hands chocked her neck. "Shuushhhh"

"Help! Heelllp!"

He slapped and she fell with the force of it. She had not expected him to be so strong. Though his hand was empty, it felt like being hit with a hammer. Ignoring the burn she felt in her cheeks, she stood up on her legs and, tried to escape the trap. But, the muscular hands pushed her against the wall. The bulky stranger buried his nose in the crook beneath her ear and inhaled her scent.

A shiver ran down her skin. "Pleassee…"

"Dare to make a sound!" He started pulling her sari out of place.

"Noooo… Please… Pleaaaaseeee," Savithri cried, tightly clutching her sari.

Without hearing to her pleas, the man performed his intended actions. When she realised that he was immersed in ripping her clothes apart, she lifted her knee forcefully and hit him in between his legs.

An unbearable pain shot his head. Clutching his groin, the man fell on his knees. Savithri pushed him to the floor and darted out of her hut towards Mathangi's house.

"Fo-for the past two days, I fe-felt someone constantly moving past my window," she said, sobbing in between the words. "To-today also I felt the same. Wh-when I went to see wh-who it was, someone covered in black cloth, pushed me inside and st-started ripping my s-sari." She displayed her torn sari towards her neighbour.

Mathangi's jaw dropped in disbelief. "Then?"

"Th-then I pushed him away and came running to you." She wiped her eyes with the back of her hand.

"You should have told me earlier, Savithri. What if something would have happened?" Mathangi adjusted Savithri's hair and sari in place. "Drink the water and calm down. I will be back in two minutes."

She stood up, went towards Vishnu, and whispered, "Swami, we need to talk."

"Yes, Mathangi."

"Deva, Savithri has come."

He peeked from the window towards the kitchen. Savithri was staring at the tumbler in her hand. "She looks disturbed. What happened?"

"Yes, Swami, someone had misbehaved with her. Fortunately, she escaped before things went out of hand."

"Misbehaved? In Arava? Who?" Vishnu's furious questions came without a pause.

"She does not know Deva. But we should do something for the poor girl."

"What guts to misbehave in our kingdom?" He clenched his jaw. "I will talk to Maharaja and get her married to a good person."

“Ye-yes, Deva. That sounds like a good idea. She will feel secure, and will have a family of her own.”

“Poor girl… do not leave her alone. I will sleep at her house tonight. You both sleep with Kathiravan.”

“Yes, Deva.”

They both went towards Savithri, who was still sitting in the same position. Her big round eyes were red with constant crying, and her curly hair was entirely out of place.

“Savithri,”

The moment Vishnu’s voice reverberated, she stood up and covered her shoulder with her sari pallu.

“Tonight you sleep here.” He looked at her hands that did not cease to stop shivering. “Do not worry, we will soon find a solution.”

She folded her hands in acknowledgment. “Thank you, Vishnu thamaiyan.”

“I will come in the morning, both of you sleep well.”

Just as he turned to leave, Mathangi called from the kitchen, “And Deva, the staples will not last a week more.”

Vishnu let out a deep

The soil of Arava screamed for water and people waited for long months for the dazzling of thunders. Mostly the fields grew weeds, not because there were no farmers, but there was no rain. The kingdom was completely drowned in grave sadness after the demise of their former ruler, Maharaja Sukamaandran. There were a few functioning roads, no gurukulams, or temple, and the population was both malnourished and dishevelled. After all that happened with the kingdom’s holy deity, people believed that their fate would never be changed.

Mathangi sighed in grave sadness. “Deva, six months passed by; still there is no sign of rain, nor cloud is coming. We do not know what will happen. People in the outskirts are dying of hunger. We cannot let this happen, Deva.”

Hearing to her pleas, Vishnu’s face clouded with unwanted fear. “I know. Tomorrow we will be having a meeting with the entire village. Maharaja has announced for one.”

“Hope we will get a solution, Deva.”

He silently nodded at her and made his way towards Savithri’s hut.

பழமொழிகள்

நல்ல அர்த்தமுள்ள தமிழ் பழமொழிகள் சிந்தித்து ரசிப்பதற்கு...

1. தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.

2. தீயில் இட்ட நெய் திரும்ப வராது.

3. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.

4. தேரோடு போச்சுது திருநாள். தாயோடு போச்சுது பிறந்தகம்.

5. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.

6. செத்த பிணத்திற்கு அருகே இனி சாகும் பிணம் அழுகிறது

7. கரந்தப் பால் காம்பில் ஏறாது.

8. கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயை தாண்ட கால் இல்லை

9. கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.

10. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். மரம் ஏறி கை விட்டவனும் கெட்டான்.

11. காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.

12. கூப்பாட்டால் சாப்பாடாகுமா?

13. எரிகிற வீட்டை அவிக்க கிணறு வெட்ட நாள் பார்த்தது போல, கும்பிட்ட கோயில் தலை மேல் இடிந்து விழுந்தது போல, சில்லரைக் கடன் சீரழிக்கும்.

14. சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக்கு ஆகுமா?

15. உறவு போகாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது. (எத்தனை பெரிய உண்மை. போய் வந்து கொண்டிருந்தால் தான் உறவு நிலைக்கும். கொடுத்த கடனைக் கேட்டுக் கொண்டே இருந்தால் தான் திரும்பக் கிடைக்கும்).

16. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமுமா? (இன்று பலரும் இப்படித்தானே இருக்கிறார்கள்?)

17. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது.. (எல்லாம் காலத்தின் கோலம்.)

18. அறப்படித்தவன் அங்காடிக்குப் போனால் விற்கவும் மாட்டான், வாங்கவும் மாட்டான். (அதிகமாய் படித்தவர்கள் பலரும் இப்படித்தான்).

19. உள்ளப் பிள்ளை உரலை நக்கிக் கொண்டிருக்க மற்றொரு பிள்ளைக்கு மனம் ஏங்குதாம்.

20. இறுகினால் களி. இளகினால் கூழ்.

21. ஊன்றக் கொடுத்த தடி மண்டையைப் பிளந்தது.(யாருக்கு உதவுகிறோம் என்று சிந்தித்து உதவா விட்டால் இப்படித்தான்)

22. எடுப்பது பிச்சை. ஏறுவது பல்லாக்கு.(பலருடைய போக்கு இப்படித்தான் இருக்கிறது)

23. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?(எட்டி பழுத்தாலும் அதன் கசப்பால் சாப்பிட உதவாது. கஞ்சனுக்கு எத்தனை செல்வம் வந்தாலும் அதில் யாரும் பலன் அடைய முடியாது).

24. விசாரம் முற்றினால் வியாதி. (கவலை அதிகமானால் வியாதியில் தான் முடியும்).

25. பைய மென்றால் பனையையும் மெல்லலாம்.(நிதானமாக சிறிது சிறிதாக மென்றால் பனையைக் கூட மென்று விடலாம். அதாவது நிதானமாக தொடர்ந்து செய்து கொண்டே இருந்தால் எத்தனை பெரிய காரியத்தையும் செய்து முடித்து விடலாம்.)

26. காற்றில்லாமல் தூசி பறக்காது.(நெருப்பில்லாமல் புகையாது என்ற பழமொழிக்கு இணையான இன்னொரு பழமொழி)

27. பண்ணின புண்ணியம் பலனில் தெரியும்.(நாம் அனுபவிக்கும் பலன்களைப் பார்த்தாலே சேர்த்திருக்கும் புண்ணியம் எவ்வளவு என்பது தெரிந்து விடும்).

28. பிடித்த கொம்பும் ஒடிந்தது, மிதித்த கொம்பும் முறிந்தது. (துரதிர்ஷ்டம் எப்படி எல்லாம் சோதிக்கிறது என்பதற்கு அழகான பழமொழி. ஒரு மரத்தில் ஏறி ஒரு கொம்பைப் பிடித்துக் கொள்ளும் போது அது ஒடிந்து போக, கீழே விழாமல் இருக்க இன்னொரு கொம்பில் காலை வைத்து ஊன்றினால் அந்தக் கொம்பும் முறிந்தால் எப்படி இருக்கும்?)

29. பாடுபட்டுக் குத்தினாலும் பதரில் அரிசி இருக்காது.(பதர் என்பதே அரிசி இல்லாத நெல் தான். அதனால் என்ன தான் குத்தினாலும் அதில் அரிசி கிடைக்க வாய்ப்பில்லை. மனிதனின் பயனில்லாத முட்டாள்தனமான முயற்சி குறித்துச் சொல்லும் பழமொழி)

30. இட்டதெல்லாம் பயிராகாது. பெற்றதெல்லாம் பிள்ளையாகாது.

31. கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுப்பான். (தயிரில் வெண்ணெய் எடுத்த பிறகு தான் மோராகிறது. அந்த மோரிலேயே மீண்டும் வெண்ணெய் எடுக்கும் அளவு சாமர்த்தியம் வாய்ந்தவர்களைப் பற்றி இந்தப்பழமொழி சொல்கிறது.

32. வாங்குகிற கை அலுக்காது.(வாங்கிக் கொண்டே இருப்பவர்களுக்கு அலுப்பே இருக்காது.)

33. அடுத்த வீட்டுக்காரரே பாம்பைப் பிடியுங்க. அது அல்லித்தண்டு போல ஜில்லென்றிருக்கும். (என்ன சாமர்த்தியம் பாருங்கள்!)

34. உயிரோடு ஒரு முத்தம் தராதவள், செத்தால் உடன்கட்டை ஏறுவாளா?

35. அய்யாசாமிக்குக் கல்யாணம், அவரவர் வீட்டில் சாப்பாடு.

36. அவனே இவனே என்பதை விட சிவனே சிவனே என்பது நல்லது.

37. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறி.

38. ஆகிறவன் அரைக்காசிலும் ஆவான். ஆகாதவனுக்கு ஆயிரம் கொடுத்தாலும் விடியாது.

39. ஆயிரம் உடையான் அமர்ந்திருப்பான்,

அரைப்பணம் உடையான் ஆடி விழுவான்.

40. ஆனை மேல் போகிறவனை சுண்ணாம்பு கேட்டால் கிடைக்குமா?

41. இந்த எலும்பைக் கடிப்பானேன், சொந்தப்பல்லுப் போவானேன்?

42. இந்தக் கூழுக்கா இத்தனை திருநாமம்?

43. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.

44. இடுகிறவள் தன்னவள் ஆனால் முதல் பந்தியில் உண்டால் என்ன, கடைப் பந்தியில் உண்டால் என்ன?

45. உண்டு கொழுத்த நண்டு வளையில் தங்காது.

நன்றி வாழ்க நலமுடன் வளமுடன்

கிட்டு ராணி சென்னம்மா

ஒரு பேரரசை எதிர்த்த தமிழ்நாட்டுப் பெண்ணின் வீரத்தினால் மின்னிய சுதந்திரச் சுடரொளி

முனைவர் வி ஆனந்தி
உதவிப் பேராசிரியர்., தில்லி பல்கலைக்கழகம்.

சுருக்கம்

கிட்டூர் ராணி சென்னம்மா (1778–1829) இந்தியாவின் ஆரம்பகால விடுதலை போராட்ட வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். 1824 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனியை எதிர்த்த ஆயுதப் போராட்டத்தை அவர் வழிநடத்தியது, இது 1857 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் போருக்கு முன்னே நடந்த மிக முக்கியமான எதிர்ப்பாகும். சிறு வயதில் போர் உத்திகள் கற்ற ஓர் சிறப்பான போராளியாக விளங்கிய சென்னம்மா, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் Doctrine of Lapse என்ற கொள்கையை எதிர்த்து, தத்துக்குழந்தையை அரசுடமை வாரிசாக அறிவித்தார். இதன் மூலம் அவர் பிரிட்டிஷ் ஆட்சிப் போக்குக்கு சவால் விடுத்தார். கிட்டூரின் முதல் போரில் வெற்றிபெற்றபோதிலும், இரண்டாவது போரில் பிடிபட்டுப் சிறையில் அடைக்கப்பட்டார். அவருடைய தோல்விக்குப் பின் கூட, அவருடைய வீரத்திற்கும் எதிர்ப்புக்கும் நினைவுச்சின்னங்கள், மக்கள் பாரம்பரியம் மற்றும் கர்நாடகாவின் நாட்டுப்புறக் கலாச்சார வழித் தடங்கள் மூலம் மரியாதை செலுத்தப்படுகிறது. அவர், இந்தியாவின் நீதிக்கான மற்றும் சுயாட்சிக்கான போராட்டத்திற்கு தொடர்ந்தும் ஈர்ப்பு சக்தியாக உள்ளார்.அறிமுகம் ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தி, தன்னுடைய துணிச்சலும் தீர்மானமும் மூலம் இந்தியாவின் போராட்ட வரலாற்றில் தனித்துவமான இடத்தை பிடித்தார் அவரைப் பற்றி அறிவது பயனுடையதால் ஆதலின் இவ்வாய்வு இங்கு செய்யப்படுகிறது.

அறிமுகம்:

இந்திய திருநாட்டின் விடுதலை வரலாற்றை சில பெண்கள் மட்டும்தான் நம் மனங்களில் தீவிரமாக பதிந்திருக்கிறார்கள் அவர்களில் முதன்மை பெற்ற நிற்கிறார் எட்டூர் ராணி சென்னம்மா

கிட்டூர் ராணி சென்னம்மாவின் வாழ்க்கை வெறும் போராட்ட வரலாறு அல்ல; அது ஒருவரின் தன்னம்பிக்கையால் நிரம்பிய வீரத் தொடக்கம். இந்தியாவின் முதல் விடுதலைப்

போருக்கு (1857) முன்னரே, சென்னம்மா 1824 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தைரியமான கிளர்ச்சியை நடத்தினார். அவரது சிறிய மாநிலமான கிட்டூரின் வளமும், இராணியின் தீராத வீரமும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக முக்கியமான நிமிடமாக மாறியது.

சென்னம்மா ஒருவருடைய சுதந்திரத்தை மட்டுமே காப்பாற்ற நினைக்கவில்லை; அவர் பெண்களின் தலைமைத்துவத்திற்கு முன்னோடியாக விளங்கினார். அவர், ஒரு போராளியாகவும், ஒருங்கிணைப்பாளியாகவும், எதிர்ப்பின் பரிமாணமாகவும் இருந்தார்.

வீரராணியின் முன்னோடி வாழ்க்கை:

1778 ஆம் ஆண்டு, கர்நாடகாவின் பெல்காவி மாவட்டத்திலுள்ள காகதி என்ற சிறிய கிராமத்தில் ராணி சென்னம்மா பிறந்தார். அவரது குடும்பம் பண்பாட்டு மற்றும் போரியல் மரபுகளை கொண்டிருந்தது. சிறுவயதிலேயே அவர் தன்னம்பிக்கை, பொறுமை மற்றும் தலைமைத்துவத்திற்குரிய பண்புகளை வளர்த்தார்.

அந்த காலத்தில் பெண்கள் குடும்பப் பொறுப்புகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டியிருந்த நிலையில், சென்னம்மா குதிரை சவாரி, வாள்வீச்சு, அம்பெய்தல் மற்றும் போர் உத்திகள் ஆகியவற்றில் பயிற்சி பெற்றார். சிறு வயதிலேயே அவர் போரியல் திறமைகளை வெளிப்படுத்தினார், இது அவரை எதிர்கால போராளியாக உருவாக்கியது.

சிறிய வயதிலேயே அவர் கிட்டூர் அரசர் மல்லசர்ஜா தேசாயை திருமணம் செய்துகொண்டார். அந்த இராச்சியம் பொருளாதார ரீதியாக வளமானதும், மூத்த தலைவர்களின் ஆதரவு பெற்றதுமானதாக இருந்தது. சென்னம்மா தனது புது பங்கு மற்றும் அரசியல் பொறுப்புகளை திறம்பட ஏற்றுக்கொண்டு, மக்களின் நலனில் ஈடுபட்டார்.

1816 ஆம் ஆண்டில் அவரது கணவர் காலமானார். பின்பு, ஒரு பெண் அரசியாக ஆட்சி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு, அவர் அரசு பொறுப்பை தனது தோள்களில் ஏற்றுக்கொண்டார். 1824 ஆம் ஆண்டில், அவரது ஒரே மகனும் காலமானதால், அவரது ஆட்சிக் காலம் மிகவும் சிக்கலானதாக மாறியது. ஆனால், சமூக எதிர்ப்புகளை மீறி, அவர் சிவலிங்கப்பா என்ற சிறுவனை தத்தெடுத்து அரச வாரிசாக அறிவித்தார். இந்த முடிவு அவரது எதிர்கால போராட்டத்திற்கான காரணமாக அமைந்தது.

பிரிட்டிஷாரின் ஆக்கிரமிப்பு மற்றும் முதல் கிட்டூர் போர் (1824)

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி, *Doctrine of Lapse* என்ற கொள்கையை கொண்டு வந்தது. அந்த கொள்கையின் படி, ஒருவேளை எந்தவொரு அரசருக்கும் நேரடி ஆண் வாரிசு இல்லையெனில், அந்த அரசாங்கத்தை பிரிட்டிஷ் ஆட்சிக்குள் இணைத்துவிடலாம். இந்த கொள்கை இந்திய அரசியல் மரபுகளை புறக்கணித்தது.

பிரிட்டிஷ் அதிகாரிகள், சென்னம்மாவின் தத்தெடுத்த வாரிசை அங்கீகரிக்க மறுத்து, அவரது இராச்சியத்தை கைப்பற்ற முயன்றனர். அவர் சமாதானங்களும் அமைதிக்கான கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன. எனவே, அவர் போருக்குத் தயாராகினார்.

1824 ஆம் ஆண்டு அக்டோபரில், பிரிட்டிஷ் படைகள் கிட்டூரை தாக்க, ராணி சென்னம்மா அவரது சிறிய ஆனால் தன்னம்பிக்கையான படைகளை ஏற்படுத்தி எதிர்த்தார்.

போரின் முக்கிய நிகழ்வுகள்:

கொரில்லா போர் முறை :

ராணி சென்னம்மா தனது படைகளுக்கு கொரில்லா போர் திறன்களை வெற்றிகரமாக பயன்படுத்தினார் இது சாதாரணமான போர் தந்திரங்களை கொண்டது, அதில் மின்னல் வேகத் தாக்குதல்கள் திடீர் மறைமுகத் தந்திரங்கள் மற்றும் திட்டமிடப்பட்ட பின் நடவடிக்கைகளும் அடங்கும் இந்த முறைகள் பாரம்பரிய போர் தந்திரங்களில் நம்பிக்கை கொண்ட பிரிட்டிஷ் படைகளை வித்தியாசமான முறையில் விரட்ட செய்தன

கொரில்லா போர் திறனின் முக்கிய அம்சங்கள்:

திடீர் தாக்குதல்கள்: ராணி சென்னம்மாவின் படைகள் பிரிட்டிஷ் படைகளின் ஆதரவு அசைவுகள் மற்றும் முகாம்களில் திடீர் தாக்குதல்களை நடத்தினர்

தடுப்பு காவல்: சிறிய படைகள் இருந்தாலும் வீரமும் நம்பிக்கையும் கொண்ட வீரர்கள் சென்னம்மாவின் தலைமையில் நம்பிக்கையுடன் போராடினர்

பரிச்சயமான நிலப்பரப்பு: கிட்டூரின் மலை மற்றும் காடுகளின் நிலப்பரப்பை பயன்படுத்தி, பிரிட்டிஷ் படைகளுக்கு புதியதாக இருந்த பகுதிகளில் முன்னிலை பெற்றனர்.

விரைவான பின்வாங்கல்: தாக்குதலுக்குப் பிறகு விரைவில் பின்வாங்கி நீண்ட கால மோதல்களை தவிர்த்து படைகளின் உயிர்களை பாதுகாத்தனர் இந்த அணுகுமுறை பிரிட்டிஷ் படைகளை திகைப்பில் ஆழ்த்தி அவர்களின் தந்திரங்களை மறுபரிசீலிக்க செய்தது

கிட்டூர் கோட்டையின் பாதுகாப்பு:

கிட்டூர் கோட்டை ராணி சென்னம்மா போராடிய முக்கிய இடமாக இருந்தது இது அரசின் அடையாளமாக மட்டுமல்லாமல் ஒரு மத்திய தற்காப்புக் கோட்டம் ஆகவும் இருந்தது.

கட்டிடக் கொள்கைச் சாமர்த்தியம்:

கோட்டை உறுதியான கல் சுவர்களுடன் அமைக்கப்பட்டது,.

இது மறைத்தது தந்திரங்கள் மற்றும் விலங்கு காலிகளுக்கும் பீரங்கி வீரர்களுக்கும் வசதியான கண்காணிப்பு கோபுரங்களை கொண்டது உயரமான அமைவிடம், எதிரிகளின் அசைவலை முன்கூட்டியே கவனிக்க அனுமதித்தது

காப்பாய்ச்சல் மற்றும் வஞ்சகத் தந்திரங்கள்:

நேரடி போர் உடன் ராணி சென்னம்மா இரட்டை தந்திரங்களையும் பயன்படுத்தினார்.

1. *பிரிட்டிஷ் கம்பெனியுடன் சமரசமாக ட்ரை ஃபுட் செலுத்தும் மொழி வழிகளை முன்மொழிந்தார், ஆனால் அது தோல்வியடைந்ததும் போருக்கு தயாராக இருந்தார்*

2. *வஞ்சகப் பயிற்சிகள்: தவறான படைகள் மற்றும் முகவர்களை உருவாக்கி பிரிட்டிஷ் படைகளை குழப்பம் ஏற்படுத்தினார்*

3. *சங்கோலி ராயன்னாவின் போத்திரனுக்கு ஊக்கம்.: ராணி சென்னம்மாவின் யுத்த திறமைகள் அவளது தொண்டரான சங்கோலி ராயன்னாவை ஊக்குவித்தன.*

சென்னம்மா சிறைபிடிக்கப்பட்ட பிறகும் அவரது விசுவாசமான தளபதி சங்கோலி ராயண்ணா போராட்டத்தை தொடர்ந்தார்.

ராய் அண்ணா கொரில்லா போர் தந்திரங்களை தழுவி பிரிட்டிஷ் ஆதரவு வலிகளையும் தனிப்பட்ட முகாம்களையும் தாக்கினார்

1831இல் ஆங்கிலேயர் கைதான ராய் அண்ணா தூக்கிடப்பட்டார்

பிரிட்டிஷ் தளபதி கொல்லப்பட்டார்: போரின் போது பிரிட்டிஷ் தளபதி சிங் ஜான் தாக்கரே கொல்லப்பட்டார்.

பிரிட்டிஷ் பின் வாங்கினர்: எதிர்பாராத போராட்டத்திற்கு ஆளான பிரிட்டிஷ் படைகள் பெரும் இழப்புக்கு உள்ளாகி பின்னடைவு அடைந்தனர்.

இந்த வெற்றி இந்திய அரசர்களால் பிரிட்டிஷாராரை எதிர்த்து வென்ற முதலாவது முக்கிய சம்பவங்களில் ஒன்றாகும் இது கிட்டூர் மக்களின் எதிர்ப்பிற்கு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

கிட்டூரின் இரண்டாம் போர்:

முதல் போரில் பின்வாங்கிய பிரிட்டிஷார், மிகப்பெரிய படைகளுடன் மீண்டும் தாக்குதல் நடத்தினர். அப்போதும் ராணி சென்னம்மா வீரத்துடன் எதிர்த்தார்.

அவசர தானியம் அடைப்பு: ஆங்கிலேயர்கள், சித்தூர் கோட்டத்தைச் சுற்றி, உணவுப் பொருள்கள் மற்றும் உதவிகளை தடை செய்தனர்.

தீவிர குண்டு வீச்சு: கோட்டைச் சுவர்கள் பலவீனம் ஆகும் வகையில் மிகுந்த கனமான ஆயுதங்களை பயன்படுத்தினர்.

உள்ளூர் ஆதரவை இயக்குதல்: ராணி சென்னம்மா உள்ளூர் ஆதரவை திரட்டுவதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்திருந்தார் கிட்டூர் மக்களை பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக குரல் கொடுக்க செய்தார்.

சிவிலியங்களை ஆக்கிரமித்தல்: விவசாயிகள், வணிகர்கள், மற்றும் கைவினைஞர்கள் ஆகியோர் உணவு, ஆயு, மற்றும் ஆயுதங்களை சரி செய்ய உதவுவதற்கு திரட்டப்பட்டனர்.

உணர்வூட்டல்: தனது வீரத்தலமாய் திறனால் சென்னம்மா தனது படைகளுக்கும் மக்களுக்கும் ஆழ்ந்த நம்பிக்கையையும் உறுதியையும் ஏற்படுத்தினார் இது மக்களின் எதிர்ப்பை பிரிட்டிஷ் தடுக்க முடியாத நிலை உருவாக்கியது.

குறைவான ஆதாரங்களை சிறப்பாக பயன்படுத்தல்:

மனித வளத்திலும் ஆயுதங்களிலும் குறையுள்ள போதிலும் ராணி சென்னம்மா அவற்றை அதிகமாக . பயன்படுத்தினார்.

படைகள் பயிற்சி அளித்தல்:: பயிற்சி பெற்ற வீரர்களோடு சிவிலியன்களும் சேர்ந்து அவர்களுக்கு அடிப்படை யுத்த பயிற்சிகளை அளித்தார்.

சாதாரண இந்திய ஆயுதங்கள்: கூறிய கருவிகள் வாழ்கள் மற்றும் வில்களை மட்டுமல்லாமல், சில துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகளையும் பயன்படுத்தினர்.

அத்தகைய திட்டம்: அரசு பொருளாதாரத்தை போருக்கு திருப்பி கோட்டையின் பாதுகாப்பிற்கு தேவையான பொருட்களை வாங்க முக்கியத்துவம் கொடுத்தார்

தலைமைத் திறன் மற்றும் உற்சாகம் எழுப்புதல்:

தலைவராக ராணி சென்னம்மா தந்திர ஆளுமையை வெளிப்படுத்தியதுடன் தன் படைகளுக்கு பெரிய உற்சாகத்தை அளித்தார்.

தந்திரமான முடிவெடுத்தல்: கிட்டூர் முதல் போர் போது தனது படைகளை சிறிய பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் முக்கிய பணிகளை வழங்கினார் உதாரணமாக ஆதரவு தந்திரங்களை தாக்குதல் முக்கிய அதிகாரிகளை இலக்காகக் கண்டு தாக்குதல் மற்றும் கோட்டையின் பாதுகாப்பு. தற்காப்பு மற்றும் தாக்குதல் தந்திரங்களை இணைத்துக் கொண்டு ஆட்சியையும் போராட்டத்தையும் வெற்றிகரமாக மேம்படுத்தினார். போர்க்களத்தில் நேரடியாக தலைமையேற்றுப் போராடினார் இது அவருடைய படைகளின் உற்சாகத்தை மேலும் தூண்டியது.

பிரிட்டிஷ் அதிகாரிகளை இலக்காக குறித்தல்:

ராணி சென்னம்மாவின் படைகள், முக்கியமான பிரிட்டிஷ் அதிகாரிகளை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

கிளர்ச்சி போர்முறைகள்: ராணி சென்னம்மா கொரில்லா போர் முறைகள் (guerrilla tactics) பயன்படுத்தி, எதிரிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தினார்.

சென்னம்மாவின் மரபு

அவருடைய வீரத்திற்காக இந்தியா முழுவதும் பல நினைவுச்சின்னங்கள் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

பிரதிமைகள்– இந்திய பாராளுமன்றத்திலும், கர்நாடகாவில் பல இடங்களிலும் அவரது சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடகங்கள், திரைப்படங்கள் – சென்னம்மாவின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு பல நூல்கள், நாடகங்கள், திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பெண்கள் முன்னோடி – அவரது வீரத்தால், பெண்கள் தலைமைத்துவத்திற்கான புதிய பாதையை உருவாக்கினார்.

கிட்டூர் திருவிழா ஆண்டுதோறும் கர்நாடகாவில் சித்தூர் திருவிழா கொண்டாடப்படுகிறது.

இயற்கை வரலாற்றில் சின்னம்:

அவரது வீரத்தை பாடும் கர்நாடக இசை மற்றும் நாட்டுப்புற பாடல்கள் இந்திய ரயில்வே புகழ்வாக" ராணி சென்னம்மா எக்ஸ்பிரஸ்" என்ற பெயருடைய ரயில் தொடங்கப்பட்டது.

அவர் ஒரு கலாச்சார களஞ்சியம்-பெண் என்றால் சாதனையாளி ராணி என்றால் போராளி என்பதை நிரூபித்தவர்.

முடிவுரை

ராணி சென்னம்மாவின் போர் தந்திரங்கள் அவளது துணிச்சலையும் புத்திசாலித்தனத்தையும் திறமையையும் வெளிப்படுத்தின பெரும் சவால்களுக்கு இடையிலேயே இடையிலும் அவள் எதிர்ப்பினை கிளற வைத்தது பிரிட்டிஷ் போர அரசுக்கு சவாலாக இருந்தது.

ராணி சென்னம்மாவின் போராட்டங்கள் ஒரு பெண் போராளியின் திறனை பறைசாற்றுகின்றன. ஆங்கிலேய பேரரசின் முன்னோடி எதிர்ப்பாளராக அவரது பெயர் நிரந்தரமாக இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒளிரும்

ராணி செல்லம்மாவின் பெயர் வெறும் வரலாற்று புத்தகத்தில் அல்ல நம் மனதிலும், வீரத்திற்கான ஒவ்வொரு கதைகளும் வாழ்கிறது அவர் தோற்றத்தில் இல்லை அவர் ஒரு வழிகாட்டி ,ஒரு சிந்தனையாளர் ,ஒரு போராளியின் அடையாளம்

"ராணி சென்னம்மா ஒரு பேரரசை எதிர்க்க வைத்த வீரராணி அவர் வாழ்ந்தார், போராடினார், ,அவர் வென்றார்-வரலாற்றில் நம் நெஞ்சிலும்"

மூலக் குறிப்புகள்

1.1. ராணி கிட்டூர் செல்லம்மா – இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை, கர்நாடக அரசின் அதிகாரப்பூர்வ இணையதளம்

2. 2. "இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்", தேசிய புத்தக நிறுவனம், இந்திய அரசு

.3. புயன், ஏ. (தொகுப்பு). (1979). இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள். தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை, இந்திய அரசு வெளியீடு

4.4. சுமித் சர்கார். (1983). நவீன இந்தியா: 1885-1947. மெக்மில்லன் வெளியீடு

5.5. விக்கிப்பீடியா பங்களிப்பாளர்கள். "கிட்டூர் சென்னம்மா" விக்கிப்பீடியா

6.6. தேவி, எல். (2000). தென் இந்தியாவில் பெண்கள் சுதந்திரப் போராளிகள். பாரதிய வித்யா பவன் வெளியீடு

7.7. "கிட்டூர் உற்சவம்" – கர்நாடக சுற்றுலா துறை

தமிழர்களின் இயற்கைத் தெய்வம்

பாமயன்

இயற்கையைத் தெய்வமாகக் காணும் மரபு பல பண்டைச் சமூகங்களில் உள்ளது. இயற்கையால்தான் வாழ்கின்றோம் என்ற புரிதலின் அடிப்படையில் எழுந்த உணர்வால் அதைப் போற்றும் பண்பும் உருவாகியுள்ளதைக் காண முடிகிறது. மழை, காற்று, வெயில், இடி, மின்னல் போன்ற மனிதர் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் பண்டை மக்களுக்குப் பெரும் அச்சத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்த காரணத்தால் அந்த இரண்டு உணர்வுகளைக் கொண்ட ஒன்றாக அந்த ஆற்றலைக் கருதியுள்ளனர். மக்களுக்கு அப்பாற்பட்ட அந்த ஆற்றல் உலகத்தை இயக்குவதாக நம்பினார்கள். அதையே தெய்வமாகக் கருதினார்கள்.

பண்டைச் சமூகங்களான, எகிப்து, சுமேரியா, சீனா, மாயா, இன்கா முதலிய பழங்குடிகள் இயற்கையைத் தெய்வமாகப் புரிந்து கொண்டனர். நிறுவனமயப்பட்ட இறையியல் அமைப்புகள் தோன்றுவதற்கு முன்பாக இந்த நிலை இருந்துள்ளது.

இன்கா நாகரிக மக்கள் பச்சையம்மா *(Pachamama)* என்ற தெய்வத்தை பூமித்தெய்வம் என்றும் வளமைத் தெய்வம் என்றும் கருதினார்கள். நடவு, அறுவடை ஆகியவற்றுக்கும் இதுவே தெய்வம் என்று கருதினார்கள். பச்சையம்மா என்பது தமிழ்ப் பெயர்போல உள்ளது நமக்கு வியப்பாகத் தான் உள்ளது.

பாரசீகர்கள் சுபென்டா ஆர்மதி *(Spenta Armaiti)* என்ற தெய்வத்தைப் பூவுலகத் தெய்வமாகக் கருதினர்.

கிரேக்கர்கள் 'கையா' *(Gaia)* என்ற தெய்வத்தை, பூமித்தாய் என்று அழைத்துக் கொண்டனர். நிலத்தையே தெய்வமாகக் கொண்ட மரபு இவர்களுக்கு உள்ளது.

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வைதீக மரபில் நான்காம் வேதம் என்று அறியப்படும் அதர்வண வேதத்தில் உள்ள 'பிரிதிவி சூக்தத்தில்' பூமி, கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்குமானதுணைவியாக அல்லது மனைவியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

'ஸா நோ பூதஸ்ய பாவயஸ்ய பத்னிவுரும் லோகம் ப்ருதிவி நஹ் க்ருணோது' *(அதர்வ வேதம்: 12.1)*

துணைவி என்பதைத் தெய்வமாகவும் சில மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். எப்படியானாலும் 'பிருதிவி' என்ற சொல்லாடல் பூமி என்பதைத் தெய்வமாகக் கருதுவதை அறிய முடிகிறது.

பழங்குடிச் சமூகங்கள் சில பகுதிகளை துய்யப் (புனிதம்) பகுதிகளாக உயர்த்தி வைத்துக் கொண்டனர். அந்தப் பகுதியில் உள்ள செடி, கொடிகளைப் பறிப்பது கூடாது. விலங்குகளைக் கொல்வது கூடாது, அது மட்டுமல்லாது தேவையற்ற ஒலிகளைக் கூட எழுப்பக் கூடாது போன்ற கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தனர். இந்த 'விலக்கு' அல்லது 'தவிர்ப்பு' *(taboo)* என்பது பல்லுயிர் ஓம்பல் என்பதற்கான அடித்தளம் ஆகும். உயிரியல் பன்மயம் மிக்க பல பகுதிகள் காக்கப்படுவது இன்றைய அரசுகள் கட்டுப்படுத்தும் ஒதுக்குக் காடுகள், சரணாலயங்கள் போன்றவற்றால் மட்டும் காப்பாற்றப்படுவதல்ல, ஆண்டாண்டு காலமாக பதியெழு அறியா பழங்குடிகள் தங்களுக்குள் வகுத்துக் கொண்ட விலக்குகள் வழியாகவே நடந்து வந்துள்ளன. அந்தச் சூழலியல் உணர்வுநிலை

அவர்களுக்கு வாய்க்கப் பெற்றிருந்தது. வெப்ப மண்டலப் பகுதிகளில் பழங்குடிகளால் காக்கப்பட்டுள்ள பரப்புக் காடுகளை அரசுகள் கூட காக்கவில்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன. *(Journal of Sustainable Forestry - Volume 42, 2023 - Issue 3).*

காடுகளில் தங்களுடைய முன்னோர்களின் மூச்சுக்காற்று உள்ளதாக உணர்கின்றனர். அதை 'ஆவிகள்' என்று அரைகுறையாகப் புரிந்து கொண்டு நாம் பகுத்தறிவு விளக்கம் கொடுத்துப் புறந்தள்ளுகிறோம். ஆனால் பேராற்றல் மிக்க அறிவியல் சமூகம் இயற்கையைப் பாதுகாக்க வில்லையே!

காலநிலை மாற்றம் போன்ற கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள இந்த துய்யக் காடுகள் முறையே சிறந்த அணுகுமுறை என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. பழங்குடிகள் பின்பற்றும் 'தவிர்ப்பு' முறையால் பல அரிய வகை உயிரினங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

எத்தியோப்பியாவில் தேவாலயங்களே இப்படிப்பட்ட துய்யக் காடுகளைப் பாதுகாக்கின்றன. அவர்கள் அங்குள்ள செடி, கொடி. புதர் என்று யாவற்றையும் தூய ஆவியின் வடிவங்களாகவே பார்க்கின்றனர். அவற்றைப் போற்றிப் பாதுகாத்தல் என்ற பண்பு இருந்துள்ளது. இவர்கள் இந்த 'தவிர்ப்புகளை' எழுதப்பட்ட சட்டங்கள் வழியில் பின்பற்றுவதில்லை, மரபு மரபாக வரும் வாய்மொழி ஆணையாகவே பின்பற்றுகின்றனர். அதற்கு 'முன்னோர் ஆவி' என்ற கருத்தியல் அவர்களுக்கு உதவி வருகிறது.

'சிம்பாப்வே' நாட்டுப் பழங்குடிகள் காலங்காலமாக யானைகளையும் குரங்குகளையும் வரிக்குதிரைகளையும், எருமைகளையும் கொல்லாமல் தவிர்க்கின்றனர். இப்போது அதற்கான அறிவியல் காரணம் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றைக் கொல்வதால் ஒருவகை நோய் அவர்களுக்கு வருவதாக ஆய்வுகளில் கண்டறிந்தார்கள். அதேபோல நைசீரியப் பழங்குடிகளிடம் செய்யப்பட்ட ஆய்வுகள் உணர்த்துகின்றன. 'நசோ சமண்யங்கா' என்ற பழங்குடிகள் யானையைத் தங்கள் குடிச்சின்னமாக அல்லது குலக்குறியாக வைத்துள்ளனர். பண்டைத் தமிழர்கள் இந்த அடையாளங்களை 'குடிநிலை' என்று குறிப்பிடுகின்றனர். இவற்றைக் காக்கும் பொறுப்பை இந்தக் குடிகள் ஏற்றுள்ளன.

இம்மாதிரியான பண்டைய இயற்கைத் தெய்வப் பார்வை தமிழர்களுக்கு உண்டா என்று தேடியபோது எண்ணற்ற செய்திகள் கிடைத்தன. தமிழ் என்பது இயற்கை இயைபு மொழி. தமிழ் தோன்றிய நிலம் அல்லது திணை, வெப்ப மண்டலப் பகுதி என்பதால் இயற்கை இம்மக்களின் வாழ்வுக்கு இணக்கமாக உள்ளதால் இயற்கையையும் தமிழ் மொழியையும் பிரிக்க முடியாது.

'அணங்கு' என்றும் 'சூர்' என்றும் 'சூரர மகளிர்' என்றும் அறியப்படும் இயற்கைத் தெய்வங்கள் பற்றிய ஏராளமான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.

முதலில் 'சூர்' என்பதை இயற்கைத் தெய்வமாகப் பண்டைத் தமிழர் கருதினர்.

தெய்வம் என்பது முதலில் இயற்கையின் நிகழ்வுகளான மழை, இடி முதலியவற்றால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகவே தோன்றிய கருத்தாகும். எனவே இயற்கையை ஒரு தெய்வமாகவே மக்கள் பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

சூர் என்ற சொல் சுள் என்ற வேர்ச்சொல் வழியாகத் தோன்றியது. சுள் என்பதற்குச் சுடுதல் என்று பொருள். சுள்ளை என்றால் செங்கல் முதலியவற்றைச் சுடும் இடம்.

சுள் > சுர் > சுரம்

சுள் > சுர் > சூர் (சொற்பிறப்பியல் பேரகரமுதலி)

இப்படியாக சூர் என்ற சொல் விரிந்து உருவாகியுள்ளது. சுடுதல் என்பதும் வெப்பம் என்பதும் அச்சத்திற்கான அடிப்படையாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

சுடும் கதிரவனின் வெப்பம் பெருந்துயர் தருவதாக உள்ளதாக அகநானூறு குறிப்பிடுகிறது.

தெறு கதிர் உலைஇய வேனில் வெங் காட்டு
(அகம்: 153)

வெப்பமான வெயில் துன்பம் தரும் தகிக்கும் குடிசைகள் பற்றி சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர்
குரம்பை (சிறு: 174)

வெயில் எப்படிக் கொல்லும் என்பதைத் திருக்குறள் விளக்கும்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே'
(குறள்: 77)

துன்பம், அச்சம் தரும் சூர் தெய்வமாக அறியப்பட்டதைக் காணலாம்.

'மிகப் பரந்த மலைப்பகுதியில் உள்ள சுனையில் நீர் பெருகி ஓடுகிறது, பெரிய மலைத் தொடரில் அருவி ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது, காட்டாறு கடுவிரைவாக பாய்ந்து கற்களைச் சிதறிவிட்டு வருகிறது, மூங்கில்களை இழுத்துக்கொண்டு அந்த நீரலைகள் காட்டில் மோதிச் செல்கிறது. இப்படியான இடத்தில் சூர் என்னும் தெய்வத்தை இருக்கும்' என்று நற்றிணை கூறுகிறது,

'சூருடை நனந்தலைச் சுனை நீர் மல்கப்,
பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்,
கல் அலைத்து இழிதரும் கடுவரல்
கான்யாற்று...' (நற்: 7)

‘மலையில் உள்ள சுனை எனப்படும் நீரூற்று கடவுள் தன்மை கொண்டது, அங்கு யாரும் பறிக்கக் கூடாத (தடுக்கப்பட்ட) குவளை மலர் அது இலைகளை உதிர்த்துப் பூத்துள்ளது, காந்தள் இரத்தம் போலச் சிவந்து பொலிவுடன் உள்ளது இவற்றை பாங்குறத் தொடுத்து அணிந்து கொண்டு பெரிய மலைத்தொடரில் அருவியின் இசைக்கு ஏற்ப சூர் மகள் என்ற தெய்வப் பெண் ஆடுகின்றாள்’ என்று மிக நுட்பமாக நற்றிணை இயற்கையைத் தெய்வமாகக் கொள்வதைக் காட்டுகிறது.

கடவுட் கற்சுனை அடை இறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண் பூ உரு கெழக் கட்டிப்,
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன் இயத்து ஆடும்... (நற்: 34)

இங்கு அந்த பொற்புடைக் காட்டில் உள்ள மலர்கள் தெய்வத்திற்கே உரியவை, மக்கள் யாரும் பறிக்கக் கூடாது என்று விளக்குகிறது.

இதே போன்ற கருத்தை கபிலர் நற்றிணைப் பாட்டில் குறிப்பிடுகிறார்.

சூராகிய தெய்வம் இருக்கும் மலைத்தொடரில் தழைகளையும் பறித்தல் கூடாது என்று இப்பாடல் கூறுகிறது,

‘சூருடை அடுக்கத்த கொயற்கு
அருந்தழையே’ (நற்: 359)

நிலையாக உள்ள உயிர்கள் கூட செல்ல முடியாத கடுமையான பொதிகை மலையில் சூர் என்ற தெய்வம் உள்ளது, சந்தனமும் உள்ளது என்று குறுந்தொகை கூறுகிறது.

‘மன் உயிர் அறியாத் துன் அரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம்...’(குறு: 376)

சூர் அமைந்திருக்கும் பெரிய மலையில் உள்ள அருவியில் குளிக்கும் பெண்களைப் பற்றி நற்றிணை குறிப்பிடுகிறது,

‘சூருடைச் சிலம்பின் அருவி ஆடி’ (நற்: 373)

சூர்களுக்கு பலிச் சோறு கொடுக்கும் பழக்கம் இருந்ததைப் பின்வரும் பாடலால் காணலாம்,

கரிய கண்போன்ற அமைப்பைக் கொண்ட கருனைக் கிழங்கும், செந்நெல்லைக் குற்றி எடுத்து வெண்மையான சோறும் சேர்த்து சூர்களுக்குப் படைப்பர்.

‘கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய’ (நற்: 367)

பல ஆப்பிரிக்க, தென்னமரிக்கப் பழங்குடிகளிடம் தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் பழக்கம் இருந்து வருகிறது. தங்களை முன்னோர்களின் ஆவிகளுடன் இணைத்துக் கொள்ளும் ஓர் உளவியல் தன்மையை இதன் மூலம் காணலாம்.

அருவிகள் உள்ள மலைகளில் சூர் இருக்கும் என்று ஐங்குறுநூறு கூறும்.

'இலங்கும் அருவிச்
சூர் மலை...(ஐங்: 249)
சூர் தெய்வம் உள்ள மலைநாடனைப் பற்றி அகநானூறு கூறும்,
'சூர் உறை வெற்பன்...(அகம்: 98)

சூர் என்ற தெய்வம் இருக்கின்ற மலையில் ஒளி பொருந்திய பூக்களைச் சூடிக்கொண்டு விரும்புகின்ற வடிவத்தில் அணங்கு வருமாம்.

'சூர் உடைச் சிலம்பில் சுடர்ப் பூ வேய்ந்து
தாம் வேண்டு உருவின் அணங்குமார்
வருமே' (அகம்: 158)

ஆப்பிரிக்க, வட, நடு ஆசிய நாடுகளிலும் அமெரிக்கத் தொல்குடிகளிடமும் ஆவிகளுடன் உறவாடும் சடங்குகளும் நம்பிக்கைகளும் உண்டு. அந்தத் தெய்வங்களும் விரும்பிய வடிவத்துடன் வரும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இது பழங்குடிகளிடம் பொதுவாகக் காணப்படும் தன்மை. சாமன் சடங்கு முறைகள் இயற்கையுடன் அவர்கள் கொண்டிருக்கும் பிணைப்பு முறையைப் பறை சாற்றுகிறது. தலைமுறை தலைமுறைகளாக தாங்கள் இயற்கையுடன் இழையாகப் பின்னிக் கிடப்பதாக அவர்கள் நம்புகின்றனர். எனவே இயற்கைக்கு எந்தத் தீங்கும் செய்யக் கூடாது என்று கருதுகின்றனர்.

நடுகற்களில் எழுத்துக்களைப் பதிவிட்டு வைக்கும் பழக்கம் அகநானூறு காலத்திலேயே இருந்த செய்தியையும், அந்த நடுகற்கள் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாகவே ஓமை மரங்களில் (யானை ஆப்பிள் என்றும் கூறுவர்) சூர் தெய்வங்கள் தங்கும் என்று குறிப்புகள் நமக்கு வியப்புத் தருகின்றன.

'மருங்குல் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்
பெயர் பயம் படரத் தோன்று குயில் எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது,
அசைவுடன்
ஆறு செல் வம்பலர் விட்டனர் கழியும்
சூர் முதல் இருந்த ஓமையம் புறவின் (அக: 297)

இயற்கையைத் தெய்வமாக நம்பிய சமூகம் பின்னர் நடுகற்களையும், அதில் எழுத்துக்களைப் பொறிக்கும் நிலைக்கு வந்ததையும் இந்தப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

பரந்து விரிந்த கொல்லி மலையில் பெருமழை பொழிந்து தீர்த்தவுடன் சூர் தெய்வம் விருப்பமுடன் வரும். அதாவது செழித்துக் காணப்படும் இயற்கையே தெய்வம் என்ற கருத்து பழந்தமிழர்களிடம் இருந்துள்ளது.

'கார் புகன்றெடுத்த சூர் புகல் நனந்தலை
மா இருங்கொல்லி' (அகம்: 303)

தெய்வம் இருக்கும் இடத்தில் மழை இடியுடன் கொட்டி முழங்கும் என்று கூறப்பட்டுள்ளது,

'சூர் புகல் அடுக்கத்து மழை மாறு முழங்கும்'
(அகம்: 359)

சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்குரைக்க வந்தபோது, அவர் உருவத்தை விளக்கும்போது, சூர் எனும் தெய்வம் உள்ள காட்டில், விருப்பமுடன் காளி இருப்பதாகக் கூறப்படுகிறது

'சூருடைக் கானகம் உகந்த காளி'
(சிலம்பு: வழக்குரை காதை: 10)

சூர் என்ற தெய்வம் சூரர மகளிராகவும் சங்க இலக்கியப் பரப்பில் அடுத்து விவரிக்கப் பட்டுள்ளது.

'மிக உயர்ந்த மலையில், சிவந்த பாதத்தில் கிண்கிணி என்ற கொலுசை அணிந்து கொண்டு வளைந்த இடையினையும் பருத்த தோளையும் கொண்டு, பட்டுப் பூச்சியின் வண்ணத்துடன்கூடிய இயற்கையான நிறத்தைக் கொண்ட ஆடையை உடுத்திக் கொண்டும் பல மணிகளைக் கோர்த்துச் செய்த மேகலையை உடுத்திய சிறுவரிகளையுடைய அல்குலைக் கொண்டும், செயற்கையான எந்த ஒப்பனையையும் செய்யாத பேரழகினைக் கொண்டும், நாவல் பெயருடைய ஒருவகைப் பொன்னால் புனைந்து செய்த அணிகலன்களையும், நெடுந்தொலைவும் தாண்டி விளங்குகிற குற்றம் அற்ற திருவுடலையும் உடையவராய் தோழிமார் ஆய்ந்து முடித்து இரண்டாக வகிர்ந்த நெய் தடவிய பசையுள்ள கூந்தலிலே சிவந்த காம்பையுடைய சிறிய வெட்சிப் பூக்களைச் செருகி, பசுமையான தண்டையுடைய குவளை மலரின் தூய இதழ்களைக் கிள்ளிப் பதித்து, தெய்வ உத்தி என்னும் பெயருடைய தலைக்கோலத்தையும் வலம்புரிச்சங்கு வடிவாய்ச் செய்த நகையையும் உரிய இடத்திலே அணிந்து, பொட்டு வைத்த மணம் வீசுகின்ற அழகிய நெற்றியில் முழுதும் பின்னி முடித்த குற்றம் அற்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பக மலரைச் செருகி, கரிய புற இதழுடன் பூம்பஞ்சினை உடைய விளக்கமான மருதப் பூங்கொத்துக்களைப் பதித்து, கிளையினின்றும் அழகுறத் தோன்றி எழுந்த நீரின் கீழுள்ள செவ்விய அரும்புகளே இணைத்துத் தொடுத்த மாலையினைக் கொண்டையைச்

சுற்றி வளைய வைத்து, துணையாக இரு பக்கமும் வளவிய காதுகளில் நிறையச் செருகிய ஒள்ளிய அசோகந் தளிர்போல் நுண்வேலை மிக்க அணிகலன் பூண்ட மார்பில் அசைந்து கொண்டிருக்க, திண்ணிய வயிரமுடைய நறுமணமுள்ள சந்தனத்தை அரைத்து உண்டாக்கிய பொலிவும் நிறமும் மிக்க குழம்பினை மணம் கமழும் மருதப் பூங்கொத்தினைப் பதித்தாற்போலக் கோங்கின் குவிந்த மொக்கு போன்ற இளமுலைகளில் அப்பி, அதன்மேல் விரிந்த வேங்கை மலரின் நுண்ணிய மகரந்தப் பொடியை அப்பிப் பதித்து, அழகுறத் தோன்றும்படி விளா மரக் குறுந்தளிரைக் கிள்ளி அணிந்து, கோழி உருவங் கொண்டு ஓங்கிப் பறக்கும் வெற்றிக்கொடி வாழ்க என்று வாழ்த்தி, மலைப்பகுதியெல்லாம் எதிரொலிக்கும்படி பாடி, சூரர மகளிர் விளையாடுகின்ற சோலைகள்'

என்று மிக விரிவாகத் திருமுருகாற்றுப்படை முப்பது வரிகளில் சூரர மகளிரை வரைந்து காட்டியுள்ளது.

'மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி
கணைக்கால் வாங்கிய நுசுப்பின்
பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கை புனைந்து இயற்றாக் கவின்பெறு
வனப்பின்
.....
.....
வண் காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்
நுண் பூண் ஆகம் திளைப்ப திண் காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேம் கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண் தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா
கோழி ஓங்கிய வென்று அடு விறற்கொடி
வாழிய பெரிது என்று ஏத்தி பலர் உடன்
சீர்திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை' (திரு:12-41)

இவ்வளவு விளக்கமாக சூரர மகளிரைப் படம் பிடித்துக் கொடுத்துள்ளதைக் கவனிக்கும்போது இயற்கைத் தெய்வத்தைப் பழந்தமிழர் எப்படி உற்றுநோக்கியுள்ளனர் என்று புரிகிறது.

சூரர மகளிரைச் சாட்சி வைத்து தலைவன் கைத்தலம் பற்றிக் கொண்டு உன்னை மணக்கிறேன் என்று சூளுரைத்த செய்திகள் உள்ளன.

'நேர் இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோடு உற்ற சூளே' (குறுந்:53)

தலைவன் சூரர மகள் போல் நீ இருக்கிறாய் என்று புகழ்ந்து பேசி அவளை மணந்த செய்திகளும் உள்ளன. (அகம்:32)

சூர் என்ற இயற்கைத் தெய்வம், பின்னர் 'அணங்கு' என்று அறியப்பட்டது.

பண்டைத் தமிழ் வாழ்வியலை ஆவணப்படுத்திய நூல் தொல்காப்பியம். இதில் பின்வரும் நூற்பா,

'அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே'
(தொல்: மெய்: 252)

என்று விளக்குகிறது. அதாவது அணங்கு, விலங்கு, கள்வர், அரசு ஆகியவை மாறுபாடில்லாத அச்சத்தைத் தரக் கூடியவை என்பது இதன் பொருள்.

காடுறை தெய்வமான அணங்கு அச்சம் தரும் ஒன்றாகவே அறியப்படுகிறது.

அச்சத்தின் காரணமாகத் தோன்றும் துன்பம்

'அணங்கு' என்பதற்கு நெருங்கி பிடித்தல் என்ற பொருள் உள்ளது.

அள்> அண்> அணங்கு என்ற வேர்ச்சொல் அடிப்படையில் தோன்றிய சொல் இதுவாகும்.

விரும்பப்பட்டவரை விரும்பிப் பிடித்துக் கொண்டு துன்பந்தருவது அணங்கு.

'இளைய யானைக் குருளை காட்டில் எப்படி அச்சப்படுத்துமோ அப்படி இவள் என்னை அச்சமூட்டுகிறாள்' என்று குறுந்தொகைப் பாட்டு கூறுகிறது,

'சிறு வெள்ளரவின் அவ்வரிக் குருளை,
கான யானை அணங்கியாஅங்கு,
இளையள், முளை வாள் எயிற்றள்,
வளை உடைக் கையள், எம்
அணங்கியோளே' (குறுந்:119)

பின்வரும் வரிகள் அணங்கு என்பது இயற்கையான கடவுள் என்றே கூறுகிறது.

'அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி'
(பொருந: 20)

இனிய சீரிய ஒலியுடன் கின்னரம் என்ற பறவை பாடும் மலைச்சாரலில் அணங்கு இருக்கும்

'இன் சீர்க்
கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்'
(பெரும்:494)

தெய்வத்தைப் போன்ற பெண்கள் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது

அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்
(மது: 446)

கடலோரப் பகுதியான நெய்தல் நிலத்தில் சுறா மீனின் கொம்பை நட்டு தெய்வத்தை வருத்தி வீட்டுக்கு அழைக்கும் சடங்கு பட்டினப்பாலையில் உள்ளது,

'சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல் அணங்கினால்' (பட்:87)

சூர் என்ற தெய்வக் கருத்து பெரிதும் குறிஞ்சி, முல்லை நிலங்களில் காணப்படும்போது அணங்கு என்ற தெய்வம் நெய்தல், பாலை என்று மற்றத் திணைகளிலும் பரவிக் காணப்படுகிறது.

மார்பகத்தின் மீது தெய்வம் வந்து இருக்க வேண்டும் என்று வேண்டும் செய்தியை நற்றிணையில் காண முடிகிறது,

'சுணங்கு அணி வன முலை அணங்கு கொளத்
திமிரி' (நற்: 9)

பெண்களைப் பீடிக்கும் ஒரு தெய்வமாக அணங்கு இருப்பதையும் காண முடிகிறது, குறிபார்த்து பேய் பிடித்துள்ளதாக அறியும் சடங்கு இங்குக் குறிப்பிடப்படுகிறது,

'அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி,
வெறி என உணர்ந்த உள்ளமொடு மறி
அறுத்து
அன்னை அயரும் முருகு' (நற்: 47)

ஆக, சூர் என்ற தெய்வம், சூரர மகளிர் என்றும், அணங்கு என்றும் முருகு என்றும் வளர்ச்சிநிலை எட்டியுள்ளதைச் சங்க இலக்கியங்கள் வழி காண முடிகிறது.

இயற்கையைத் தெய்வமாகக் காணும் ஒரு மரபு நமக்குத் தரும் செய்தி யாதெனில் உயிர்ப்புள்ள இயற்கையோடு நாம் அனைவரும் இணைந்துள்ளோம். அதைத் தனித்துப் பார்க்க முடியாது என்பதாகும். இயற்கைக்கு நாம் செய்யும் கேடுகள் நம்மைத் திருப்பித் தாக்கும் என்பது அடுத்த செய்தியாகும்.

Hutha
Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765

புதிய வெளியீடுகள்

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639